**நூல் குறிப்பு**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | பிரபல ஃபிரஞ்சுக் கவிதைகள்<br>Prabala French Kavidhaigal |
| மொழி | : | ஃபிரஞ்சு – தமிழ் |
| வெளியீடு | : | 2010 |
| ஆசிரியர் | : | வெ. ராஜகோபாலன் |
| பக்கங்கள் | : | XIV + 152 = 166 |
| அளவு | : | டெம்மி |
| விலை | : | ரூ. 150/– |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| வெளியீட்டார் | : | "கௌசிக்"<br>4/B. கார்த்திக் அடுக்குமாடி குடியிருப்பு<br>100அடி சாலை<br>எல்லைப்பிள்ளைச்சாவடி<br>புதுச்சேரி – 605 005. |
| கணினி அமைப்பு | : | சஞ்சு ஸ்ரீ கிராபிக்ஸ்<br>ஏர்போர்ட் சாலை<br>லாஸ்பேட், புதுச்சேரி |
| அச்சிட்டோர் | : | அன்னை அருள் மறுதோன்றி அச்சகம்<br>80, தியாகராஜா வீதி<br>புதுச்சேரி – 605 001.<br>தொலைபேசி : 0413 – 233624 |


# பிரபல ஃபிரஞ்சுக் கவிதைகள்

**QUELQUES BELLES PAGES**

**DE LA POÉSIE FRANÇAISE**




தமிழாக்கம்: **வெ. ராஜகோபாலன்**, Bacc (Paris)., MA., M.Phil
ஃபிரஞ்சு மொழியில் கவிதைகளை வாசித்து வழங்குபவர்
**திருமதி ஆரத்தி ஆனந்த்** Bacc., MA., M.Phil

முன்னுரை

நோபல் பரிசு பெற்றவர் பதினால்வரைக் கொண்டு வளமிக்கதாய்த் திகழ்வது பிரஞ்சு இலக்கியம். இதில் கவிதைக்கு என்றுமே தனிச்சிறப்பு உண்டு. அவ்விலக்கியத்திலிருந்து, தொடக்ககாலம் தொட்டுத் தற்காலம்வரை, அழியாப்புகழ் பெற்ற 25 கவிஞர்களின் (இவருள் கவிதாயினிகள் இருவர் அடக்கம்) பிரபலமான 50 கவிதைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் ஃபிரஞ்சுமொழி மூலமும், தமிழாக்கமும் எதிர்எதிரே காணும்படி தொகுத்து இச்சிறு பனுவலில் வழங்கப்பட்டுள்ளன. கவிதைகள் கவிஞர் வாழ்ந்த காலத்தை மட்டுமன்றி, என்றென்றும் நிலைத்துநிற்கும் மானுடப் பண்புகளைப் பிரதிபலிப்பனவாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை காதல், சோகம், கடமையுணர்வு, நாட்டுப்பற்று, சுதந்திரதாகம், தெய்வசிந்தனை, குழந்தைக்கவிதை, வரலாற்று நாடகக் கவிதை, வருணனை, கிண்டல், குறியீட்டுக்கவிதை சித்திரக்கவிதை எனப்பல்வேறு பரிமாணங்களில் விரிந்து, நவரசங்களைப் பிலிற்றுவன.

எம்மொழியிலும் கவிதைகள்ரசனையில் சந்தவின்பத்திற்கு ஒரு தனி முக்கியத்துவம் உண்டு. ஃபிரஞ்சுமொழிக்கவிதைகளின் இந்த ஓசையின்பத்தை அன்பர்கள் சுவைக்கும்வண்ணம் செய்ய வேண்டும் என்று விரும்பினோம். இத்துடன் இணைக்கப்பட்ட குறுந்தட்டில் கவிதைகளை ஃபிரஞ்சு மொழியில் தம் இனிய குரலில் பொருட்சுவை குன்றாமல் வாசித்தளித்துச்செவிக்கின்பம் நல்குபவர் திருமதி. ஆரத்தி ஆனந்த்.

தமிழ்வாசகர்கள் இந்நூலினைப் படித்துக்கேட்டு, சுவைத்து, ஃபிரஞ்சுமொழித்தோட்டத்து வண்ணமலர்களின் தண்ணிய நறுமணத்தை நுகர்ந்து இன்புற வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இந்நூலில் குறிப்பிடப்பட்ட கவிஞர்களையும், கவிதைகளையும் பற்றி சிறு குறிப்பு நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அறிந்துகொள்ள விரும்புவோர் ஆசிரியரின் ஃபிரஞ்சு இலக்கிய வரலாறு (I,II,III) என்னும் தொகுப்பில் விபரங்களைக் காணலாம்.

இந்நூல் ஆக்கத்திற்கு எனக்கு வழிகாட்டி ஊக்குவித்த வித்துவான் திரு. கங்காதரன் அவர்களுக்கு என் நன்றிக்கடன் உரியது. இந்நூல் வெளிவருவதற்கு முக்கிய காரணமாக இருக்கும் Alliance Française தலைவர் Dr. V. NALLAM அவர்களுக்கும், புதுதில்லி ஃபிரஞ்சுத்தூதரகக் கலாசாரத் துறையினருக்கும் (Services Culturels Ambassade de France, New Delhi) என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலினை மிகச்சிறப்பாக கணினியில் வடிவமைத்துக் கொடுத்துள்ள Sanju Shree Graphics, Airport Road, Pondicherry நிறுவனத்திற்கும் என் மனமார்ந்த நன்றி.

என் உடன் பிறந்தோர் அனைவருக்கும் இம் முயற்சியைக் காணிக்கையாக்குகிறேன்.

புதுச்சேரி

வெங்கடராமன் ராஜகோபாலன்
20. மூன்றாம் குறுக்குத் தெரு
தாகூர் நகர், புதுச்சேரி - 8.
Tel: (0413) 2250993.
rajagopalan2007@gmail.com

## Préface

J' éprouve grand plaisir à faire la préface de cet ouvrage écrit par mon ami M. Rajagopalan. Fils d'un illustre interprète très connu à l' époque M. Rajagopalan a été un excellent professeur de français très apprécié à la faculté de médecine de JIPMER. Auteur de plusieurs ouvrages, sa traduction des 'Mains Sales' de Sartre en tamoul a connu beaucoup de succès et a été aussi représentée sur la scène. Son étude sur l' histoire de la littérature française en tamoul en 3 volumes est devenu un document de référence chez les lecteurs tamouls. J'espère que tous les ouvrages, de M. Rajagopalan vont susciter l'intérêt des lecteurs tamouls pour mieux comprendre et apprécier la richesse et la beauté de la littérature française.

Comme a dit un critique " la poésie est universelle". Elle touche tous les peuples et toutes les époques, il s'agit donc d'une des plus anciennes formes littéraires. Au moment où ils écrivent, les poètes peuvent faire passer un sentiment qu'ils ressentent comme l'amertume, l'amour, la tristesse ... Ils cherchent à faire passer un message souvent caché de manière implicite ou explicite. lIs utilisent les mots comme un outil puissant et efficace. Les paroles du poète peuvent émouvoir les lecteurs.

A un moment donné, la poésie servait à fustiger les abus politiques et sociaux. La poésie peut chanter aussi l'amour, la passion et les éternelles relations entre les humains. Chacun peut comprendre un poème à sa façon. La poésie a de multiples possibilités de sens.
Chaque poète, en fonction de ses expériences vécues, perçoit ces sentiments différemment et nous fait passer son point de vue sur Ie sujet. La poésie a connu de nombreux changements depuis sa création. Chaque période de l'histoire a son propre courant qui se reflète dans la poésie et qui Ie distingue de celui de la période suivante.

Dans cet ouvrage, la présentation des poèmes suit un ordre chronologique, ce qui permet aux lecteurs de se rendre compte de I' évolution de la poésie. Je tiens à féliciter M.Rajagopalan, déjà connu parmi les lecteurs tamoulophones par ses oeuvres sur la littérature française en tamoul, qui a pris l'initiative de présenter la poésie française en CD ROM.

II a traduit 50 poèmes représentatifs de chaque siècle et il les a présentés comme une vraie création littéraire. Tout en suivant l'ordre chronologique, M.V.Rajagpalan a fait un choix judicieux des poèmes de différents poètes français. On dit que la poésie est intraduisible. Mais M.V. Rajagopalan a montré par son talent linguistique que rien n'est impossible. II a fait voir que la traduction élargit, affine et prolonge notre humanité. Les poèmes traduits peuvent être inc1us aux programmes d'études de Bachelors et Masters en tamoul des universités indiennes. Cela donnerait une rare occasion à ces étudiants de connaître la littérature française.

Une autre initiative de M. V.Rajagopalan c'est de présenter les poèmes traduits avec les orignaux en CD ROM. Mme Aarthi Anand mérite notre appréciation pour sa lecture qui met en valeur l'harmonie, la douceur et la beauté de la langue française. Le CD qui est sorti avec I' ouvrage sera un outil très précieux pour les gens qui aiment les oeuvres littéraires. J'espère que les lecteurs trouveront intérêt et plaisir dans la lecture de ces poèmes qui sont de vraies perles de la guirlande bien ciselée de la poésie française.

Dr. V. NALLAM
Directeur “Clinic Nallam”
Président de l’ Alliance Française de Pondichéry
Chevalier dela Légion d’Honneur

Pondichéry
le 04.06.2009

# அணிந்துரை

ஒரு நாட்டின் மானுடப் பண்புகளுக்கு உறைவிடமாகத் திகழ்வது அதன் இலக்கியமாகும். அவ்விலக்கியத்தின் ஏற்றத்திற்கு அளவுகோல் கவிதை. கவிதையின்பத்தை நுகரச் செய்வதே கல்வியின் பயன். மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இலக்கணப் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ் மொழியில் வள்ளுவனும், கம்பனும், படைத்திட்ட இலக்கியங்கள் கற்கக்கற்கத் தெவிட்டாத தேனமுதாக இன்றும் திகழ்கின்றன. இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் இலக்கிய நுகர்வு மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கிறது. தமிழ்நாட்டில் பலப்பல இடங்களில் கம்பனுக்கும், வள்ளுவனுக்கும், சங்ககாலக் காப்பியங்களுக்கும், விழாக்கள் நடைபெறுகின்றன. இவ்விழாக்களில் மட்டுமன்றித் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் பட்டிமண்டபங்களும், ஆய்வரங்களும் கவியரங்கங்களும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் இலக்கிய ரஸனையை வளர்த்துக்கொண்டு வருகின்றன. இவ்வாறு இலக்கிய ஆர்வம் தூண்டப்பட்ட தமிழ் மக்கள், தம் மொழியில் மட்டுமன்றி மற்ற மொழிகளிலும் உள்ள இலக்கியச் செல்வங்களை அறிந்து கொள்ளவும், அவற்றைத் தம் மொழிஇலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் விரும்புவது இயற்கை. ஆங்கில மொழியில் உள்ள இலக்கியங்கள் ஓரளவுக்குத் தமிழ் நாட்டில் அறிமுகமானவை. ஆனால் இலக்கியத்திற்காக 14 நோபல் பரிசுகளைப் பெற்றிருந்த போதிலும் கூட ஃபிரஞ்சு இலக்கியச் செல்வங்கள் அந்த அளவுக்கு இன்னும் இங்கு அறிமுகம் ஆகவில்லை. காரணம் போதுமான அளவுக்கு அவை தமிழாக்கப்படவில்லை என்பதுதான்.

இப்பெரும் குறையை ஓரளவுக்கு ஈடு செய்யும் வகையில் அமைந்திருக்கிறது பேராசிரியர் திரு. ராஜகோபாலன் அவர்களின் "பிரபல ஃபிரஞ்சுக் கவிதைகள்" எனும் இந்நூல். ஃபிரஞ்சு இலக்கியத்தொடக்ககாலம் தொட்டு (சுமார் 600 வருடங்கள்) தற்காலம்வரை உள்ள மிகப்பெரிய 25 கவிஞர்களின் சிறப்பான 50 கவிதைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தமிழாக்கம் செய்திருப்பது பாராட்டத்தக்கது. குறிப்பாக ஒரு பக்கத்தில் மூலக்கவிதையையும் அதன் எதிர்ப்பக்கத்தில் அக்கவிதையின் தமிழாக்கத்தையும் தந்திருப்பது வரவேற்கத்தக்கது. இரு மொழி அறிந்தோரும், ஃபிரஞ்சு மொழியினைக் கல்லூரிகளில் கற்போரும் மூலத்தையும் மொழியாக்கத்தையும் அவ்வப்போது ஒப்பிட்டுப் பார்க்க வாய்ப்பளிக்கக் கூடியதாக இது அமைந்திருக்கிறது. இந்நூலின் தனிச்சிறப்பு இதிலுள்ள கவிதைகளைக் குறுந்தட்டில் வெளியிட்டிருப்பதாகும். ஃபிரஞ்சுக் கவிதைகளின் ஓசையின் பத்தைக் கேட்டுச் சுவைக்க ஓர் அரிய வாய்ப்பை இது நல்குகிறது. கவிதையைத் தமிழில் பாட்டு என்றே குறிப்பிடுவார்கள். இவை படிக்கப்படுவதைவிட இசைபோலக் கேட்டு இன்புறவேண்டியது என்பதே இதன் பொருளாகும்.

பொதுவாகக் கவிதை மொழியாக்கத்தில் இருவகை இடர்கள் உண்டு. ஒன்று கருத்துத் தெளிவின்மையும் குழப்பமும். மற்றொன்று மொழிபெயர்ப்பு நடை தமிழுக்குரிய இயல்புடன் இல்லாமல் மூல மொழியின் இலக்கண அமைப்பில் தோய்ந்த சிக்கலுடன் இருத்தல் திரு. ராஜகோபாலன் அவர்களுடைய இந்நூலில் இவ்விரு குறைகளும் தவிர்க்கப்பட்டுத்திகழ்வது அவருடைய மொழி பெயர்ப்பு ஆற்றலுக்குச் சான்று. இதற்கு முன்பாக ஃபிரஞ்சு இலக்கிய வரலாற்றை மூன்று தொகுதிகளாகத் தமிழில் வெளியிட்டிருப்பது இந்நூல் ஆக்கத்திற்கு அவருக்கு மிகவும் உறுதுணையாக இருந்திருக்கிறது என்றால் மிகையாகாது.

அவருடைய இம்முயற்சியை என் உளமாறப்பாராட்டுகிறேன். ஃபிரஞ்சு இலக்கியத்தின் பிரபல கவிதைகளைத் தமிழுலகத்திற்கு அறிமுகம் செய்திருக்கும் அவருக்குத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம்.

தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் படித்துப் பயனுற வேண்டிய நூல் இது. அவரது இலக்கியப் பணி தொடர என்னுடைய வாழ்த்துக்கள்.

புதுச்சேரி

புரவலர். ந. கோவிந்தசாமி
"சேவாரத்னா", "தமிழ்மாமணி"
தலைவர் புதுச்சேரி கம்பன் கழகம்.

## TABLE DES MATIÈRES பொருளடக்கம்


| Numèro<br>எண் | Auteur<br>கவிஞர் | Poésie<br>கவிதை | Page<br>பக்கம் |
|---|---|---|---|
| 1 | VILLON | Je meurs de soif | 1 |
| 2 | VILLON | Ballade des pendus | 5 |
| 3 | MAROT | Epître Au Roi | 7 |
| 4 | RONSARD | Sonnet a Hélène | 9 |
| 5 | RONSARD | Contre les bûcherons .... | 11 |
| 6 | DU BELLAY | Les Regrets | 13 |
| 7 | CORNEILLE | Horace (Acte IV Sc 1) | 15 |
| 8 | RACINE | Iphgénie (Acte IV Sc 4) | 17 |
| 9 | RACINE | Andromaque (Acte III Sc 8) | 23 |
| 10 | LA FONTAINE | Les Animaux Malades De La Peste | 27 |
| 11 | LA FONTAINE | Les Grenouilles qui demandent Un Roi | 33 |
| 12 | MOLIÈRE | Le Misanthrope (Acte I Sc 1) | 37 |
| 13 | MOLIÈRE | Les Femmes Savantes (ACte II Sc 7) | 39 |
| 14 | VOLTAIRE | La Bastille | 41 |
| 15 | VOLTAIRE | Le désastre de Lisbonne | 43 |
| 16 | VOLTAIRE | Épigrammes | 47 |
| 17 | ANDRÉ CHÉNIER | Les lambes | 53 |
| 18 | LAMARTINE | Le Lac | 55 |
| 19 | LAMARTINE | Ode sur les révolutions | 61 |
| 20 | LAMARTINE | Isolement | 61 |
| 21 | LAMARTINE | La vigne et la maison | 63 |
| 22 | VIGNY | La mort du loup | 65 |
| **23** | HUGO | Napoléon II | 71 |
| **24** | HUGO | Ultima Verba | 73 |
| 25 | HUGO | Oceano Nox | 77 |
| 26 | HUGO | Mors | 83 |


## TABLE DES MATIÈRES பொருளடக்கம்


| TITRE DE LA TRADUCTION<br>தமிழாக்கத்தலைப்பு | பக்கம் |
|---|---|
| புலவரும் புரவலரும் : நான் தாகத்தால்... | 2 |
| தூக்கில் தொங்கப்போகிறவர்களின்... | 6 |
| மன்னருக்கு மடல் | 8 |
| வித்தியாசமான காதல் கவிதை | 10 |
| ஓ மரம் வெட்டியே | 12 |
| ஏமாற்றம் | 14 |
| பெண்மையின் சீற்றம் | 16 |
| இஃபிழெனி : நரபலி | 18 |
| மறுமணமா? தாய் உள்ளம் | 24 |
| நீதிமன்றம் : கொள்ளை நோய் | 28 |
| மன்னராட்சி கோரிய தவளைகள் | 34 |
| நான் மனித இனத்தையே வெறுக்கிறேன் | 38 |
| அதிமேதாவிப்பெண்டிர் | 40 |
| பஸ்தீய் சிறை | 42 |
| நிலநடுக்கத்தால் பேரழிவு | 44 |
| நையாண்டி மடல்கள் | 48 |
| அஸ்தமனம் | 54 |
| ஏரிக்கரைமேலே | 56 |
| புரட்சிக்கொள்கைகள் | 62 |
| தனிமை | 62 |
| கொடியும் வீடும் | 64 |
| **ஓர் ஓநாயின் இறப்பு** | 66 |
| நப்போலியன் II | 72 |
| சூளுரை | 74 |
| நடுக்கடலில் நள்ளிரவில் | 78 |
| கடிவாளம் (புனரபிஜனனம்) | 84 |

# TABLE DES MATIÈRES பொருளடக்கம்


| Numèro<br>எண் | Auteur<br>கவிஞர் | Poésie<br>கவிதை | Page<br>பக்கம் |
|---|---|---|---|
| 27 | HUGO | Veni Vidi Vixi | 85 |
| 28 | HUGO | La Lune (L'art d'être grand-père) | 87 |
| 29 | HUGO | Sur une barricade | 89 |
| 30 | MUSSET | Tristesse | 93 |
| 31 | MUSSET | Le Pélican | 95 |
| 32 | MARCELINE D.V | Qu'en avez-vous fait? | 99 |
| 33 | MARCELINE .D.V | Les roses de saadi | 103 |
| 34 | NERVAL | Odelette: Le point Noir | 105 |
| 35 | THEOPHILE GAUTHIER | Fumée | 107 |
| 36 | LECONTE DE LISLE | Le rêve du jaguar | 109 |
| 37 | BAUDELAIRE | Chant d'automme | 111 |
| 38 | BAUDELAIRE | Recueillement | 113 |
| 39 | BAUDELAIRE | Le Cygne | 115 |
| 40 | BAUDELAIRE | Les Hiboux | 117 |
| 41 | VERLAINE | Sagesse | 119 |
| 42 | VERLAINE | La lune blanche... | 121 |
| 43 | RIMBAUD | O saisons, ô châteaux | 123 |
| 44 | JULES LAFORGUE | Derniers vers | 125 |
| 45 | FRANCIS JAMMES | Prière pour aller au Paradis | 127 |
| 46 | ANNA DE NOAILLES | Chaleur | 129 |
| 47 | APOLLINAIRE | Sous le pont Mirabeau | 131 |
| 48 | APOLLINAIRE | Trois poemes | 133 |
| 49 | APOLLINAIRE | Calligrammes | 135 |
| 50 | APOLLINAIRE | Le jet d' eau | 137 |

APPENDICE - NOTICE BIOGRAPHIQUE 141


# TABLE DES MATIÈRES பொருளடக்கம்


| TITRE DE LA TRADUCTION<br>தமிழாக்கத்தலைப்பு | பக்கம் |
|---|---|
| நான் வழ்ந்தது போதும் | 86 |
| நிலா | 88 |
| சாலை மறியல் | 90 |
| சோகம் | 94 |
| பெலிகள் பறவை | 96 |
| எங்கே என் இதயம்? | 100 |
| மடி நிறைய ரோஜாமலர் | 104 |
| கறுப்புப் புள்ளி | 106 |
| புகை | 108 |
| சிறுத்தையின் கனவு | 110 |
| கார்கால கீதம் | 112 |
| அமைதி | 114 |
| அன்னப்பறவை | 116 |
| ஆந்தைகள் | 118 |
| ஞானம் | 120 |
| வெள்ளை நிலா | 122 |
| பருவகாலங்களே, கோட்டைகளே | 124 |
| கன்யாஸ்த்ரீ மடம் | 126 |
| கழுதைகள் பின் தொடர......... | 128 |
| இதமான வெப்பம் | 130 |
| மீராபோ பாலம் | 132 |
| மூன்று புதுக்கவிதைகள் | 134 |
| சித்திரக்கவிதைகள் | 136 |
| நீரூற்று | 138 |

அனுபந்தம் : கவிஞர்கள் பற்றிய சிறு குறிப்பு 141



## (1) FRANÇOIS VILLON
## 1431 – 1463
## BALLADE

Je meurs de soif auprès de la fontaine,
Chaud comme feu, et tremble dent à dent ;
En mon pays suis en terre lointaine ;
Lez un brasier frissonne tout ardent ;
Nu comme un ver, vêtu en président,
Je ris en pleurs et attends sans espoir ;
Confort reprends en triste désespoir ;
Je m'éjouis et n'ai plaisir aucun ;
Puissant je suis sans force et sans pouvoir,
Bien accueilli, repoussé de chacun.

Rien ne m'est sûr que la chose incertaine ;
Obscur, sauf ce qui est tout évident ;
Doute ne fais, hormis en chose certaine ;
Science tiens à soudain accident ;
Je gagne tout et demeure perdant ;

. . . .



## (1) (விய்யோ 1431 - 1463)
## புலவரும் புரவலரும்...

*"நீரூற்று அருகில் இருக்கும் போது தாகத்தால் சாவதுண்டோ? புரவலர் நீங்கள் இருக்கும்போது நான் வறுமையில் வாடுவதோ" எனச் சொல்லாமல் சொல்லி இறுதி வரிகளில் சுருக்கமாய்ப் பொருளுதவி கோரும் கவிஞர் விய்யோனின் இப்பாடல் நயமிக்கது.*

நான் தாகத்தால் செத்துக் கொண்டிருக்கின்றேன்
        ஒரு நீரூற்றின் அருகில்!
சொந்த நாட்டிற்குள்ளேயே நான்
        அந்நியனாய்த் திரிகின்றேன்!
கொழுந்து விடும் செந்தழல்முன்
        எனக்குக் குளிரின் வெட வெடப்பு!
புழுவினைப் போல் அம்மணம்
        காலோடு தலை உடைகள் பல!
அழுதுகொண்டே சிரிக்கின்றேன்
        நம்பிக்கையின்றி எதற்கோ காத்திருக்கின்றேன்!
ஆறுதல் காண்கின்றேன்
        சோகமிகு சூழ்நிலையில்!
களிப்பில் திளைக்கின்றேன்
        இன்பந்தருவது எதுவுமின்றி!
வலிமைமிக்கவன் நான்
        பலம் இன்றித் துவள்கின்றேன்!
எங்கெங்கும் எனக்கு வரவேற்பு
        அனைவராலும் விரட்டப்படுகிறேன்!
குழப்பமானவை தவிர
        வேறு எதுவுமே தெளிவாக இல்லை!
தெளிவாக இருப்பவற்றில்
        ஒன்றுமே புரியவில்லை!
நிச்சயமான விஷயங்களிலன்றி
        வேறு எதிலுமே சந்தேகமில்லை!
தற்செயலாக நடந்ததையே
        அறிவியல் பூர்வமான தென்று கருதுகிறேன்!
பூரண வெற்றியின் இடையே
        அனைத்தையும் இழந்து நிற்கின்றேன்

. . .

Au point du jour je dis : « Dieu vous donne bon soir ! » ;
Gisant envers, j'ai grande peur de choir ;
J'ai bien de quoi et je n'en ai pas un ;
Héritage attends et d'homme ne suis hoir,
Bien accueilli, repoussé de chacun.
De rien n'ai soin, et mets toute ma peine
D'acquérir biens, et n'y suis prétendant ;
Qui mieux me dit, c'est celui qui plus m'ataine,
Et qui plus vrai, lors plus me va bourdant,
Mon ami est qui me fait entendant
D'un cygne blanc que c'est un corbeau noir,
Et qui me nuit, crois qu'il m'aide à pourvoir ;
Bourde, vérité aujourd'hui m'est tout un ;
Je retiens tout, rien ne sais concevoir,
Bien accueilli, repoussé de chacun.

Prince clément, or vous plaise savoir
Que j'entends moult et n'ai sens ni savoir :
Partial suis, à toutes lois commun.
Que sais-je plus? Quoi? Les gages ravoir,
Bien accueilli, repoussé par chacun.

* * *



பூபாளம் பாடவேண்டிய நேரத்தில்
        நீலாம்பரி பாடுகின்றேன்!
மல்லாந்து படுத்துக் கொண்டே
        விழுந்து விடுவோமோ என்று அஞ்சுகின்றேன்!
செல்வம் எனக்கிருந்தும்
        ஒன்றுமில்லாது தவிக்கின்றேன்!
யாருக்கும் நான் வாரிசு இல்லை
        சொத்து கிடைக்காதா என்று ஏங்குகிறேன்!
எங்கெங்கும் எனக்கு வரவேற்பு
        அனைவராலும் விரட்டப்படுகிறேன்!
எதிலும் எனக்கு அக்கறை யில்லை
        ஓயாமல் உழைக்கின்றேன்!
செல்வத்தைச் சேர்க்க எண்ணம்,
        ஆயினும் அதில் நாட்டமில்லை
என்னிடம் உண்மை பேசுபவர்தாம்
        என்னை அதிகம் ஏமாற்றுபவர்!
வெள்ளைநிற அன்னத்தைக் காட்டி
        இதுதான் அண்டங்காக்கை எனக்கூறுபவர்தாம்
எனக்கு ஆப்த நண்பர்கள்!
        தீங்கெனக்கு இழைப்பவர்தாம்
தம்மால் இயன்றவரை உதவுவதகச் சொல்கின்றார்!
        பொய்மை உண்மை இரண்டுமே எனக்கு ஒன்றுதான்!
எனக்குப் புரியாத தொன்று மில்லை
        ஒன்றுமே புரியவில்லை!
எங்கெங்கும் எனக்கு வரவேற்பு
        அனைவராலும் விரட்டப்படுகின்றேன்.
கருணை மனங்கொண்ட மன்னவனே! எனக்குக்
        கல்வியோ அறிவோ ஆய்ந்துணர்கின்ற பண்போ
சிறிதும் இல்லைதான் என்பதை ஒப்புக் கொள்கின்றேன்.
        பொதுச்சட்டத்துக்கு உட்பட்டவன்தான் நான்
ஆயினும் விதிவிலக்கு கோருகின்றேன்!
        நான் கூற வேறு என்ன இருக்கிறது
முன்பெனக்கு அளித்திட்ட மானியச் சலுகைகளை
        மீண்டும் தாருங்கள் எனக்கெஞ்சிக் கேட்பதன்றி ?
ஆம் எங்கெங்கும் எனக்கு வரவேற்பு
        அனைவராலும் விரட்டப்படுகின்றேன்.

* * *

## ② FRANÇOIS VILLON - 2
## (1431 – 1463)
## BALLADE DES PENDUS

Frères humains qui après nous vivez,
N'ayez les coeurs contre nous endurcis,
Car, si pitié de nous pauvres avez,
Dieu en aura plus tôt de vous merci.
Vous nous voyez ci attachés cinq, six :
Quant à la chair, que trop avons nourrie,
Elle est piéça dévorée et pourrie,
Et nous, les os, devenons cendre et poudre.
De notre mal personne ne se rie,
Mais priez Dieu que tous nous veuille absoudre !

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

La pluie nous a débués et lavés,
Et le soleil desséchés et noircis ;
Pies, corbeaux nous ont les yeux cavés,
Et arraché la barbe et les sourcils.
Jamais nul temps nous ne sommes assis ;
Puis çà puis là, comme le vent varie,
A son plaisir sans cesser nous charrie,
Plus becquetés d'oiseaux que dés à coudre.
Ne soyez donc de notre confrérie,
Mais priez Dieu que tous nous veuille absoudre !

* * *





## ② விய்யோ - 2 (1431 - 1463)
## தூக்கில் தொங்கப்
## போகிறவர்களின் இறைஞ்சல்

எங்களுக்குப் பின்னும் இப்பூவுலகில் வாழப்போகின்ற
மானிட சகோதரர்களே! எங்கள் நிலை கண்டும்
உங்கள் நெஞ்சைக் கல்லாக்கிக் கொள்ளாதீர்.
திக்கற்றோர் எங்களிடம் நீங்கள் அனுதாபம் காட்டினால்
உங்களுக்கு ஆண்டவன் விரைவில் கருணை செய்வான்
ஐந்தாறுபேர் நாங்கள் மரத்துடன் கட்டுண்டிருப்பதைக் காண்கிறீர்கள்
நாங்கள் உண்டு கொழுத்து வளர்த்த எங்கள் சதை
விரைவில் அழுகிச் சொட்டப்போகிறது
எங்கள் எலும்புகள் தூளாகிப் பொடியாகப்போகின்றன
எங்கள் துன்பங்கண்டு யாரும் எள்ளி நகையாடாதீர்
பதிலாக, எங்களை மன்னித்தருளுமாறு இறைவனிடம் வேண்டுங்கள்

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

எங்கள் உடல்கள் மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து
கறுத்த சருகாய்த் தொங்கப்போகின்றன
காக்கைகள் கழுகுகள் எங்கள் கண்களைக் குடைந்து
புருவங்களையும் மயிர்க்கால்களையும் கொத்திக் குதறப்போகின்றன
எங்கள் உடல்கள் காற்று வீசும் பக்கமெல்லாம்
ஓயாமல் ஊஞ்சலாடப் போகின்றன,
பறவைகள் மூக்கால் குத்தி சல்லடையாய்த்துளைக்கும் வரை!
எங்கள் நிலை உங்கள் யாருக்கும் வேண்டாம்
எங்களை மன்னித்தருளுமாறு இறைவனை வேண்டுங்கள்.

* * *

*விய்யோ தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு, சிறையில் இருந்தபோது எழுதப்பட்ட கவிதை இது. கடைசி நேரத்தில் இவர் கருணை மனு ஏற்கப்பட்டு, மரணதண்டனையிலிருந்து விடுதலை பெற்று நாடு கடத்தப்பட்டார்*



## ③ CLEMENT MAROT (1496 – 1544)
## EPÎTRE AU ROI

J’avais un jour un valet de Gascogne,
Gourmand, ivrogne, et assuré menteur,
Pipeur, larron, jureur, blasphémateur,
Sentant la hart de cent pas à la ronde,
Au demeurant, le meilleur fils du monde...

Ce vénérable hillot fut averti
De quelque argent que m’aviez départi,
Et que ma bourse avait grosse apostume;
Si se leva plus tôt que de coutume,
Et me va prendre en tapinois icelle;
Puis la vous mit très bien sous son aisselle,
Argent et tout, cela se doit entendre,
Et ne crois point que ce fût pour la rendre,
Car onques puis n’en ai ouï parler.
............................................................

Finablement, de ma chambre il s’en va
Droit à l’ étable, où deux chevaux trouva;
Laisse le pire, et sur le meilleur monte,
Pique et s’en va. Pour abréger le conte,
Soyez certain qu’au sortir dudit lieu
N’oublia rien, fors à me dire adieu.......

* * *



## ③ க்ளேமா மரோ (1496 – 1544)
## மன்னருக்கு மடல் (கொள்ளையடிக்கப்பட்டது பற்றி)

கஸ்கோஞ் மாவட்டத்திலிருந்து வந்த ஒருவன் முன்பு
என்னிடம் பணியாளாக வேலை செய்து கொண்டிருந்தான்
சாப்பாட்டுராமன், குடிகாரன், பச்சைப்புளுகன்
ஏமாற்றுப்பேர்வழி, திருடன், பொய்சத்தியம் செய்பவன்
தடிப்பாகப் பேசுபவன், காத தூரத்தில் வரும்போதே
அவனிடம் பிண நாற்றம் அடிக்கும்.
மற்றபடி ரொம்பத்தங்கமானவன்......

நீங்கள் எனக்களித்த வெகுமதியால்
என் பணப்பெட்டி முழுவதும் நிரம்பியிருக்கிறது
என்பது இந்தப்புண்ணியவானுக்குத் தெரிந்துவிட்டது
அவ்வளவுதான், வழக்கத்தைவிட வெகுமுன்பாகவே எழுந்தான்
என்னுடைய மேற்படி பணப்பெட்டியை
யாருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டான்
அது போதாதென்று அத்துடன் மற்ற எல்லாவற்றையும் கூடத்தான்
பின்னால் இவற்றை என்னிடம் திருப்பிக்கொடுக்கும்
எண்ணம் இருக்கும் என்று நினைக்கஇடமில்லை
காரணம் போனவன் போனவன்தான், அதன்பின்
அவனைப்பற்றி ஒன்றுமே தகவல் இல்லை.
..............................................................................

எல்லாம் முடிந்தபிறகு அவன் என் அறையிலிருந்து
நேராக குதிரை லாயத்திற்குச் சென்றான்.
அங்கு இருந்த இரண்டு குதிரைகளில்
மோசமானதை விட்டுவிட்டு, மிகநல்ல குதிரையில் ஏறி
அதைக் கிளப்பிக் கொண்டு விட்டான் சவாரி.
கதையை வளர்த்து வானேன்
அவன் இங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்போது
எது ஒன்றையும் மறக்கவில்லை
போய் வருகிறேன் என்று என்னிடம் சொல்லிக் கொள்வதைத் தவிர......

* * *

## ④ RONSARD
## (1524 – 1585)
## SONNET A HÉLÈNE

Quand vous serez bien vieille, au soir à la chandelle,
Assise auprès du feu, dévidant et filant,
Direz, chantant mes vers, en vous émerveillant :
Ronsard me célébrait du temps que j’étais belle.

Lors vous n’aurez servante oyant telle nouvelle,
Déjà sous le labeur à demi sommeillant,
Qui au bruit de Ronsard ne s’aille réveillant,
Bénissant votre nom de louange immortelle.

Je serai sous la terre et, fantôme sans os,
Par les ombres myrteux je prendrai mon repos.
Vous serez au foyer une vieille accroupie,

Regrettant mon amour et votre fier dédain.
Vivez, si m’en croyez, n’attendez à demain :
Cueillez dès aujourd’hui les roses de la vie.

* * *





## ④ ரோசார் (1524 - 1585)
## ஒரு வித்தியாசமான
## காதல்கவிதை

“ஓர் நாள், மூப்பின் முதிர்ச்சியில்
மங்கிய விளக்கொளியில்,
கணப்பு நெருப்பருகே அமர்ந்து குளிர்காய்ந்து நீ
இராட்டையைச் சுழற்றிக்கொண்டு இருக்கும் வேளையிலே,
நான் பாடிய கவிதைவரிகளை
இசைத்துக்கொண்டே வியப்புடன் கூறுவாய்
”என் இளமையின் அழகினை
எப்படி வர்ணித்திருக்கிறார் ரோசார்” என்று!’

உழைத்துக் களைத்து
அரைத்தூக்கத்தில் இருக்கும் உன் வேலைக்காரி
ரோசார் என்ற பெயர்கேட்டுத் திடுக்கிட்டு விழித்தெழுந்து
வியப்பாள்- எப்படி என் கவிதை வரிகள்
உனக்கு அமரத்துவம் அளித்திருக்கின்றன வென்று.!“

“பூமிக்கு அடியில் நான் எலும்பற்ற ஆவியாய்
சொர்க்கத்தின் நிழலில்
இளைப்பாறிக்கொண்டிருக்கும் அவ்வேளையிலே,
நீ கூனிக் குறுகிய கிழவியாய், வீட்டினுள் முடங்கி,

என் காதலையும், கர்வத்துடன் நீ என்னைப் புறக்கணித்ததையும்
எண்ணி வருந்துவாய்.“
“நான் சொல்வதைக் கேள்
இத்தருணமே வாழ்ந்திடு நாளை எப்படியோ?
வாழ்வின் ரோஜா மலர்களை இன்றே கொய்திடு.“

* * *

*பின்குறிப்பு: இக்கவிதை எழுதப்பட்டபோது கவிஞருக்கு 60 வயது. கவிதையின் நாயகி எலேன் என்ற பெண்ணுக்கு வயது 20.*

## (5) RONSARD – 2
## CONTRE LES BÛCHERONS DE LA FORÊT DE GASTINE

Ècoute, bûcheron, arrête un peu le bras!
Ce ne sont pas des bois que tu jettes à bas;
Ne vois-tu pas le sang, lequel dègoutte à force,
Des nymphes qui vivaient dessous la dure écorce?
Sacrilège meurtrier, si on pend un voleur
Pour piller un butin de bien peu de valeur,
Combien de feux, de fers, de morts, et de détresses,
Mérites-tu, méchant, pour tuer nos déesses
................

Adieu, vieille forêt, adieu, têtes sacrées,
De tableaux et de fleurs autrefois honorées,
Maintenant le dédain des passants altérés,
Qui, brûlés en l’été des rayons éthérés,
Sans plus trouver le frais de tes douces verdures,
Accusent tes meurtriers et leurs disent injures.....

* * *





## (5) ரோசார் - 2

### கஸ்தீன் காட்டில் மரங்களை வெட்டிச்சாய்ப்பவர்களுக்கு எதிர்ப்பு

ஓ மரம் வெட்டியே சற்றே நிறுத்து – நான் சொல்வதைகேள்
நீ வெட்டி வீழ்த்துவது மரங்களை என்றா நினைக்கிறாய்?
சொர சொரப்பான பட்டைக்கு அடியில் வாழும்
புனித தேவதைகளின் இரத்தம்
பீரிட்டுப் பாய்வது உன் கண்களுக்குத் தெரியவில்லை.?
கொலைகாரப் பாவி!
சாதாரணப் பொருள்களைத் திருடுபவர்களுக்கே
தூக்கு தண்டனை அளிக்கப்படுகிறதே
நம் தெய்வங்களையே கொல்லும் கொடியவன் உனக்கு
பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சுடும் சித்திரவதைகளும்
எத்தனை மரண தண்டனைகளும் தகும்
......................
பழம் பெரும் கானகமே, ஓவியங்களாலும் மலர்களாலும்
முன்பொருநாள் அலங்கரிக்கப்பட்ட புனித முகங்களே!
இப்போது வழிப்போக்கரின் அலட்சியத்துக்கு ஆளானவர்களே!
சென்றுவாருங்கள்.
தகிக்கும் கோடை வெய்யிலில்
பொசுங்கிய வழிப்போக்கர்கள்
பசுமைமிகு இலைகள் தரும் நிழலின் குளிர்ச்சியினைக்
காணாமல் தவிக்கும்போது
உங்களை வீழ்த்தியவர்களைக் குற்றம் சாட்டி
வசைபாடித் தீர்த்திடுவர்.

* * *

## (6) JOACHIM DU BELLAY
## (1522 – 1560)
## LES REGRETS

Je me ferai savant en la philosophie,
En la mathématique et médecine aussi :
Je me ferai légiste et, d’un plus haut souci,
Apprendrai les secrets de la théologie :

Du luth et du pinceau j’ébatterai ma vie,
De l’escrime et du bal. Je discourais ainsi
Quand je changeai la France au séjour d’Italie.

O beaux discours humains ! Je suis venu si loin
Pour m’enrichir d’ennui, de vieillesse et de soin
Et perdre en voyageant le meilleur de mon âge.

Ainsi le marinier souvent pour tout trésor
Rapporte des harengs en lieu de lingots d’or,
Ayant fait, comme moi, un malheureux voyage.

* * *

Je n’écris point d’amour, n’étant point amoureux,
Je n’écris de beauté, n’ayant belle maîtresse,
Je n’écris de douceur, n’éprouvant que rudesse,
Je n’écris de plaisir, me trouvant douloureux :

* * *





## (6) துபெல்லே (1522 - 1560)
## ஏமாற்றம்தானா என் வாழ்விலே ?

*நோயினால் ஒடுக்கப்பட்டு துன்பத்தையே அனுபவித்த துபெல்லே தாய்நாடு விட்டு இத்தாலி வந்தார். ஆனால் அங்கும் அவர் கண்டது ஏமாற்றம்தான். அதை வெளியிடும் கசப்பான கவிதை வரிகள் இவை:*

“நான் ஒரு தத்துவமேதையாகப் போகிறேன்.
கணிதத்தில் புலி, மருத்துவத்தில் பேரறிஞர்,
சட்ட விற்பன்னர், இன்னும் உயர்ந்த விஷயமாகிய
மதம் பற்றிய நுண்ணறிவில் மகான்

ஓவியம், இயல் இசை நாட்டியம், வாள்வீச்சு
எல்லாவற்றிலும் நிகரற்றுத் திகழ்ந்திடுவேன்
என்றெல்லாம் கனாக் கண்டேன்,
என் தாய்நாடு விட்டு இத்தாலி நாடு வந்தபோது.

பகட்டான பகற்கனவுகள்! இவ்வளவு தூரம் வந்து
அலுப்பும், முதுமையும் கவலையுமே நான் சம்பாதித்த சொத்து!
என் வாழ்க்கையின் மிகச் சிறந்த நாள்கள் பல
யாத்திரையிலேயே கழிந்ததுதான் மிச்சம்.

தங்கத்தைப் பாறைகளாய் வாரிவரும் நோக்கத்தில்
நெடுந்தூரம் கடற்பயணம் மேற்கொண்ட ஆர்வலர்கள்
சிறிய மீன்கள் சிலவற்றைக்கொண்டு
திரும்பும் சோகக்கதையானது என் சொந்தப் பயணமும்.

* * *

நான் காதலைப் பாடவில்லை,
யாரையும் காதலிக்காத காரணத்தால்;
நான் அழகைப் பாடவில்லை,
அழகியான ஒரு காதலி யின்மையால்;
நான் மென்மையைப் பாடவில்லை,
திண்மையையே அனுபவிப்பதால்;
நான் இன்பத்தைப் பாடவில்லை,
துன்பத்திலேயே உழன்று கொண்டிருப்பதால்.

* * *

## (7) PIERRE CORNEILLE (1606 – 1684)
## HORACE – ACTE IV SC 1
## IMPRECATIONS DE CAMILLE

Rome, l'unique objet de mon ressentiment!
Rome, à qui vient ton bras d'immoler mon amant!
Rome qui t'a vu naître, et que ton coeur adore!
Rome enfin que je hais parce qu'elle t'honore!
Puissent tous ses voisins ensemble conjurés
Saper ses fondements encor mal assurés!
Et si ce n'est assez de toute l'Italie,
Que l'Orient contre elle à l'Occident s'allie!
Que cent peuples unis des bouts de l'univers
Passent pour la détruire et les monts et les mers!
Qu'elle-même sur soi renverse ses murailles,
Et de ses propres mains déchire ses entrailles!
Que le courroux du ciel, allumé par mes voeux,
Fasse pleuvoir sur elle un déluge de feux!
Puissé-je de mes yeux y voir tomber ce foudre,
Voir ses maisons en cendre et tes lauriers en poudre,
Voir le dernier Romain à son dernier soupir,
Moi seule en être cause, et mourir de plaisir!

* * *

*ஃபிரஞ்சு செவ்வியல் இலக்கியத்தல் கொர்னேய், ரசின் ஆகியோர் இயற்றிய வரலாற்றுக் கவிதை நாடகங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. Shakespearக்கு இணையாகப் பேசப்படும் இவர்களுடைய நாடகத்திலிருந்து சிலபகுதிகள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.*

*ரோமாபுரிக்கும், அயல்நாடான ஆல்ப் நாட்டுக்குமிடையே போர். மனித அழிவைத்தவிற்க இருபுறமும் மூன்று வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் போர் புரிவதென்றும், எஞ்சியிருக்கும் வீரரின் நாட்டிற்கு மற்றது அடிமை என்றும் உடன்பாடு. இதில் ரோம் நாட்டுக்குத் தன் வீரத்தால் வெற்றி தேடித்தந்தவன் Horace என்பவன். அவன் கொன்ற ஆல்ப் வீரர்களில் ஒருவனை அவனுடைய சகோதரி கமீய் காதலிக்கிறாள். தன் காதலன் கொல்லப்பட்ட செய்திகேட்டுத்துடித்துச்சினந்து சீறுகிறாள் கமீய் தன் சகோதரனிடம்:*



## (7) **கொர்னேய்** (1606 - 1684)
## பெண்மையின் சீற்றம்

*(கமீய் தன் சகோதரனிடம்):*

உன் ரோமாபுரிதான் இன்று என் சீற்றத்தின் ஒரே இலக்கு!
எந்த ரோமாபுரிக்காக என் காதலனின் உயிரைப் பலிவாங்கினாயோ,
எந்த ரோமாபுரியைப் பிறந்த நாடாக உன் இதயத்தில்
ஏற்றிவைத்துப் போற்றுகிறாயோ,
அந்த ரோமாபுரியை நான் வெறுக்கிறேன்! - சபிக்கிறேன்! ஆம்
உன்னைப் புகழ்ந்து கௌரவிக்கிறது என்ற ஒரே காரணத்துக்காக/
சுற்றியுள்ள நாடுகள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து
நிலைபெறாது நிற்கும் இதன் அஸ்திவாரத்தை அடியோடு சாய்க்கட்டும்!
இத்தாலியின் முழுவலிமையும் ஒருகால் போதவில்லையெனில்
கிழக்கிலும் மேற்கிலும் பரந்த இவ்வுலக நாடடெல்லாம்
ஒன்றாய்க் கூடித் திரண்டு உடனே இங்கு வரட்டும்!
இடைப்பட்ட கடல்களையும் மலைகளையும் கடந்து வந்து
இதை அழித்துத் தகர்த்துத் தவிடுபொடி ஆக்கட்டும்!
ரோமின் அரண்மதில்கள் இடிந்து சரியட்டும்!
தன் கைகளாலேயே இந்நாடு தன் குடலைப் பிடுங்கிக்
குதறிக் கொள்ளட்டும்!
என் சாபத்தின் வெம்மை விண்ணவரின் கோபத்தைக்கிளறி
தீப்பிரளயத்தை இதன்மேல் பொழிந்திடச் செய்யட்டும்
பெரிய இடியொன்று இங்கு விழுகின்ற காட்சியினைக்
காண்பதே என் கண்களுக்கு இனிய விருந்தாகும்!
இதன் வீடுகள் இடிந்து சாம்பலாகி அழியட்டும்!
அந்த இடிபாடுகளில் புதைந்து உன் புகழும் மண்ணாகட்டும்!
இந்நகரின் கடைசி மனிதனின் கடைசிமூச்சுப்
பிரிவதை என் கண்குளிர நான் காணவேண்டும்!
அதற்கு நான் மட்டுமே காரணம் என்கின்ற
பூரிப்போடு நானும் மாள வேண்டும்!

* * *



## (8) JEAN RACINE (1639-1699)
## IPHIGÉNIE
## Acte IV Sc. 4

Mon père
Cessez de vous troubler, vous n'êtes point trahi.
Quand vous commanderez, vous serez obéi.
Ma vie est votre bien. Vous voulez le reprendre :
Vos ordres sans détour pouvaient se faire entendre.
D'un oeil aussi content, d'un coeur aussi soumis
Que j'acceptais l'époux que vous m'aviez promis,
Je saurai, s'il le faut, victime obéissante,
Tendre au fer de Calchas une tête innocente,
Et respectant le coup par vous-même ordonné,
Vous rendre tout le sang que vous m'avez donné.

. . .





## (8) ரசீன் (1639 - 1699)
## நரபலி : இஃபிஜெனி

*இந்நாடகக்கதை இலியட்டிலிருந்து எடுக்கப்பட்டது ட்ராய் நகரைப் பிடித்து ஹெலனை மீட்பதற்காக கிரேக்கப்படைகள் எல்லாம் கடற்கரையில் கூடி இருக்கின்றன. ஆனால் கப்பல்கள் எதுவும் புறப்பட இயலவில்லை. காரணம், கடற்காற்று பாய்மரக்கப்பல்களுக்கு ஏற்றதாக இல்லை. வாயுதேவனை எவ்வாறு மகிழ்விப்பது என்பது பற்றி பூசாரிமூலம் குறிகேட்கப்படுகிறது. இஃபிஜெனி என்ற பெண்ணைப் பலி கொடுத்தால்தான் கடவுளர் மகிழ்ந்து அனுகூலமான காற்றை எழுப்புவர் என்று குறி சொல்கிறான் பூசாரி. இஃபிஜெனி என்பது அங்குக் குழுமியிருக்கும் படைகளுக்குத் தளபதியாய் இருக்கும் அகாமெம்னோனின்* **(Agamemnon)** *பெண். அவள் ஊரில் இருக்கிறாள். இஃபிஜெனியை அழைத்துவர ஆட்கள் அனுப்பப்படுகிறார்கள். இக்கட்டத்தில்தான் நாடகக்கதை தொடங்குகிறது. பெற்ற பாசத்தால் கலங்கி, தளபதி அகாமெம்னோ இரகசியமாகத் தன் மனைவிக்கும் மகளுக்கும் வேறு தூதுவர்களை அனுப்பிப் புறப்பட்டு வரவேண்டாம் என்று தகவல் அனுப்புகிறான். ஆனால் இச்செய்தி அவர்களை அடையும் முன்னரே அவர்கள் கிளம்பிவிடுகிறார்கள். இஃபிஜெனியின் காதலன் சிற்றரசன் அஷில்* **(Achille).** *அவனும் அப்படையில் உள்ளான். அவர்களுடைய திருமணத்தை முடிப்பதற்காகத்தான் அகாமெம்னோ தம்மை வரச்சொல்கிறார் என்று நினைத்துக்கொண்டு தாயும் மகளும் வருகிறார்கள். ஆனால், இங்கு வந்தபின், இஃபிஜெனி பலியாகப் போகிற செய்தி புலப்படுகிறது. இருவரும் திடுக்கிடுகிறார்கள். துக்கத்தின் எல்லைக்கே தள்ளப்படும் இஃபிஜெனி தன் தந்தையிடம் சென்று முறையிடும் காட்சி நெஞ்சைப் பிளக்கக் கூடியது. இதன் தமிழாக்கம் கீழே தரப்படுகிறது.*

அப்பா!
கவலை வேண்டாம்!
யாரும் உங்களுக்குத் துரோகம் இழைக்கவில்லை.
உங்கள் கட்டளை நிறைவேற்றப்பட்டுவிடும்.
என் உயிர் எனக்கு நீங்கள் தந்தது.
நீங்களே அதைத் திருப்பிக் கேட்க விரும்பினால்
சுற்றி வளைத்துச் சொல்ல அவசியம் ஏதுமில்லை.
"இவரே உனக்கு மணாளன்" என நீங்கள் உரைத்தபோது
தயக்கம் ஏதுமின்றி முழுமனத்துடன் ஏற்றேனே/
அவ்வாறே இப்போதும் இணக்கமுடன் கீழ்ப்படிவேன்/
தேவையெனில் பூசாரியின் கைக்கொடுவாளுக்கு
பாவமொன்றும் அறியா என் தலையைப் பலியாக நீட்டிடுவேன்/
உங்கள் கட்டளைக்கு உடனே கீழ்ப்படிந்து
நீங்கள் எனக்களித்த இவ்வுடலில் ஓடுகின்ற
இரத்தத்தை உங்களுக்கே திருப்பித் தந்திடுவேன்/

. . .

Si pourtant ce respect, si cette obéissance
Paraît digne à vos yeux d'une autre récompense,
Si d'une mère en pleurs vous plaignez les ennuis,
J'ose vous dire qu'en l'ètat où je suis
Peut-être assez d'honneurs environnaient ma vie
Pour ne pas souhaiter qu'elle me fût ravie,
Ni qu'en me l'arrachant un sévère destin
Si près de ma naissance en eût marqué la fin.
Fille d'Agamemnon, c'est moi qui la première,
Seigneur, vous appelai de ce doux nom de père ;
C'est moi qui si longtemps le plaisir de vos yeux,
Vous ai fait de ce nom remercier les Dieux,
Et pour qui, tant de fois prodiguant vos caresses,
Vous n'avez point du sang dédaigné les faiblesses.
Hélas! avec plaisir je me faisais conter
Tous les noms des pays que vous allez dompter;
Et déjà, d'Ilion présageant la conquête,
D'un triomphe si beau je préparais la fête.
Je ne m'attendais pas que, pour le commencer,
Mon sang fût le premier que vous dussiez verser.
Non que la peur du coup dont je suis menacée
Me fasse rappeler votre bonté passée :
Ne craignez rien; mon coeur, de votre honneur jaloux,
Ne fera point rougir un père tel que vous;

. . .



ஆனாலும் உங்களுக்கு நான்தரும் மரியாதைக்கும்
நீங்கள் விரும்புவதை நான்ஏற்கும் பணிவிற்கும்
வேறேதேனும் பரிசாக அளிக்க நீங்கள் விரும்பினால்,
கண்கலங்கி நிற்கும் என் தாய்க்குச் சமாதானம்
என்ன கூறுவது என நீங்கள் அஞ்சினால்,
தயக்கமின்றி நான் உரைப்பேன் நேற்றுவரை என்வாழ்க்கை
அளவற்ற பேறுகளால் நிறைவுற்றே இருந்ததென.
இவை நிலைத்திருக்க வேண்டுமே என்றுதான் அஞ்சினேன்
பாழும் விதி இளமை மலருமுன்னே என் வாழ்விற்கு
ஒரு முற்றுப்புள்ளி வைத்து பேறுகள் அனைத்தையும்
தட்டிப் பறித்துவிடும் என நான் நினைக்கவில்லை.
மாமன்னர் அகாமெம்னோ செல்வச்சிறுமகளாய்
நான்தானே முதன் முதலில் அப்பாவென மழலையால்
உங்களை அழைக்கின்ற பேறுதனைப் பெற்றேன்?
எனைக்காணுந்தோறும் உங்கள் கண்களில்
உவகை பொங்க இறைவனுக்கு நன்றி சொல்லி
சீராட்டி எனைக் கொஞ்சி ரத்த
பாசத்தின் பிணைப்புகளில் கட்டுண்டு மகிழ்ந்தீர்கள்
அந்தோ! போர்களில் நீங்கள் வென்றுவரும்
நாடுகளின் பெயரெலாம் ஆவலுடன் கேட்டறிவேன்!
ட்ராய் கோட்டையை தகர்த்துத் திரும்பும்
வெற்றிவிழா கொண்டாட ஏற்பாடுகளைக்கூட செய்துவிட்டேன்!
அவ்வெற்றிக்கு முன்னேயே என்னுடைய ரத்தத்தை
அச்சாரமாய் நீங்கள் கொட்டித்தர வேண்டிய நிலை
வருமென்று பேதைநான் சற்றும் நினைக்கவில்லை.
வரப்போகும் மரணத்தின் பயத்தினால் நடுங்கிக்
கடந்தகால இனிய நினைவுக் குவியல்களை
கிளறுகிறேன் என்றே எண்ணிட வேண்டாம்.
நீங்கள் அஞ்சிடத் தேவை ஒன்றுமில்லை.
புகழில் பொறாமைகொண்டு நான் ஒரு நாளும்
உங்களுக்கு இழுக்குத் தரும் செயல் எதுவும் செய்திடேன்.

. . .

Et si je n’avais eu que ma vie à défendre,
J’aurais su renfermer un souvenir si tendre,
Mais à mon triste sort, vous le savez, Seigneur,
Une mère, un amant, attachaient leur bonheur.
Un roi digne de vous a cru voir la journée
Qui devait éclairer notre illustre hyménée.
Déjà sûr de mon coeur à sa flamme promis,
Il s’estimait heureux : Vous me l’aviez permis
Il sait votre dessein; jugez de ses alarmes.
Ma mère est devant vous et vous voyez ses larmes.
Pardonnez aux efforts que je viens de tenter
Pour prévenir les pleurs que je leur vais coûter.

* * *






என் வாழ்க்கை மட்டிலுமே பாதிக்கப்பட்டிருந்தால்
என் உள்ளத்துக்குள்ளேயே உணர்ச்சிகளை அடக்கியிருப்பேன்.
உங்களுக்குத் தெரியுமே - என்தாயும், அன்புக்காதலனும்
தம் வாழ்வின் இன்பக்கனவுகளை என்றன்
துயர்மிகு தலைவிதியுடன் பிணைத்திருக்கிறனர் என்று.
உங்கள் தகுதிக்கு ஏற்ற இளவரசர்
எங்கள் மணநாள் விடியலை எதிர்நோக்கி
நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருக்கின்றார்!
என் இதயத்தை அவர்க்களித்தேன் உங்கள் அனுமதியுடன்
இதுவே நல்இன்பமென இறுமாந்து அவர் இருக்கிறார்
உங்கள் திட்டம் அவர்க்குத் தெரிந்தவுடன்
அவர் அடையும் அதிர்ச்சி பற்றி சற்றே சிந்தியுங்கள்.
என்தாய் இதோ எதிரே கண்கலங்கி நிற்கின்றாள்.
எனக்குற்ற முடிவால் இவ்விரண்டு உள்ளங்களும்
பெருக்கும் கண்ணீரைத் தவிர்க்கவெண்ணியே
உரைத்திட்டேன் மன்னியுங்கள்.

அங்கம் IV காட்சி 4

* * *

## (9) Jean Racine (1639 – 1699)
## AMDROMAQUE
## Acte III Sc. 8

Dois-Je les oublier, s'il ne s'en souvient plus?
Dois-je oublier Hector privé de funérailles,
Et traîné sans honneur autour de nos murailles?
Dois-je oublier son pere à mes yeux renversé,
Ensanglantant l'autel qu'il tenait embrassé?
Songe, songe, Céphise, à cette nuit cruelle
Qui fut pour tout un peuple une nuit éternelle;
Figure-toi Pyrrhus, les yeux étincelants,
Entrant à la lueur de nos palais brûlants,
Sur tous mes frères morts se faisant un passage,
Et, de sang tout couvert, échauffant le carnage;
Songe aux cris des vainqueurs, songe aux cris des mourants

. . . .



## (9) ரசீன் (1639 - 1699)
## மறுமணமா?

*"ஆந்த்ரோமாக்" எனும் நாடகக் கதை இலியட்டில் இருந்து எடுக்கப்பட்டது. ட்ராய் நகர் கிரேக்கர்களால் அழிக்கப்பட்டபின் ட்ராய் தளபதி ஹெக்தோரின் வீர மரணத்துக்குப்பின் அவன்மனைவி ஆந்த்ரோமாக்கையும் சிறு குழந்தையையும் மன்னன் பீருய்ஸ் தன் அடிமைகளாய்க் கைதிகளாய் வைத்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கு அந்த்ரோமாக்கின் மீது காதல். அவள் தன்னை மணம்செய்துகொண்டால் அவளை அரசி ஆக்குவதாகவும் குழந்தையை இளவரசனாக்குவதாகவும் இல்லையேல் குழந்தை கிரேக்கர்களிடம் கொடுக்கப்பட்டுவிடும் அவர்கள் அதைக் கொல்லக் காத்திருப்பதாகவும் கூறி நெருக்கடி தருகிறான் பீருய்ஸ். ஆந்த்ரேமாக் மனத்தில் போராட்டம்: கணவன்நினைவு எனும் கற்புநெறியா? குழந்தையைக் காப்பாற்ற வேண்டிய தாய் உள்ளமா?*

*தன் தோழியிடம் புலம்புகிறாள் ஆந்த்ரோமாக், போர்க்காட்சிகளின் கொடூரத் தன்மையை நினைவு கூர்ந்து:*

அவன் மறந்திருக்கலாம் - நான் எப்படி மறக்கமுடியும்?
ஈமச் சடங்குகள் எவையுமே இல்லாமல்
எனதருமை ஹெக்தோரின் பூவுடல் புழுதியிலே
கோட்டை மதிற்சுவரைச் சுற்றியுள்ள தெருக்களிலே
இழுத்துச் செல்லப்பட்டதை மறந்திடத்தான் முடியுமா?
அவர் தந்தை ப்ரியாம் வாளால் வெட்டப்பட,
ஆறாய்ப் பெருக்கெடுத்த அவர் உடல்குருதி வெள்ளம்
புனித சந்நிதியைச் செந்நீரால் கழுவியதை
என் கண்களால் கண்டேனே! அதைத்தான் மறந்திடவா?
நினைத்துப்பார் தோழி, நினைத்துப்பார், பயங்கரமான அவ்விரவில்,
நம் மக்கள் நெஞ்சினிலே அழியாத நினைவுகளாய்
நிலைத்து நின்றுவிட்ட கோலத்தை நினைத்துப்பார்.
நாற்புறமும் தீயினுக்கு இரையான நம் அரண்மனைக்குள்
புகை சூழ்ந்த சுவாலையின் மங்கிய ஒளியினிலே
கண்களில் கனல்பரக்க பீருய்ஸ் நுழைந்து வந்த
கோரக் காட்சியினை மறக்கத்தான் முடிந்திடுமா?
இறந்த என் சகோதரர்களின் பிணக்குவியல் மீதேறிப்
பாய்ந்து போர்க்களத்தில் செந்நீரில் முழுக்காடி
பீருய்ஸ் சொக்கரித்தது நம் நெஞ்சை விட்டகன்றிடுமா?
வெற்றி பெற்றோரின் வீரமுழக்கங்களும்
இறந்து கொண்டிருந்தோரின் ஈன ஓலங்களும்

. . . .

Dans la flamme étouffés, sous le fer expirants;
Peins-toi dans ces horreurs Andromaque éperdue:
Voilà comme Pyrrhus vint s’offrir à ma vue;
Voilà par quels exploits il sut se couronner;
Enfin, voilà l’époux que tu veux me donner.
Non, je ne serai point complice de ses crimes;
Qu’il nous prenne, s’il veut, pour dernières victimes.
Tous mes ressentiments lui seraient asservis!
CÉPHISE
Hé bien, allons donc voir expirer votre fils:
On n’attend plus que vous... Vous frémissez, madame?
ANDROMAQUE
Ah! de quel souvenir viens-tu frapper mon âme!
Quoi! Céphise, j’irais voir expirer encor
Ce fils, ma seule joie, et l’image d’Hector?
Ce fils, que de sa flamme il me laissa pour gage?
Hélas! je m’en souviens : le jour que son courage
Lui fit chercher Achille, ou plutôt le trépas,
Il demanda son fils, et le prit dans ses bras :
« Chère épouse, dit-il en essuyant mes larmes,
« J’ignore quel succès le sort garde à mes armes;
« Je te laisse mon fils pour gage de ma foi :
« S’il me perd, je prétends qu’il me retrouve en toi.
« Si d’un heureux hymen la mémoire t’est chère,
« Montre au fils à quel point tu chérissais le père. »
Et je puis voir répandre un sang si précieux!
Et je laisse avec lui périr tous ses aïeux!

* * *



குருதிசொட்டும் ஈட்டிகள், புகையும் தீப்பந்தங்கள்
இக்கோரக்காட்சகள் ஊடே அபலையாய் நான் நின்றதை
எண்ணிப்பார் தோழி. இவன் தான் நான்கண்ட பீரூய்ஸ்!
இவைதான் அவனுடைய பராக்கிரமங்கள்!
இவனைத்தான் மணந்துகொள்ளச் சொல்கிறாய் என்னை.
முடியாது. இவனுடைய கொலைகளுக்கு நான் உடந்தையாக
முடியாது. எங்களையும் வேண்டுமானால் கொன்று தீர்க்கட்டும்
என் உள்ளத்துக் குமுறல்கள் அப்போது அடங்கிவிடும்.
**தோழி**: அப்படியென்றால், உங்கள் அருமை மகனும்
கொலை செய்யப்படுவதைக்காணச் சென்றிடுவோம்... வாருங்கள்
உங்கள் வருகைக்குத்தான் அங்கே காத்திருக்கின்றனர்.
நான் சொல்வதே உங்களை நடுங்கிடச் செய்கிறதே...!“
**ஆந்த்ரோமாக்** : போதும். எத்துணை கோர நினைவுகளால்
என் இதயத்தைப் பிளக்கின்றாய்.
இக்குழந்தை என் உயிர்க்கு எஞ்சிய ஒரே ஊன்றுகோல்.
என்னருமை ஹெக்தோரின் எழில்மிகு மறுபதிப்பு!
அன்பின் அடையாளமென அவரளித்த ஒரே செல்வம்!
இச்செல்வத்தையும் பறிகொடுக்க என்றும் நான் சம்மதியேன்.
அன்றொரு நாள் - நெஞ்சகலா நினைவு -
அஷீல் உருவத்தில் விதி அவரை அழைத்தபோது
தம் செல்லச் சிறுமகனை கொண்டு வரச்சொல்லி
அன்புடன் கையில் தூக்கி உச்சிமுகர்ந்து
என் கண்ணீரைத் துடைத்துவிட்டுக் கூறினார்:
« அன்பே, என் வீரத்துக்கும் வாளுக்கும் விதி
பரிசென்ன தரப்போகிறது என்பதை நான் அறியேன்
எனதன்பின் அடையாளச் சின்னமாய் இச்செல்வனை
உன்னிடம் விட்டு நான் செல்கின்றேன். ஜாக்கிரதை!
தந்தையை அவனிழந்தால் உன்னில் அவன் எனைக்காண்பான்.
புனிதமான நம் திருமண உறவின் மேல் ஆணையிது! »
தந்தையிடம் கொண்ட அன்பை இவன்மேல் பொழிந்திடுவாய்
சீர்மிகு குலத்தோன்றல் எஞ்சிய இறுதி வாரிசு
அரிய இவ்வுயிரும் குலத்தோடு அழிந்திடக் காண்பேனோ!

அங்கம் III - காட்சி 8

* * *

## (10) LA FONTAINE – FABLE
## (1621 – 1695)
## LES ANIMAUX MALADES DE LA PESTE

Un mal qui répand la terreur,
Mal que le Ciel en sa fureur
Inventa pour punir les crimes de la terre,
La peste (puisqu'il faut l'appeler par son nom),
Capable d'enrichir en un jour l'Achéron,
Faisoit aux animaux la guerre.
Ils ne mouroient pas tous, mais tous étoient frappés:
On n'en voyoit point d'occupés
A chercher le soutien d'une mourante vie;
Nul mets n'excitoit leur envie;
Ni loups ni renards n'épioient
La douce et l'innocente proie;
Les tourterelles se fuyoient :
Plus d'amour, partant plus de joie.

Le Lion tint conseil, et dit : « Mes chers amis,
Je crois que le Ciel a permis
Pour nos péchés cette infortune.
Que le plus coupable de nous
Se sacrifie aux traits du céleste courroux;
Peut-être il obtiendra la guérison commune.
L'histoire nous apprend qu'en de tels accidents
On fait de pareils dévouements.

. . .



## (10) **லஃபோன்தேன்** (1621 - 1695)
## கொள்ளை நோய்

*சுமார் 240க்கும் அதிகமான நீதிக் கதைகள் மூலமாகப் பிரபலமானவர் லஃபோன்தேன் - இவர் வரிகள்பல பழமொழியாக நிலைபெற்றுவிட்டன. அத்தொகுப்பிலிருந்து இரு நீதிக்கதைகளின் தமிழாக்கம்*

காட்டிலே கொள்ளை நோய்!
பெயர் கேட்டாலே பார் நடுங்கும் நோய்!
உலகில் நடக்கும் மா பாதகச் செயல்களுக்குச்
சினங்கொண்ட கடவுள் உண்டாக்கிய தண்டனை! -
அது தான் கொள்ளை நோய்.
பெயரைச் சொல்லித்தீர வேண்டியிருக்கிறதே.
நரகம் முழுவதையும் நாள் ஒன்றில் நிரப்பவல்ல
கொடிய அந்நோயும் மிகத் தீவிரமாய்
விலங்கினத்தின்மேல் போர் தொடுத்தது போல் பாய்ந்தது.
அனைத்து விலங்குகளும் மடியவில்லைதான், எனினும்
எல்லா விலங்குக்கும் நோய் வந்து வாட்டியது.
மரணத்தின் வாயிலிருந்து மீள ஓர் ஊன்றுகோலினை
பற்றிடும் முயற்சிகூட செய்யவும் ஒண்ணாது
நல் இரையின்மீதுகூட நாட்டம் இழந்தன.
ஓநாயும் நரிகளும் கள்ளங்கபடறியா இளங்
குட்டி குஞ்சுகள் பக்கம் திரும்பிக் கூட பார்ப்பதில்லை.
கொஞ்சிக் குலவிடும் காதல் சிட்டுக்களும் கூட
பிரிந்து காததூரம் விலகியே பறந்தன.
காதலும் இல்லை, ஆதலின் இன்பமும் இல்லை.
தலைவர் சிங்கம் பேரவை கூட்டிப் பேசினார்.
எனதருமை மாக்களே!
நம் பாவத்தின் பலனாய்த்தான் நமக்கிந்த தண்டனையை
இறைவன் தந்துள்ளான் என்றே நான் நினைக்கின்றேன்.
நம்முள் பெரும்பாவி யாரோ அவரே முன்வந்து
தெய்வ சீற்றத்துக்குத் தன்னைப் பலியாய்த் தந்திட்டால்
ஒருகால் நம் எல்லோர்க்கும் விமோசனம் கிடைத்திடலாம்
இத்தகைய தெய்வ குற்றம் உற்ற காலத்தே
தக்க பிராயச்சித்தம் செய்தலே வழக்கமென்று
சரித்திரம் நமக்குப் பாடம் உரைக்கிறது.

. . .

Ne nous flattons donc point; voyons sans indulgence
L’état de notre conscience.
Pour moi, satisfaisant mes appétits gloutons,
J’ai dévoré force moutons.
Que m’avoient-ils fait? Nulle offense;
Même il m’est arrivé quelquefois de manger
Le berger.
Je me dévouerai donc, s’il le faut : mais je pense
Qu’il est bon que chacun s’accuse ainsi que moi :
Car on doit souhaiter, selon toute justice,
Que le plus coupable périsse.
Sire, dit le Renard, vous êtes trop bon roi;
Vos scrupules font voir trop de délicatesse.
Eh bien! manger moutons, canaille, sotte espèce,
Est-ce un péché? Non, non. Vous leur fîtes, Seigneur,
En les croquant, beaucoup d’honneur;
Et quant au berger, l’on peut dire
Qu’il étoit digne de tous maux,
Étant de ces gens-là qui sur les animaux
Se font un chimérique empire. »
Ainsi dit le Renard; et flatteurs d’applaudir.
On n’osa trop approfondir
Du Tigre, ni de l’Ours, ni des autres puissances,
Les moins pardonnables offenses.
Tous les gens querelleurs, jusqu’aux simples mâtins,
Au dire de chacun, étoient de petits saints.
L’Ane vint à son tour, et dit : « J’ai souvenance
Qu’en un pré de moines passant,

. . .



தற்பெருமை யுரை வேண்டாம்/ ஈவிரக்கம் ஏதுமின்றி
நம் ஆத்ம சோதனையை நாமே செய்திடுவோம்.
நானே தொடங்குகிறேன். அகோர என் பசிக்குணவாய்
எத்தனையோ ஆடுகளை நான் விழுங்கி இருக்கின்றேன்
இவை எனக்கிழைத்த தீங்குதான் என்ன? ஒன்றுமில்லை.
இவையன்றி சில சமயம் நான் அடித்துத் தின்றதுண்டு,
இடையனையும் கூடத்தான்.
பலியாக என்னையே தருகின்றேன், தேவையெனில் - அதற்குமுன்
என்னைப் போலவே நீங்கள் எல்லோரும் முன்வந்து
செய்திட்ட பாவங்களை ஒளிவின்றி உரைப்பது
நலமென்று நினைக்கின்றேன். காரணம் நம்மில்
மிகப் பெரும் பாவியே பலியாதல் நீதியாகும்.
நரியார் எழுந்தார் மொழிந்தார் : ”மன்னரில் மாணிக்கம் நீங்கள்!
கருணைமிக்க மனத்தினால் ஏதேதோ பேசிவிட்டீர்
ஆடுகளைப் போன்ற அறிவற்ற பிறவிகளை
உண்பதைப் பாவம் என்றா பகர்வது? இல்லை இல்லை
உங்கள் பற்களால் கடித்ததால் மிகப் பெரிய
பேற்றினையன்றோ அவற்றுக்குத் தந்துவிட்டீர் ?
இடையனைப் பொறுத்த மட்டில் அவனுக்கு எத்தகைய
தண்டனையும் தகும் எனலாம், காரணம்,
‘விலங்கினம் யாவுமே தமக்கடிமை என்கிற
கற்பனை இறுமாப்பில் திளைக்கின்ற கூட்டத்தைச்
சேர்ந்தவனே இவனும்” என்ற இவ்வுரை கேட்ட
துதிபாடும் புல்லர்கூட்டம் கால் தட்டிக் களித்தது.
புலி கரடி போன்ற வலிமை மிகு விலங்குகளின்
மன்னிக்க முடியாத பெருங் குற்றங்களைக் கூட
யாரும் சிறிதேனும் கண்டு கொள்ளவேயில்லை
கெட்ட மிருகங்களும் வெறும் நாய்களும் கூட
தம்மைப் புனிதரெனத் தாமே வருணித்துக்கொண்டன !
அடுத்து வந்த கழுதை சொன்னது :
என் நினைவுக்கு வருவதெல்லாம்
அன்றொரு நாள் வரும் வழியில் கண்டேன்
சாமியாருக்குச் சொந்தமான ஒரு புல்வெளியை.

. . .

La faim, l’occasion, l’herbe tendre, et, je pense,
Quelque diable aussi me poussant,
Je tondis de ce pré la largeur de ma langue.
Je n’en avois nul droit, puisqu’il faut parler net. »
A ces mots on cria haro sur le Baudet.
Un Loup, quelque peu clerc, prouva par sa harangue
Qu’ il falloit dévouer ce maudit animal,
Ce pelé, ce galeux, d’où venoit tout leur mal.
Sa peccadille fut jugée un cas pendable.
Manger l’herbe d’autrui! quel crime abominable!
Rien que la mort n’étoit capable
D’expier son forfait : on le lui fit bien voir.

Selon que vous serez puissant ou misérable,
Les jugements de cour vous rendront blanc ou noir.

(LIVRE VII - 1)

* * *





பசிக்கொடுமை, பசும்புல், சாதகமான சூழ்நிலை
இவையன்றிப் பாழும் சாத்தானின் சதி வேலை
உள்ளிருந்து என்னை உந்தித் தள்ளிடவே,
நாவைச் சுழற்றியொரு வாய்ப்புல்லை மேய்ந்துவிட்டேன்
உள்ளதை உரைப்பின், உரிமையெனக்கில்லை தான்
சொல்லி முடிக்குமுன்னே ”ஐய ஹோ, அடப்பாவி”
என்றெழுந்த கூக்குரலில் மன்றமே அதிர்ந்தது.
நாவன்மை மிக்கதொரு வழக்குரைஞர் போல் ஓநாயும்
வந்துற்ற துன்பங்கள் அனைத்துக்கும் காரணமே
சொறித்தோல் போர்த்திய இச்சாம்பல் நிறக் கழுதையென்றும்,
மாபாவிக் கழுதையிதை பலியிடத்தான் வேண்டுமென்றும்,
தன் வாதத் திறமை காட்டி அவையிலே முழங்கியது.
சிறு தவறுக்குக் கிடைத்த தீர்ப்பு மரணதண்டனை!
ஆம்! மாற்றான் மண்ணில் ஓர் வாய்ப்புல்லினை மேய்வதுவோ!
இதைவிடப் பெரும்பாவம் பாரினில் உள்ளதோ!
மரணம் ஒன்றே இப்பாவத்துக் கேற்ற பிராயச்சித்தமாம்.
நம் கழுதைக்கு அழுத்தமுடன் உணர்த்தப்பட்டதிப்பாடம்:

நீங்கள் வலியவரா எளியவரா என்பதற்குத் தக்கபடி
நீதி மன்றத் தீர்ப்புக்கள் உங்களை
நிரபராதி என்றோ,
நீரே அபராதி என்றோ
ஆக்கிவிடும் அறிந்திடுவீர் !

(தொகுதி 7-1)

* * *



## (11) LA FONTAINE - 2
## LES GRENOUILLES
## QUI DEMANDENT UN ROI

Les Grenouilles se lassant
De l'état démocratique,
Par leurs clameurs firent tant
Que Jupin les soumit au pouvoir monarchique.
Il leur tomba du ciel un Roi tout pacifique;
Ce Roi fit toutefois un tel bruit en tombant,
Que la gent marécageuse,
Gent fort sotte et fort peureuse,
S'alla cacher sous les eaux,
Dans les joncs, dans les roseaux,
Dans les trous du marécage,
Sans oser de longtemps regarder au visage
Celui qu'elles croyoient être un géant nouveau.
Or c'étoit un Soliveau,
De qui la gravité fit peur à la première
Qui, de le voir s' aventurant,
Osa bien quitter sa tanière.
Elle approcha, mais en tremblant;
Une autre la suivit, une autre en fit autant :
Il en vint une fourmilière;
Et leur troupe à la fin se rendit familière
Jusqu'à sauter sur l'épaule du Roi.
Le bon sire le souffre, et se tient toujours coi.
Jupin en a bientôt la cervelle rompue :
« Donnez-nous, dit ce peuple, un roi qui se remue.
Le Monarque des Dieux leur envoie une Grue,
Qui les croque, qui les tue,
Qui les gobe à son plaisir;
Et Grenouilles de se plaindre,

. . .



## (11) லஃபோன்தேன் - 2
## ஜனநாயகம் அலுத்து விட்டது.
## மன்னராட்சி கோரிய தவளைகள்.

ஜனநாயகம் அலுத்துவிட்டது அக்குளத்துத் தவளைகளுக்கு /
அவைபோட்ட கூச்சல் தாங்காமல்
கடவுள் தோன்றி அத்தவளைகளுக்கு
மன்னராட்சி முறை தந்தார்.
சமாதான விரும்பியான மன்னர் ஒருத்தரை
வானத்திலிருந்து அனுப்பிவைத்தார்.
ஆனாலும் குளத்தில் விழும்போது
அம்மன்னர் எழுப்பிய சத்தத்தில்,
மிகவும் பயமும் அசட்டுத்தனமும் கொண்ட தவளையினம்
தண்ணீருக்கு அடியிலும், புல் புதர்கள் உள்ளேயும்
சேற்றின் ஆழத்திலும் சென்று ஒளிந்து கொண்டன/
தம் மன்னரை ஒரு பெரிய பூதம் என நினைத்து
முகத்தை நேரில் பார்க்கவே பயந்தன வெகுகாலம்.
பெரிய மரக்கட்டைதான் அம்மன்னர்.
அதைக்கண்டு முதலில் பயந்து ஒதுங்கியது ஒருதவளை/
கட்டை மிதப்பதைக்கண்டு தன்
மறைவிடத்திலிருந்து வெளியே எட்டிப் பார்த்தது,
நடுங்கிக்கொண்டே மெல்ல நெருங்கியது.
அதனைத் தொடர்ந்தது மற்றொரு தவளை,
பின்னும் ஒன்று, இன்னும் ஒன்று, என
ஒரு பெரிய கூட்டமே சேர்ந்துவிட்டது.
கொஞ்சம் கொஞ்சமாக சகஜநிலை வந்தது.
ஒரு தவளை மன்னரின் தோள்மேல் தாவியது.
மன்னருக்குக் கஷ்டம்தான், இருந்தாலும் காட்டிக்கொள்ளவில்லை
கடவுளின் அமைதி மீண்டும் கலைந்தது.
செயல்திறன்மிக்கதொரு மன்னரை எங்களுக்குத் தாருங்கள்
எனக்கேட்ட தவளைகளுக்கு அனுப்பிவைத்தார் ஒரு கொக்கை.
கொக்கு தன் இஷ்டத்திற்குத் தவளைகளை
கொத்தித் தின்று மகிழ்ந்தது.
தவளைகள் மீண்டும் கடவுளிடம் முறையிட்டன.

. . .

Et Jupin de leur dire : « Eh quoi? votre désir
A ses lois croit-il nous astreindre?
Vous avez dû premièrement
Garder votre gouvernement;
Mais ne l'ayant pas fait, il vous devoit suffire
Que votre premier roi fût débonnaire et doux :
De celui-ci contentez-vous,
De peur d'en rencontrer un pire. »

(Livre III - 4)

* * *



கடவுள் சொன்னார்:
« உங்கள் இஷ்டத்துக்குத் தக்கபடியெல்லாம்
தெய்வ சங்கல்பம் இருக்க வேண்டுமா?
உங்கள் முதல் ஆட்சி முறையினையே
நீங்கள் வைத்துக்கொண்டிருந்திருக்க வேண்டும்/
அவ்வாறு செய்யவில்லை.
உங்களுக்குக் கிடைத்த முதல்மன்னர்
நல்லவராகவும் சாதுவாகவும் இருந்ததற்கு
மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும்/
அடுத்து வருவது இதைவிட மோசமானதாக இருந்துவிட்டால்
என நினைத்து இப்போதிருப்பதைக் கொண்டு
திருப்தியடைந்து கொள்ளுங்கள்/ »

(தொகுதி III - 4)

* * *

## (12) MOLIÈRE (1622 - 1673)
## «Et je hais tous les hommes...»

Non: elle est générale, et je hais tous les hommes:
Les uns, parce qu'ils sont méchants et malfaisants,
Et les autres, pour être aux méchants complaisants,
Et n'avoir pas pour eux ces haines vigoureuses
Que doit donner le vice aux âmes vertueuses.
De cette complaisance on voit l'injuste excès
Pour le franc scélérat avec qui j'ai procès.
Au travers de son masque on voit à plein le traître;
Partout il est connu pour tout ce qu'il peut être;
Et ses roulements d'yeux et son ton radouci
N'imposent qu'à des gens qui ne sont point d'ici.
On sait que ce pied plat, digne qu'on le confonde,
Par de sales emplois s'est poussé dans le monde,
Et que par eux son sort de splendeur revêtu
Fait gronder le mérite et rougir la vertu.
Quelques titres honteux qu'en tous lieux on lui donne,
Son misérable honneur ne voit pour lui personne;
Nommez-le fourbe, infâme et scélérat maudit,
Tout le monde en convient, et nul n'y contredit.
Cependant sa grimace est partout bienvenue:
On l'accueille, on lui rit, partout il s'insinue;
Et s'il est, par la brigue, un rang à disputer,
Sur le plus honnête homme on le voit l'emporter.

Le Misanthrope – Acte I. Sc -1

* * *



## (12) மொலியேர் (1622 - 1673)
## நான் மனித இனத்தையே வெறுக்கிறேன்

ஆம், பொதுவாகவே
நான் எல்லா மனிதர்களையுமே வெறுக்கிறேன்:
சிலரைத் தீயவர்கள், தீங்கிழைப்பவர்கள் என்ற காரணத்துக்காக/
வேறு சிலரை,
இத்தீய குணங்கள் நற்பண்புகள் நிறைந்த மனத்தில் எத்தகைய
தீவிர வெறுப்பைத் தோற்றுவிக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு
அருவருப்பைக் காட்டாமல் தீயவர்களிடம் தாட்சணியம்
உள்ளவர்களாக இருக்கிறார்களே என்பதற்காக.
எனக்குப் பாதகம் செய்யும் பச்சை அயோக்கியனிடம்
அவர்கள் காட்டும் இணக்கம் அளவுக்கு அதிகமாகவே இருக்கிறது.
முகமூடிக்குப் பின்னால் அவன் துரோகி என்பது நன்றாகவே தெரிகிறது.
அவன் எத்தகையவன் என்பது அனைவருக்கும் தெரிந்தது தான்.
கண்களை உருட்டுவதாலும், குரலை அடக்கிப்பேசுவதாலும்
இங்குள்ளவர் யாரும் ஏமாந்து போய்விடுவதில்லை
இந்த வெட்கங்கெட்ட கயவன் எவ்வளவு கேவலமான
செயல்களால் முன்னேறினான் என்பதும் அனைவருக்கும் தெரிந்ததே.
அவற்றால்தான் இவன்நிலை பகட்டாய் ஜொலிக்கிறது.
தகுதியைத்தள்ளி மிதித்து நேர்மையைத் தலைகுனிய வைத்து
செல்லுமிடமெல்லாம் இவனுக்கு வெட்கங்கெட்ட விருதுகள்
குவிந்தபோதும் கூட, இவனைக் கௌரவமானவன்
எனச்சொல்வாரில்லை.
புளுகன், எத்தன், வஞ்சகன், பித்தலாட்டக்காரன்
என்று எதைச் சொல்லி இவனை அழைத்திட்ட போதிலும்
யாரும் மறுக்கமாட்டார் அனைவரும் ஒப்புக்கொள்வார்.
ஆனாலும் இவன் இளிக்கும் முகந்தான் எங்கும் காண்கிறது.
இவன் நுழையாத இடமில்லை. அங்கெல்லாம் பல்லைக்காட்டிக்கொண்டு
நின்று இவனை வரவேற்கப் பலபேர்!
அடைய வேண்டிய பதவி என்று ஏதேனும் இருந்திட்டால்,
கண்ணியமே உருவான சீலரைக் கூட தோற்கடிக்கும் இவன் சூழ்ச்சி.

மனித இனத்தையே வெறுப்பவர்
(அங்கம் I காட்சி 1)

* * *

## (13) MOLIÈRE - 2
## LES FEMMES SAVANTES
## CHRYSALE

Qu'importe qu'elle manque aux lois de Vaugelas,
Pourvu qu'à la cuisine elle ne manque pas?
J'aime bien mieux, pour moi, qu'en épluchant ses herbes,
Elle accommode mal les noms avec les verbes,
Et redise cent fois un bas ou méchant mot
Que de brûler ma viande ou saler trop mon pot.
Je vis de bonne soupe et non de beau langage.
Vaugelas n'apprend point à bien faire un potage;
Et Malherbe et Balzac, si savants en beaux mots,
En cuisine, peut-être, auraient été des sots.

(Act II. Sc 7)

* * *





## (13) மொலியேர் - 2
## அதிமேதாவிப் பெண்டிர்

*[கவிதையிலும், அறிவியலிலும் தாம் அதிமேதாவிகள் என்று பகட்டாக எண்ணிக்கொண்டிருக்கும் பெண்களின் ஆதிக்கத்தில் உள்ள ஒரு மேட்டுக்குடும்பத்தில் சமையல்காரியை வேலையை விட்டு நீக்க விழைகிறார்கள் அப்பெண்டிர். ஒரே காரணம்: அவள் கொச்சையாகப் பேசுகிறாள்; பேச்சில் இலக்கணப் பிழைகள் ஏராளம் என்பதுதான்! வீட்டு எஜமானரின் புலம்பல் இதோ...]*

என் சமையல்காரி
தொல்காப்பிய* இலக்கணவிதிகளை மீறிவிட்டால் என்ன?
சமையல் வேலைக்கு ஒரு நாள் கூட வரத் தவறியதில்லை.
என்னைப் பொறுத்தவரை அவள் கீரையை சரிவர ஆய்ந்தால் சரி.
பெயர்ச்சொல்லைப் பன்மையிலும் வினைச்சொல்லை ஒருமையிலும்
சேர்க்கும் தவறு வந்தால் என்ன குடியா முழுகிவிடும்?
கறியைக் காந்த விடாமல் ரஸத்தில் உப்பை வாரிக் கொட்டாமல்
சமைக்கிறாளே! கொச்சையான சொற்களை நூறுதடவை
திருப்பித் திருப்பிச் சொன்னால் என்ன?
நல்ல சாப்பாடுதான் என்வாழ்க்கைக்கு முக்கியமே தவிர,
இலக்கணச் சுத்தமான வாக்கியங்களா என் உயிருக்குத் தேவை?
நன்றாக வத்தல் குழம்பு வைப்பது எப்படி
என்று தொல்காப்பியர் சொல்லவில்லையே.
இளம்பூரணரும்* சேனாவரையரும்*
இலக்கணத்தில் வல்லுநராக இருக்கலாம்,
ஆனால் சமையல்கட்டில் விட்டால் அனேகமாக
அசடுதான் வழிவார்கள்,

அதிமேதாவிப் பெண்டிர்
(அங்கம் II காட்சி - 7 )

* * *

* மூலத்தில் காணப்படும் சொற்கள் Vaugelas, Malherbes, Balzac எனும் ஃபிரஞ்சு இலக்கண வல்லுநரின் பெயர்கள்



## (14) VOLTAIRE (1694-1778)
## LA BASTILLE

J’eus beau prêcher et j’eus beau me défendre,
Tous ces messieurs d’un air doux et bénin
Obligeamment me prirent par la main :
« Allons, mon fils, marchons. » Fallut se rendre,
Fallut partir. Je fus bientôt conduit
En coche clos vers le royal réduit
Que près Saint-Paul ont vu bâtir nos pères
Par Charles Cinq. O gens de bien, mes frères,
Que Dieu vous gard’ d’un pareil logement!
J’arrive enfin dans mon appartement.
Certain croquant avec douce manière
Du nouveau gîte exaltait les beautés,
Perfection, aises, commodités.
« Jamais Phébus, dit-il, dans sa carrière,
De ses rayons n’y porta la lumière;
Voyez ces murs de dix pieds d’épaisseur,
Vous y serez avec plus de fraîcheur. »
Puis, me faisant admirer la clôture,
Triple la porte, et triple la serrure,
Grilles, verrous, barreaux de tout côté :
« C’est, me dit-il, pour votre sûretè! »

* * *



## (14) வொல்தேர் (1694 - 1778)
## பஸ்தீய் சிறை

*[பஸ்தீய் என்பது பாரீஸில் இருந்த ஒரு கொடிய கோட்டைச்சிறை. இதில் தள்ளப்பட்டவர்கள் கதி என்னவாகும் என்று ஒருவராலும் கூற முடியாது. மன்னர்களின் யதேச்சாதிகாரத்தின் சின்னமாகக்கருதப்பட்டது. 1789 புரட்சி வெடித்தபோது, மக்கள் ஆவேச எழுச்சி கொண்டு கூட்டமாகச்சென்று இடித்துத்தரைமட்டமாக்கியது இதைத்தான். அந்தஅளவுக்கு மக்களின் வெறுப்புக்குப்பாத்திரமானது இச்சிறைக்கூடம். இதில் தள்ளப்பட்டபோதிலும் கவிஞர் வொல்தேர் இச்சிறையை வருணிக்கும் நையாண்டி வரிகள் அவருடைய குணத்தைப் பிரதிபலிப்பவை.]*

எத்தனையோ காரணங்கள் எடுத்துநான் இயம்பிடினும்
எனையழைக்க வந்தவர்க்கோ எனைவிடும் எண்ணமில்லை.
நழுவாப் பிடிகொண்டென் நற்கரம் தமைப்பற்றி
“தம்பி வா போகலாம், புறப்படு நீ“ எனக்கனிவுடன்கூறிக்
குதிரைகள் பூட்டிய கோலமிகு சாரட்டில்
அரசுக்கோட் டைக்கிங்கு அழைத்தெனை வந்திட்டார்.
இது மேட்டுக் குடியினர்வாழ் வட்டாரம் ஐயமில்லை.
திரும்பும் திசையெங்கும் திகழ்வன இவையாவும்
செல்வச் சீமான்வாழ் சீர்மிகு மாளிகைகள்!
இச்சிறைகூட அன்றென் முன்னோர் காலத்தே
மாண்புமிகு மன்னர் ஐந்தாம்ஷார்ல் கட்டியது.
ஆயினும் எனதன்புத் தோழர்காள்! உங்களில்
யாருக்கும் இந்நிலைமை எந்நாளும் வரவேண்டா.
நான் உள்ளே புகுந்தவுடன் இத்தலத்தின் பெருமைகளை
விரிவாக எடுத்துரைத்தான் உள்ளுறை வாசியொருவன்:
“ஆதவனும் தானுதித்த அன்றுமுதல் இன்றுவரை
இதனுள்ளே எட்டிக்கூட பார்க்கவும் முடிந்ததில்லை!
சுவர்கனம் பத்தடி; பின் குளுகுளுப்புக்குக் குறைவேது?
சுற்றிலும் பாருங்கள் வியப்பால் அயர்ந்திடுவீர்
அசைக்கவும் முடியாத மூன்றிரும்புக் கதவுகள்/
அவற்றில்தொங்கிருப்புப் பூட்டுகள் அவைமூன்று/
கரும்பொத்த இரும்புக் கம்பிகள்/ தடிதாழ்ப்பாள்/
இவையனைத்தும் நம் பாது காப்புக்குத் தானாம்!“

* * *

## (15) VOLTAIRE - 2
## POÈME SUR LE DÉSASTRE DE LISBONNE

O malheureux mortels! ô terre déplorable !
O de tous les mortels assemblage effroyable !
D’inutiles douleurs éternel entretien !
Philosophes trompés qui criez, Tout est bien;
Accourez, contemplez ces ruines affreuses,
Ces débris, ces lambeaux, ces cendres malheureuses,
Ces femmes, ces enfants l’un sur l’autre entassés,
Sous ces marbres rompus ces membres dispersés;
Cent mille infortunés que la terre dévore,
Qui, sanglants, déchirés, et palpitants encore,
Enterrés sous leurs toits, terminent sans secours
Dans l’horreur des tourments leurs lamentables jours!
Aux cris demi-formés de leurs voix expirantes,
Au spectacle effrayant de leurs cendres fumantes,
Direz-vous : « C’est l’effet des éternelles lois
Qui d’un Dieu libre et bon nécessitent le choix? »
Direz-vous, en voyant cet amas de victimes :
« Dieu s’est vengé, leur mort est le prix de leurs crimes? »

. . .



## (15) வொல்தேர் (1694 – 1778)
## லிஸ்போன் நிலநடுக்கம்:

பரிதா பத்துக் குரிய மனிதஇனம் !
துயர்மிகு உலக வாழ்க்கை! ஐயகோ!
நாற்றமிகு பிணக்குவியல்கள் !
மீளாச் சோகம்! மாளா வேதனை !
“நிகழ்பவை எல்லாமே நன்மைக் கேதான்“
எனத்தத்துவம் பேசி ஏமாந்த வீணர்களே! ஓடிவாருங்கள்!
பயங்கர இவ்விடிபாடுகளைப் பாருங்கள்!
தூளாகிப் போன கட்டடங்கள்,
சிதைந்த மனிதப் பிண்டங்கள்,
வெந்து தணிந்த சாம்பல் குவியல்கள்,
பிணமாய்ப் போன பெண்டிர்,
பால்மணம் மாறாப் பாலகர்கள் இவையனைத்தும்
குப்பை மேடெனக் கோரமாய் இங்கே
குவிந்து கிடப்பதை வந்து பாருங்கள்!
சலவைக்கல் கட்டடத்தின் இடிபாடுகள்
அவற்றின் அடியில் சிக்கிக் கிடக்கும்
சிதைந்த உடல் உறுப்புகள்!
வாய்ப்பிளந்து இப்புவி நொடியில் விழுங்கிய
நூறாயிரம் உயிர், அந்தோ பரிதாபம்,
உருக்குலைந்து குருதி வெள்ளத்தில் மிதந்து
குற்றுயிரும் குலையுயிருமாய்த் துடிதுடித்து
உதவ யாருமின்றி நாதியற்று, மாளா
வேதனைக்கோர் முடிவைத் தம் மரணத்தில்
அடைகின்ற அவலத்தைப் பாருங்கள்.!
மனிதர் வெந்து குவிந்த சாக்காடு
அவர்மரண ஓலத்தின் முனகலுக்குப் பதிலுரையாய்,
கருணையே வடிவான பற்றற்ற அக்கடவுள்,
காலத்தைக் கடந்து நிற்கும் தரும நியதிப்படி
தந்த தண்டனை தகும் இது என்பீரோ?
கடவுள் பழி தீர்த்துக்கொண்டார். இப்புவியில்
அவரவர் செய்திட்ட பாவச் செயல்களுக்குத்
தம் உயிரையே உரிய விலையாய்த் தந்திட்டார்.
என்றே உரைக்க எவ்வாறு துணிந்திடுவீர்?

. . .

Quel crime, quelle faute ont commis ces enfants
Sur le sein maternel écrasés et sanglants?
Lisbonne, qui n'est plus, eut-elle plus de vices
Que Londres, que Paris, plongés dans les délices?
Lisbonne est abîmée, et l'on danse à Paris.

* * *

---

*மொழியாக்கமாய்ச் செய்யப்பட்ட இக்கருத்துக்களைத் தமிழ்க் கவியாக்கித்தர என்னால் இயலவில்லையே என்றோர் மனக்குறை, வித்துவான் கங்காதரனிடம் வேண்டுகோள் விடுத்தேன். அவரும் மனமுவந்து இயற்றித்தந்த பாவடிவம் இதோ:*

அளிதோ அம்ம எளிதாம் மானுடம்!
அவலம் மிகுந்ததிவ் அவனி, அந்தோ!
நாற்றமிகும் ஈமத் தோற்றமிகு குவைகள்!
மீளாத் துயர்தரும் மாளாக் காட்சிகள்!
"நிகழ்வன யாவும் திகழ்நலம் பயப்பன"
எனப்பெருந் தத்துவம் நினைப்பிடைப் பேசி
ஏமாந்த வீணர்காள்! ஆமாம் / நீர் ஓடி
வம்மினோ, காணிய! விம்முறும் இன்ன
கட்டட இடிபாடு துட்குறக் குவிந்தன!
சிதைந்த மக்கள்தம் துதைந்த உடற்பொறை!
வெந்து தணிந்த முந்துறு சாம்பர்!
கவிந்த குப்பையாக் குவிந்த பிணமாக்
கிளர்நலப் பெண்டிர் தளர்நடைப் பாலர்
கிடக்கும் கோர விடக்கினைப் பார்மின்!
சலவைக்கல் மாளிகை நிலவைமுன் பொழிந்தன
துகளென இடிபடப், புகலென அவற்றடிச்
சிக்குறச் சிதைந்தன, மக்களின் உடற்குறை!
நூறா யிரம்உயிர் வேறா நொந்துடல்
விரைந்தெழும் குருதியில் நிரந்துடன் மிதப்பன!
குற்றுயிர் துடித்திட, உற்றிட உதவி
நாடியே பெற்றிலார் கூடிய வேதனை
முடிவினை மரணப் பிடியினில் காணும்
கொடுமையைக் காண்மின்! படுமயா னத்திடைச்
சாவிடை முனகல் ஓவில கேண்மின்!



தாய்மடியில் நசுங்கிக் குருதியில் மிதக்கும்
இப்பிஞ்சு பாலகர்கள் செய்திட்ட பாவமென்ன?
கொண்டாட்டக் களிப்பில் கூடித் திளைக்கும்
பாரீஸ், லண்டன் போன்ற பல நகரைவிட,
தரை மட்டமாகத் தகர்ந்து போய்விட்ட
லிஸ்போன் மட்டும்தான் நெறிகெட்ட நகரமோ?
லிஸ்போன் அழிந்துபட, பாரீஸில் களிநடமா?...

* * *

---

அதிர்தரும் இதற்குநும் எதிர்விடை யாது?
"அருளுரு வானவன் - தெருளுற மும்மைக்
காலமும் கடந்த வாலறி வன்னவன் -
வகுத்த நியதியின் மிகுத்த ஆணை
விதித்த தண்டனை உதித்ததன் விளைவிது!
"பொருந்துவது" எனவே இருந்துரைப் பீரோ?
"பழிதீர்த்துக் கொண்டனன், விழிதீயின் ஈசன்!
தத்தம் தீவினை நத்திட மாந்தர்
தம்முயிர் விலையா இம்முறை தந்தனர்"
என்றுநா உரைப்ப இன்றுநீர் துணிவிரோ!
"தாய்மடி நசுங்கிச் சேயுடல் குருதியில்
மிதப்புற, இவைசெய் விதுப்புறு பாவமென்?
உண்டாட்டுப் பயிலும் கொண்டாட்டுக் களிப்பில்
லண்டான்பா ரீசென மண்டுபன் மாநகர்
அன்ன யாவினும், சின்ன பின்னமாச்
சிதைந்த லிஸ் போன்இத் துதைந்தெழில் நகரம்
யாங்கனம் இழுக்கிற்று ஈங்கு?" எனச் சாற்றுமின்
இந்நகர் பாழ்பட, அந்நகர் பாரீஸ்
களிநடம் பயிலும்!

* * *

## (16) VOLTAIRE - 3
## ÉPIGRAMMES

Jean-François Boyer évèque espère que le pape Benoît XIV le nommerait cardinal, ce qui ne manque pas d'irriter Voltaire.

En vain la fortune s'apprête
À t'orner d'un lustre nouveau ;
Plus ton destin deviendra beau,
Et plus tu nous paraîtras bête.
Benoît donne bien un chapeau,
Mais il ne donne point de tête.

* * *

N'a pas longtemps, de l'abbé de Saint-Pierre
On me montrait le buste tant parfait
Qu'on ne sus voir si c'était chair ou pierre.
Tant le sculpteur l'avait pris trait pour trait.
Adonc restai perplexe et stupéfait,
Craignant en moi de tomber en méprise :
Puis dis soudain : « Ce n'est là qu'un portrait ;
L'original dirait quelque sottise. »

* * *





## (16) வொல்தேர் - 3
## நையாண்டி மடல்கள்

*[எவ்விதத் தகுதியும் அற்ற பொயே என்பவரை போப்பாண்டவர் சார்டினலாகப் பதவி உயர்வு அளிக்கப்போகிறார் எனும் செய்தி கேட்டவுடன் வொல்தேர் அவருக்கு எழுதிய மடல் ]*

"அதிர்ஷ்ட தேவதை தங்களுக்கு இப்போது
இன்னும் ஓர் ஏற்றத்தை அளிக்கப் போகிறதாமே!
ஐயோ பாவம்! வீண் வேலை!!
புகழ்ஏணியில் நீங்கள் மேலே செல்லச்செல்ல
மேலும் மேலும் வெளிப்படப் போவது, என்னவோ
உங்கள் மடமைதான்! என்ன செய்வது?
போப்பாண்டவர் பெனுவா தரக்கூடியது தலைக்கிரீடம் மட்டும்தான்.
புதிய தலையையா அவரால் படைத்துத் தரமுடியும்?

* * *

தூயவர் செயின்ட் பீட்டர் அவர்களின்
இடுப்பளவுச் சிலையொன்றை
எனக்குக் காட்டினார்கள்.
அது கல்லில் செதுக்கப்பட்டதா,
அல்லது சதையும் எலும்பும் உள்ள
நிஜமனிதர்தானா என
வித்தியாசமே தெரியவில்லை!
அந்த அளவுக்குச் சிற்பி அதை
அற்புதமாய் வடித்திருந்தார்!
வியப்பில் பிரமித்துப் போய்
நான் சிலையாய் உறைந்துபோனேன்.
பிறகுதான் பளிச்சென
நினைவொன்று வந்தது.
இது வெறுஞ் சிலையுருவம்தான்/
நிஜமனிதராயிருந்தால்
இவ்வளவு நேரமாய்
அசட்டுத்தனமாக, தத்துப்பித்தென்று
ஏதாவது உளறிக் கொட்டாமல்
அவரால் இருக்க முடியாதே!"

* * *

Savez-vous pourquoi Jérémie
A tant pleuré pendant sa vie?
C’est qu’en prophète il prévoyait
Qu’un jour Lefranc le traduirait.

* * *

*Epigramme sur la mort de M. d’Aube, qui avait la réputation d’être ennuyeux.*

«Qui frappe là ? dit Lucifer.
- Ouvrez, c’est d’Aube. » Tout l’enfer,
À ce nom, fuit et l’abandonne.

«Oh, oh! dit d’Aube, en ce pays
On me reçoit comme à Paris :
Quand j’allais voir quelqu’un, je ne trouvais personne.»

* * *





*Le Franc என்பவர் புனிதர் ழெரெமி நூல்கள் பலவற்றை ஹீப்ருவிலிருந்து மொழிபெயர்த்தவர். அவர் மொழிபொயர்ப்புத் திறனைக் கிண்டல் செய்வது இப்பாடல்:*

“புனிதர் ழெரேமி தம்
வாழ்நாள் முழுவதும்
அழுது புலம்பி நொந்து
வேதனையோடுயிர் நீத்தார்.
ஏன் தெரியுமா?
திரிகால ஞானி, தீர்க்கதரிசி அவர்!
தாம் எழுதிய நூல்கள்
வருங்காலத்தில் ஒரு நாள்
Le Franc ஆல், அந்தோ,
மொழிபெயர்க்கப்படப் போகின்றனவே
என்பதை அன்றே அறிந்துகொண்ட
காரணமாகத்தான்.“

* * *

*[D' Aube என்பவர் ஒரு ”படுபோர்” ஆசாமி. அவர் இறந்தபின் அவரைப் பற்றி வொல்தேர் எழுதிய கவிதை இது]*

“நரக லோகத் தலைவன் கேட்டான்:
”யாரங்கே கதவைத் தட்டுவது?” என்று
“நான் தான் D' Aube வந்திருக்கிறேன்/
கதவைத் திறவுங்கள்.“
இப்பெயர் கேட்ட மறுநொடியே
நரகலோகத்தவர் மூலைக்கொருவராய்
ஓடி ஒளிந்துகொண்டனர்!
D' Aube கூறினார்: “என்ன அதிசயம்?
இவ்வுலகம்கூடப் பாரீஸ் போல்தான் இருக்கிறது!
நான் நாடித் தேடிச் செல்பவர் எவரும்
இருப்பதில்லையே! என்ன விந்தையோ?“

* * *

*L'épigramme la plus célèbre contre Fréron est sans doute celle-ci :*

L'autre jour, au fond d'un vallon,
Un serpent piqua Jean Fréron.
Que pensez-vous qu'il arriva ?
Ce fut le serpent qui creva.

* * *

*Moins connue et pourant aussi humoristique est la réponse de l'intéressé « Aurèle » - Fréron :*

Un gros serpent mordit Aurèle;
Que croyez-vous qu'il arriva ?
Qu' Aurèle en mourut ? Bagatelle !
Ce fut le serpent qui creva.





*Fréron எனும் எழுத்தாளரை வொல்தேருக்குப் பிடிக்காது. அந்த "விஷமியான" மனிதரைக் கிண்டல் செய்யும் பாட்டு இதோ:*

"அன்றோரு நாள்
பொட்டல் வெளியதனில்
நச்சுப் பாம்பொன்று நறுக்கென்று கடித்தது,
நண்பர் ஃப்ரெரோனை.
நடந்ததென்ன தெரியுமோ?
ஐயோ பாவம் ! பொட்டென்று செத்து விழுந்தது
பாம்பு!"

* * *

*Aurèle Fréron இதே உவமையை வைத்து வொல்தேரைப் பாம்பாக்கிப் பதிலடி கொடுத்தார். அந்தப் பாட்டிலும் நயமிருக்கிறது.*

"நாக்கில் விஷமிக்க
நச்சுப் பாம்பொன்று
ஔரேலையும் தீண்டியது
உண்மைதான்/ ஆனால்
அவர் இறந்தொழிந்தார்
என்றா நினைக்கிறீர்கள்?
அதுதான் இல்லை/
இதெல்லாம் அவருக்குக் கொசுக்கடி மாதிரி.
செத்தது என்னவோ பாம்புதான்!"

* * *

## (17) ANDRÉ CHÉNIER (1762 – 1794)
## LES IAMBES

Comme un dernier rayon, comme un dernier zéphyr
Animent la fin d’un beau jour,
Au pied de l’échafaud j’essaye encor ma lyre.
Peut-être est-ce bientôt mon tour.
Peut-être avant que l’heure en cercle promenée
Ait posé sur l’émail brillant
Dans les soixante pas où sa route est bornée,
Son pied sonore et vigilant,
Le sommeil du tombeau pressera ma paupière.
Avant que de ses deux moitiés
Ce vers que je commence ait atteint la dernière,
Peut-être en ces murs effrayés
Le messager de mort, noir recruteur des ombres,
Escorté d’infâmes soldats,
Ébranlant de mon nom ces longs corridors sombres,
Où seul dans la foule à grands pas
J’erre, aiguisant ces dards persécuteurs du crime,
Du juste trop faibles soutiens,
Sur mes lèvres soudain va suspendre la rime;
Et chargeant mes bras de liens,
Me traîner amassant en foule à mon passage
Mes tristes compagnons reclus,
Qui me connaissaient tous avant l’affreux message,
Mais qui ne me connaissent plus.
Eh bien ! J’ai trop vécu. Quelle franchise auguste,
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
Allons, étouffe tes clameurs;
Souffre, ô coeur gros de haine, affamé de justice.
Toi, vertu, pleure si je meurs.

* * *



## (17) ஆந்த்ரே ஷெனியே (1762 - 1794)
## அஸ்தமனம்

அந்திமாலையின்ஒளிக்கதிரும் இளங்காற்றும்,
முடியப்போகும் பகல்பொழுதை
இறுதியாக மீண்டும் ஒரு முறை முத்தமிட்டுத் தழுவிச்
சிலிர்க்கச் செய்வது போல்,
தூக்குமேடையின் விளம்பில் நின்றுகொண்டு
கவிதை வீணையை மீட்டுகின்றேன் நான்.
அடுத்துப் போகவேண்டியவன் நானாகவும் இருக்கலாம்.
அறுபது முறை அடிமேல் அடிவைத்துத்
தன் வட்ட வரம்புக்குள் சுற்றுலா வலம்வரும் மணித்துளி
பளபளக்கும் தட்டின்மேல் தன் பாதத்தைப் பதித்து
ஒலியெழுப்பத் தப்பாது. அதற்கு முன்னதாகவேகூட
மீளா நீள்துயில் என் கண்ணிமையை மூடிடலாம்.
ஆவிகளை அழைத்துச் செல்ல யமதர்மன்,
கிங்கரராம் காவலர்கள் சூழவந்து,
இருள் சூழ்ந்த இச்சிறையின் நெடுந் தாழ்வாரச் சுவர்கள்
பயத்தால் நடுங்கிட, என் பெயர் கூவி அழைக்கப் போகின்றான்.
நானோ தனியாகக் கால்வீசி உலவிக்கொண்டிருக்கின்றேன்/
என் சொல்லம்புகளைச் சீவிக் கூர் தீட்டிக்கொண்டிருக்கின்றேன்.
நைந்தவை தாம் எனினும்
நிரபராதிகளுக்கு இவைதாமே ஊன்றுகோல்?
தொடங்கிய இக்கவிதை வரி என் உதட்டிலே உறைந்துபோய்
பாதியிலே நின்றிடச் செய்தாலும் செய்திடுவான் காலனவன்!
கைகளைக் கட்டி எனை இழுத்துச் செல்லும் வழியெல்லாம்,
துயரில் துவண்ட என் தோழர்கள் சிலரையும்
என்னுடன் சேர்த்து வண்டியில் வாரிச் செல்ல வந்திடுவான்.
குலைநடுங்கும் இச்செய்திக்கு முன் இவர்கள் அனைவருமே
எனை அறிந்தவர்தாம்! ஆனால்
இனி அவர்களுக்கு என்னைத் தெரியாது!
போகட்டும் ! நான் மிக அதிகம் வாழ்ந்துவிட்டேன்...
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
போதும் என் புலம்பல்கள்!
நீதிக்காக ஏங்கி நின்று வெறுப்பால் நிறைந்த என் நெஞ்சமே!
நீ துன்பப்படு.
ஓ தர்மமே ! நான் இறந்தால் நீ கண்ணீர் விடு!.

* * *

## (18) LAMARTINE (1790 - 1869)
## Le lac

Ainsi, toujours poussés vers de nouveaux rivages,
Dans la nuit éternelle emportés sans retour,
Ne pourrons-nous jamais sur l'océan des âges
Jeter l'ancre un seul jour?

Ô lac! l'année à peine a fini sa carrière,
Et près des flots chéris qu'elle devait revoir,
Regarde! Je viens seul m'asseoir sur cette pierre
Où tu la vis s'asseoir!

Tu mugissais ainsi sous ces roches profondes ;
Ainsi tu te brisais sur leurs flancs déchirés ;
Ainsi le vent Jetait l'écume de tes ondes
Sur ses pieds adorés.

Un soir, t'en-souvient-il? nous voguions en silence ;
On n'entendait au loin, sur l'onde et sous les cieux,
Que le bruit des rameurs qui frappaient en cadence
Tes flots harmonieux.

Tout à coup des accents inconnus à la terre
Du rivage charmé frappèrent les échos ;
Le flot fut attentif, et la voix qui m'est chère
Laissa tomber ces mots :

« O temps, suspends ton vol ! et vous, heures propices,
Suspendez votre cours !

. . .



## (18) லமார்த்தீன் (1790 - 1869)
## ஏரி

இதே போலத்தான் புதுப்புது கரைகள் நோக்கி ஓயாமல் தள்ளப்பட்டு
நிரந்தர இருட்சூழலில் திரும்பவே முடியாமல்
இழுத்துச் செல்லப்படும் நாங்கள்
காலமாம் பெருங்கடலில் நாளொன்றேனும்
நங்கூரம் பாய்ச்சி நின்றிருக்க இயலாதோ?

ஏரியே ! முழுதாய் ஆண்டொன்றும் போனதுவே !
இனிய உன் அலை காண மீண்டும்
அவள் இங்கு வந்திருக்கவேண்டும்.
ஆனால் பார்! அவள் அமர்ந்திருக்கக் கண்டாயே அதே கல்மேல்
நான் மட்டும் வந்தின்று தனியாய் அமர்ந்துள்ளேன் !

இதேபோல்தான் அன்றும்
இப்பாறைகள் ஆழத்தில் நீ ஆர்ப்பரித்துக்கொண்டிருந்தாய்,
இதேபோல்தான் இவற்றின் பிளவுற்ற இருபுறமும்
மோதிச் சிதறி நீரைத் தெளித்துக்கொண்டிருந்தாய்,
இதேபோல்தான் காற்றும் மிதக்கும் நுரைமலர் எடுத்து
அவள் புனித பாதங்களில் அர்ச்சித்துக்கொண்டிருந்தது.

நினைவிருக்கிறதா? மாலைப் பொழுதினில் அன்றொரு நாள்
நாங்கள் மௌனமாய்ப் படகில் உலாவந்தோம்
தூரத்தில் எங்கோ தொடுவானில்
சுருதி சேர்த்த நீரலைமேல் துடுப்புகள்
சீராகத் தாளமிடும் ஓசை.

திடீரென்று அப்போது இவ்வைய மறியாக் குரலொன்று
மயக்கத்தில் கட்டுண்ட கரைகளில் எதிரொலித்தது.
உற்றுக் கேட்டன நீரலைகள்.
என் அன்புக்குரிய அவ்வினிய குரல்
முத்தாய் உதிர்த்த சொற்களிவை :

" ஓ காலமே, பறந்து செல்வதைச் சற்றே நிறுத்து !
இனிய மணித்துளிகளே,
சற்றே நில்லுங்கள் ! . . .

Laissez-nous savourer les rapides délices
Les plus beaux de nos jours !

« Assez de malheureux ici-bas vous implorent :
Coulez, coulez pour eux ;
Prenez avec leurs jours les soins qui les dévorent ;
Oubliez les heureux.

« Mais je demande en vain quelques moments encore,
Le temps m’échappe et fuit ;
Je dis à cette nuit : « Sois plus lente » ; et l’aurore
Va dissiper la nuit.

« Aimons donc, aimons donc ! De l’heure fugitive,
Hâtons-nous, jouissons !
L’homme n’a point de port, le temps n’ a point de rive;
Il coule, et nous passons ! »

Temps jaloux, se peut-il que ces moments d’ivresse,
Où l’amour à longs flots nous verse le bonheur,
S’envolent loin de nous de la même vitesse
Que les jours de malheur ?

Hé quoi ! N’en pourrons-nous fixer au moins la trace?
Quoi ! passés pour jamais ? quoi ! tout entier perdus?
Ce temps qui le donna, ce temps qui les efface,
Ne nous les rendra plus?

. . .



எம் வாழ்வின் விரைந்தோடும் இன்பச் சுகபோகத்தை
துய்த்துக் களிக்க எமை விடுங்கள்.

துன்பத்தில் உழலும் எத்தனையோ மாந்தர்
இவ்வுலகில் உங்களிடம் மன்றாடி வேண்டுகின்றார்.
அதிவிரைவு வேகத்தை அவர்பால் காட்டுங்கள்.
அவர்தம் விடிவிலாத் துயரினையும்
சோக வாழ்வினையும் ஒருசேர முடித்திடுங்கள்.
இன்புற்றிருப்போரை மறந்திடுங்கள்.

இன்னும் சில நொடிகளுக்காக வீணே வேண்டி நின்றேன்
காலம் என் கட்டுக்கு அடங்காமல் பறக்கிறது.
இரவே, உன்னிடம் இறைஞ்சுகின்றேன்
மெல்லப்போ ! அந்தோ !
இரவை விழுங்கிட வைகறையும் வந்ததுவே !

காதலிப்போம் ! களித்திருப்போம் !
ஓடும் இன்பநொடிகளை அவசரமாய் அனுபவிப்போம் !
மனிதனுக்கு ஓய்ந்திருக்கத் துறையில்லை.
காலத்துக்கோ கரையில்லை.
அது ஓடிக்கொண்டே யிருக்கிறது.
நாம் போய்க்கொண்டேயிருக்கிறோம்.

காலமே ! உனக்குத்தான் எத்தனை பொறாமை ?
வற்றாத அருவியாய்க் காதல் எங்கள்மேல்
இன்பத்தைப் பொழிந்து போகத்தில் ஆழ்த்திடும்
இவ்வினிய மணித்துளிகள்
சோகமிகு நாள்கள் ஊர்ந்து நகர்வதுபோல்
ஏன் மெல்ல ஆடி அசைந்து செல்லக் கூடாதோ?

பின் என்ன ? சுவடுகளாய்க் கூட எதனையும்
யாம் பதிக்க இயலாதோ ? இறுதியாய்
முற்றிலுமாய் மறைந்துபோகத்தான் வேண்டுமோ ?
அளித்த அதே காலம் அழித்துப்
பறித்தவற்றைத் திரும்பத் தாராமல்
கொண்டு செல்லப் போகிறதோ ?

. . .

Eternité, néant, passé, sombre abîmes,
Que faites-vous des jours que vous engloutissez?
Parlez : nous rendrez-vous ces extases sublimes
Que vous nous ravissez ?

O lac ! rochers muets ! forêt obscure !
Vous que le temps épargne ou qu'il peut rajeunir,
Gardez de cette nuit, gardez, belle nature,
Au moins le souvenir !

Qu'il soit dans ton repos, qu'il soit dans tes orages,
Beau lac, et dans l'aspect de tes riants coteaux,
Et dans ces noirs sapins, et dans ces rocs sauvages
Qui pendent sur tes eaux !

Qu'il soit dans le zéphyr qui frémit et qui passe,
Dans les bruits de tes bords par tes bords répétés,
Dans l'astre au front d'argent qui blanchit ta surface
De ses molles clartés !

Que le vent qui gémit, le roseau qui soupire,
Que les parfums légers de ton air embaumé,
Que tout ce qu'on entend, l'on voit ou l'on respire,
Tout dise : «Ils ont aimé !»

* * *



நித்தியமே ! சூனியமே !
இறந்தகாலமே ! இருள்பாதாளமே !
எடுத்து விழுங்கும் நாட்களை யெல்லாம்
நீங்கள் என்னதான் செய்கின்றீர்கள் ? பதில் கூறுங்கள்,
எம்மிடமிருந்து தட்டிப் பறித்துச்செல்லும்
இன்பக்களிமிகு இவ்வினிய நேரங்களை
மீண்டும் எம்மிடம் திரும்பித் தருவீர்களா ?

தீர்த்தக்கரையே ! மௌனப்பாறைகளே !
இருள் அடர்ந்த காடுகளே !
காலம் உங்களைத் தீண்டுவதில்லை
ஒருகால் தொட்டாலும்
அது உங்களைப் புதுப்பிக்க வல்லது
எழில்மிகு இயற்கையே ! இவ்விரவின் நினைவை
மட்டுமாவது பத்திரமாய்ப் போற்றிவை.

எழில்சூழ் ஏரியே ! இது உன் அமைதியின்கண் உறையட்டும்,
வீசும் புயல் காற்றுக்குள் இதனை வைத்துக்கொள்,
மலர்ந்து சிரிக்கும் குன்றுகளிடை இருக்கட்டும்.
நெடிதுயர்ந்த சவுக்கமரத் தோப்பின் இருட்டினிலோ,
அல்லது நீரின்மேல் எட்டிப்பார்த்துத்
தொங்கும் இப்பாறைக்குள்ளோ,
எங்கோ ஓரிடத்தில் இதை வைத்துக் காப்பாற்று.

சிலிர்த்து உலாவரும் இளந்தென்றல் காற்றுக்குள்ளோ,
கரைக்குக் கரை மோதி எதிரொலிக்கும் ஓசைக்குள்ளோ,
உன் நீரின்மேல் தண்ணொளியைப் பாலாய் பொழிந்து வரும்
வெள்ளி முகங்கொண்ட வெண்ணிலவாம் அதனுள்ளோ,
எங்கோ ஓரிடத்தில் பத்திரமாய்க் காத்துவை.

விசித்து அழும் காற்று, விம்மும் நாணல்
காற்றிலே கலந்து மெல்லக் கமழும் நறுமணம்,
கேட்பவை, காண்பவை, நுகர்பவை என அனைத்தும்
நாங்கள் காதலித்தோம் என்பதற்குக்
கட்டியம் கூறட்டும்.

* * *

## (19) LAMARTINE - 2
## ODE SUR LES RÉVOLUTIONS

Marchez! l'humanité ne vit pas d'une idée !
Elle éteint chaque soir celle qui l'a guidée,
Elle en allume une autre à l'immortel flambeau :
Comme ces mots vêtus de leur parure immonde,
Les générations emportent de ce monde
Leurs vêtements dans le tombeau.

* * *

## (20) LAMARTINE - 3
## Isolement

Que me font ces vallons, ces palais, ces chaumières,
Vains objets dont pour moi le charme est envolé ?
Fleuves, rochers, forêts, solitudes si chères,
Un seul être vous manque, et tout est dépeuplé

Quand la feuille des bois tombe dans la prairie,
Le vent du soir s'élève et l'arrache aux vallons;
Et moi, je suis semblable à la feuille flétrie :
Emportez-moi comme elle, orageux aquilons

* * *



## (19) லமார்த்தீன் - 2
## புரட்சிக்கொள்கைகள்

ஓ மனிதா!
நடந்து கொண்டேயிரு,
மானுடம் ஒரே ஒரு கருத்தை மட்டுமே
நம்பித்தானா வாழ்ந்துகொண்டிருக்கிறது ?
நேற்றுவரை அதனுக்கு வழிகாட்டிக்கொண்டிருந்த
கருத்தெனும் தீபச்சுடரை இன்று மாலை அணைத்துவிட்டது!
அழிவறியாப் பேரொளியில்
வேறொன்றினை ஏற்றுகிறது இன்று.
ஒவ்வொரு தலைமுறையும்
இவ்வுலகிலிருந்து தான் உடுத்திய முடைநாற்ற மெடுக்கும்
ஜோடனைகளால் அலங்கரிக்கப்பட்ட
வெற்று கோஷங்கள் எனும் ஆடைகளையும் தன்னுடன்
கல்லறைக்கு எடுத்துச்சென்று விடுகிறது.

* * *

## (20) லமார்த்தீன் - 3
## தனிமை

இந்த மலைகள் மாளிகைகள், குடில்கள், இவற்றால் யாது பயன்?
எனக்கு இனி இவை வீண் சடப்பொருள்களே!
இவற்றுடன் ஒட்டியிருந்த ஈர்ப்பு எங்கோ பறந்து போய்விட்டதே!
நதிகளே, பாறைகளே, இனிமை மிகு தனிமை சூழ் காடுகளே,
ஒரே ஒரு ஜீவன்தான் இங்கே குறைகிறது ஆயினும்
அனைத்தும் வெறுமைநிறை பாலையாய்க் காண்கிறதே!

பழுத்த இலையொன்று மரத்திலிருந்து புல்தரையில் விழ
மாலைக்காற்றதனை உலகினின்று எடுத்து உயரே
எங்கோ தூக்கிச் சென்றுவிடும்.
நானும் சருகாய்ப் போன இலைபோல்தானே!
சுழன்றடிக்கும் சூறாவளியே,
என்னையும் அவ்வாறே தூக்கிச் செல்!

* * *

## (21) LAMARTINE - 4
## La Vigne et la Maison

Printemps après printemps, de belles fiancées
Suivirent de chers ravisseurs,
Et, par la mère en pleurs sur le seuil embrassées,
Partirent en baisant leurs sœurs.

Puis sortit un matin pour le champ où l'on pleure
Le cercueil tardif de l'aïeul,
Puis un autre, et puis deux; et puis dans la demeure
Un vieillard morne resta seul!

Puis la maison glissa sur la pente rapide
Où le temps entasse les jours;
Puis la porte à jamais se ferma sur le vide,
Et l'ortie envahit les cours!

* * *





## (21) லமார்த்தீன் - 4
## பூர்வீக வீடு

ஆண்டொன்று தவறாமல் வசந்தம் மலர்ந்தவுடன்,
வீட்டு வாசல் வரை கண்களில் நீர் மல்க
பெற்றவள் அணைத்துவர, தங்கையர் முத்தமிட,
மணக்கோலம் பூண்ட அழகிய மங்கையர்
தம் கைப்பிடித்த கணவரைப்
பின்தொடர்ந்தேகிச் சென்றனர்.

பிறகு ஒருநாள் காலை
காலனும் மறந்துவிட்ட பெரியவரின் பிணம் சுமந்து
பாடை ஒன்று இடுகாடு ஏகியது !
பிறகு அதனைத் தொடர்ந்து இன்னொன்று,
பிறகு மேலும் இரண்டு,
பிறகு அவ்வில்லத்தில்
சோகத்தை முழுவதுமாய்ச் சுமந்துகொண்டு
முதியவர் ஒருவர் மட்டும் இருந்துவந்தார் தனியாக !

பிறகு காலம் நாள்களைக் கட்டுக்கட்டாய் விழுங்க
அவ்வீடும் சரிவுநோக்கி வேகமாய்ச் சாய்ந்தது
காலி வீட்டின் வாயிலை
ஒரு கதவு மூடியது நிரந்தரமாய்!
காஞ்சொறிச் செடிகள் எங்கும் மண்டின!

* * *



## (22) VIGNY (1797 – 1863)
## La mort du loup

...Le Loup vient et s'assied, les deux jambes dressées
Par leurs ongles crochus dans le sable enfoncées.
Il s'est jugé perdu, puisqu'il était surpris,
Sa retraite coupée et tous ses chemins pris;
Alors il a saisi, dans sa gueule brûlante,
Du chien le plus hardi la gorge pantelante
Et n'a pas desserré ses mâchoirs de fer,
Malgré nos coups de feu qui traversaient sa chair
Et nos couteaux aigus qui, comme des tenailles,
Se croisaient en plongeant dans ses larges entrailles,
Jusqu'au dernier moment où le chien étranglé,
Mort longtemps avant lui, sous ses pieds a roulé.
Le Loup le quitte alors et puis il nous regarde.
Les couteaux lui restaient au flanc jusqu'à la garde,
Le clouaient au gazon tout baigné dans son sang;
Nos fusils l'entouraient en sinistre croissant.
Il nous regarde encore, ensuite il se recouche,
Tout en léchant le sang répandu sur sa bouche,
Et, sans daigner savoir comment il a péri,
Refermant ses grands yeux, meurt sans jeter un cri.

. . .



## (22) விஞ்ஞி (1797–1863)
## ஓர் ஓநாயின் இறப்பு

வந்த ஓநாய் அமர்ந்தது/
குத்திட்டு நின்ற முன்னங்கால்களின் நகம்
மணலில் புதைந்திருந்தன.
'சற்றும் எதிர்பாராமல் சிக்கிக்கொண்டுவிட்டோம்,
இனித் தப்ப முடியாது, உறைவிடம் துண்டிக்கப்பட்டு
அனைத்து வழிகளும் அடைபட்டுவிட்டன"
என்பதை உணர்ந்துகொண்டது. அப்போது
தீப்பிழம்பாய்த் தகிக்கும் தன் வாயினால்
எதிரே துணிந்து வந்த வேட்டை நாய் ஒன்றின்
துடிக்கும் குரல்வளையைப் பாய்ந்து கவ்வியது.
எங்கள் துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட குண்டுகள்
அதன் உடலைத் துளைத்தன. கூரிய கத்திகள்
அகன்ற அதன் குடல்புகுந்து இடுக்கிப் பிடியாய்க் குத்திட்டு நின்றன.
இருப்பினும் அதன்வாய் இரும்புப் பிடி
சற்றும் தளரவில்லை இறுதிவரை. முதலில் இறந்தது நாய்தான்.
குரல்வளை நெறிக்கப்பட்டுச் செத்த நாயின் பிணம்
தன் காலின்கீழே துவண்டு விழுந்த பின்தான்,
அதை நழுவ விட்டு எங்களை நிமிர்ந்து நோக்கியது ஓநாய்.
அதன் உடலைத் துளைத்துச் சென்ற கத்திகள்
தரையுடன் சேர்த்து அதனைத் தைத்துவிட்டன.
வழிந்தோடிய அதன் இரத்தம் புல்தரையை நனைத்தது.
அரைவட்ட வடிவமாய் அதனைக் குறிவைத்துக்
குவிந்திருந்தன எம் துப்பாக்கிகள்!
இன்னமும் அது எங்களைப் பார்த்துக்கொண்டேயிருந்தது!
அதன்பின், நீட்டிப் படுத்துத் தன்வாயில் வழிந்த ரத்தத்தை நக்கியது.
பிறகு தான்இறந்தது எப்படி என்பதைக்கூட
தெரிந்துகொள்ள விரும்பாதது போல்
தன் பெரிய விழிகளை இறுதியாய் மூடி உயிர் நீத்தது,
வாயிலிருந்து ஓசையெதுவும் எழுப்பாமல்.

. . .

II

J'ai reposé mon front sur mon fusil sans poudre,
Me prenant à penser, et n'ai pu me résoudre
A poursuivre sa Louve et ses fils qui, tous trois,
Avaient voulu l'attendre, et, comme je le crois,
Sans ses deux louveteaux la belle et sombre veuve
Ne l'eût pas laissé seul subir la grande épreuve;
Mais son devoir était de les sauver, afin
De pouvoir leur apprendre à bien souffrir la faim,
A ne jamais entrer dans le pacte des villes
Que l'homme a fait avec les animaux serviles
Qui chassent devant lui, pour avoir le coucher,
Les premiers possesseurs du bois et du rocher.

III

Hélas! ai-je pensé, malgré ce grand nom d'Hommes,
Que j'ai honte de nous, débiles que nous sommes!
Comment on doit quitter la vie et tous ses maux,
C'est vous qui le savez, sublimes animaux!

. . .



II

நான் வெற்றுத் துப்பாக்கிமீது என் நெற்றியை ஊன்றி நின்றேன்.
பின் நினைவு திரும்பிடவே, பெட்டை ஓநாயையும்
குட்டிகள் இரண்டினையும் தொடர்வதா வேண்டாமா
எனத் தீர்மானிக்க முடியவில்லை, அவை மூன்றும்
இறந்த இவ்வோநாயை எதிர்பார்த்துக் காத்திருக்குமோ?
குட்டிகள் மட்டும் இல்லையெனில்
கைம்மை அடைந்த அவ்விளம்பெட்டை
தன் ஏற்றினைத் தனியே விட்டுப்
பிரிந்திருக்குமா இக்கொடிய சோதனைக் கட்டத்தில்?
குட்டிகளை வளர்ப்பதே அதன் கடமை!
காடுமலை வெளியின் பூர்வீக வாசிகளை
வேட்டையாட மனிதனுக்கு முன்னோடிச் செல்ல
அடிமைப்புத்தி கொண்ட சில நாய்கள்!!
வீட்டில் அவை தங்க இடங்கொடுத்து அதற்கிது கைம்மாறு
என அந்நாய்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட மனித இனம்!
“அவன் வாழும் நகர்ப்புறம் தலைகாட்டக் கூடாது/
பசி வாட்டினும் பொறுத்துக்கொள்“ என இக்குட்டிகளுக்கு
கற்றுத்தர வேண்டுமே தாய்ஓநாய்!

III

ஐயகோ! மனிதன்எனப் பெயர்தான் பெரிது!
நான் வெட்கித் தலை குனிகிறேன், நம் பலவீனம் கண்டு.
ஏற்றமிகு மிருகப் பிறவிகளே!
இவ்வாழ்க்கையினையும் அதன் துயர்களையும்
எப்படித்துறக்கவேண்டும்
என்று உங்களுக்கல்லவோ நன்கு தெரிந்திருக்கிறது ?

. . .

A voir ce que l'on fut sur terre et ce qu'on laisse,
Seul le silence est grand; tout le reste est faiblesse.
- Ah! je t'ai bien compris, sauvage voyageur,
Et ton dernier regard m'est allé jusqu'au coeur!
Il disait : « Si tu peux, fais que ton âme arrive,
A force de rester studieuse et pensive,
Jusqu'à ce haut degré de stoïque fierté
Où, naissant dans les bois, j'ai tout d'abord monté.
Gémir, pleurer, prier est également lâche.
Fais énergiquement ta longue et lourde tâche
Dans la voie où le Sort a voulu t'appeler,
Puis après, comme moi, souffre et meurs sans parler. »

* * *





இப்புவியில் எப்படி இருந்தோம் என்பதையும்
எதை விட்டுச் செல்கிறோம் என்பதையும்
எண்ணிப் பார்க்குங்கால், மௌனமே பெரிது/
மற்ற அனைத்தும் பலவீனம்!
காட்டில் திரியும் விலங்கே, நான் உன்னை நன்கு புரிந்துகொண்டேன்/
அதுவும் உன் கடைசிப்பார்வை
என் இதயத்தில் ஆழப் பதிந்துவிட்டதே!
அது எனக்குக் கற்பித்த பாடமிது:
"காட்டிலே பிறந்த நான் காட்டிய கம்பீரமிகு கலங்காத்
திண்மை எனும் மிக உயர்ந்த நிலையினை ஆராய்ந்து சிந்தித்து,
முடிந்தால் உன் ஆன்மா அதனை அடைவதற்கு முயற்சிசெய்'
புலம்புதல் அழுதல் தொழுதல் இவையனைத்தும் கோழைத்தனம் !
உனக்கு எப்படி விதிக்கப்பட்டதோ, அந்த வழியினில்
கடினமான நீண்ட உன் பணியினைத் தளர்வின்றிச் செய்.
அதன்பின் என்னைப் போல் துன்பம் அனுபவித்து
எதுவும் பேசாமல் இறந்துபோ!"

* * *



## (23) VICTOR HUGO (1802-1885) - 1
## Napoléon II

I

Et lui! l'orgueil gonflait sa puissante narine;
Ses deux bras jusqu'alors croisés sur sa poitrine,
S'étaient enfin ouverts!
Et l'enfant, soutenu dans sa main paternelle,
Inondé des éclairs de sa fauve prunelle,
Rayonnait au travers!
Quand il eut bien fait voir l'héritier de ses trônes
Aux vieilles nations comme aux vieilles couronnes,
Éperdu, l'oeil fixé sur quiconque était roi,
Comme un aigle arrivé sur une haute cime,
Il cria tout joyeux avec un air sublime :
- L'avenir ! l'avenir! l'avenir est à moi!

II

Non, l'avenir n'est à personne!
Sire, l'avenir est à Dieu!
A chaque fois que l'heure sonne,
Tout ici-bas nous dit adieu.
L'avenir! avenir ! mystère!
Toutes les choses de la terre,
Gloire, fortune militaire,
Couronne éclatante des rois,
Victoire aux ailes embrasées,
Ambitions réalisées,
Ne sont jamais sur nous posées
Que comme l'oiseau sur nos toits!

(Les chants du crépuscule V-I)

* * *



## (23) விக்தோர் உய்கோ - 1 (1802 - 1885)
## காலம் என் கையில்

*மாவீரன் நப்போலியன் போனபார்ட்டுக்கு முதற்குழந்தை 1811 ஆம் ஆண்டு பிறந்தது. பாரீஸ் நகர் மாதாகோவிலில் பாப்டிஸம் முடிந்தவுடன் அக்குழந்தையை கையிலே எடுத்துத் தூக்கிக் குழுமியிருந்த மக்கள்கூட்டத்திற்குத் தம்முடைய வாரிசைப் பெருமையோடு காட்டினார் மாமன்னர்.*

அதோ நப்போலியன் !
செருக்கால் விம்மியது அவர் எடுப்பான நாசி !
இதுவரை மார்பின்மேல் கட்டியிருந்த அவர்கரமிரண்டும்
இப்போது முதன்முறையாகப் பிரிந்து நீண்டன!
நீண்ட அக்கரங்கள்மீது ஒரு சின்ன சிசு,
தந்தையின் செங்கண்ணில் ஒளிர்ந்த
மின்னலில் பொலிவோடு ஜொலித்தது!
முன்னாளில் தனி முடியரசாகவும் தனி நாடாகவும்
இருந்த அனைத்திற்கும் தம் பேரரசின் வாரிசை
உயரே தூக்கிக் காண்பித்தார்.
பின்னர், உணர்ச்சி மேலிட
தம் கண்களால் முன்னாள் மன்னர்களைக் குத்திட்டு நோக்கி,
உயர்ந்த சிகரத்தில் வந்தமர்ந்த பருந்தினைப் போல்,
ஆனந்தமிகுதியில் பூரித்து ஆர்ப்பரித்தார்:
"எதிர்காலம் ! ஆம் எதிர்காலம் என்கையில்! நாளை எனதே!

II

இல்லை! எதிர்காலம் யார் கையிலுமில்லை!
பேரரசே! எதிர்காலம் இறைவன்கையில்!
ஒவ்வொருமுறை கடிகாரம் மணியடிக்கும்போதும்,
இவ்வுலகில் அனைத்தும்
நமக்கு விடைகொடுத்து அனுப்புகின்றன.
எதிர்காலம் ! எதிர்காலம் ! யாரே அறிவார் அதன் மர்மம்!
உலகின்கண் புகழ், போர்க்களத்து வீரசாகசங்கள்,
மன்னர்தம் ஒளி முடிகள்,
வெற்றிப் பறவையின் ஜ்வாலை மிகு இறக்கைகள்,
நிறைவேறிய நம் பேராசைக் கனவுகள் - இவையனைத்தும்
நம்மைச் சார்ந்து வந்து பொருந்தியிருப்பதெல்லாம்
நம்வீட்டுக் கூரைமீது வந்தமரும் குருவிகள் போல் தான்!

* * *

## (24) VICTOR HUGO - 2
## Ultima verba

... Quand même grandirait l'abjection publique
A ce point d'adorer l'exécrable trompeur;
Quand même l'Angleterre et même l'Amérique
Diraient à l'exilé : - Va-t'en ! nous avons peur!
Quand même nous serions comme la feuille morte,
Quand, pour plaire à César, on nous renîrait tous;
Quand le proscrit devrait s'enfuir de porte en porte,
Aux hommes déchiré comme un haillon aux clous;
. . . . . . . . . . . .
Je ne fléchirai pas! Sans plainte dans la bouche,
Calme, le deuil au coeur, dédaignant le troupeau,
Je vous embrasserai dans mon exil farouche,
Patrie, ô mon autel ! Liberté, mon drapeau!
. . . . . . . . . . . .
Oui, tant qu'il sera là, qu'on cède ou qu'on persiste,
O France! France aimée et qu'on pleure toujours,
Je ne reverrai pas ta terre douce et triste,
Tombeau de mes aïeux et nid de mes amours!

. . .



## (24) விக்தோர் உய்கோ - 2
## சூளுரை

*மூன்றாம் நெப்போலியன் என்ற சர்வாதிகாரியால் நாடுகடத்தப்பட்டார் கவிஞர் - அவருடைய சூளுரைதான் இக்கவிதை. எட்டு ஆண்டுகளுக்குப்பின் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டபோதும், "அவன் ஆட்சி கவிழ்ந்தபின்தான் என் தாய் நாட்டில் காலடிவைப்பேன்" என்ற சபதத்தில் உறுதியாக நின்றார், உய்கோ. இதற்கு அவர் 19 ஆண்டுகள் காத்திருக்கவேண்டியதாயிற்று !*

ஈனப் பயலாம் இந்த ஏமாற்றுக்காரனைப் போற்றித்
துதிபாடும் நிலைக்குக் கூட இழிந்த இம்மாக்கள் கூட்டம்
தாழ்ந்து தன் தகவிழந்தாலும்,
நாடு கடத்தப்பட்டவனைப் பார்த்து
"அமெரிக்க இங்கிலாந்தரசு 'பயத்தில் கிலி அடைந்தோம் நாங்கள்/
வேறெங்கோ நீபோ' என்றே தாம் உரைத்திட்டாலும்,
காய்ந்த இலைச் சருகைப் போலக் காற்றினில் அலை பாய்ந்திட்டாலும்,
அரக்கனை மகிழ்விக்க எண்ணி எம்மை யார் புறக்கணித்தாலும்,
புகுந்த இல்லங்கள்தோறும், "புகல் இல்லை" எனப் போக்குற்றாலும்,
ஆணியில் சிக்கிக் கிழிந்த ஆடையாய்ச் சீர்குலைந்திட்டாலும்,
. . . . . . . . . . . . . . . .
அடி பணிய மாட்டேன் நான்!
புலம்பாது அமைதி காத்துத் துக்கத்தை மனத்தில் தேக்கி
மந்தை நிகர் மாந்தர்தம்மை மனத்தினால் ஒதுக்கித் தள்ளிப்
புனிதக் கோயிலாம் தாயகமே!
சுதந்திர தேவியே! மணிக்கொடியே!
வாட்டும் வனவாசத்தின்கண்ணும்
உன்னையே நான் தழுவி நிற்பேன்.
. . . . . . . . . . . . . . . . .
ஆம்! அவன் அங்கிருக்கும் வரை,
தளர்த்தினாலும் சரி, இறுக்கினாலும் சரி
ஓ ஃபிரான்ஸ் திருநாடே!
கண்கள் பனித்திடாமல் நினைக்கவொண்ணா என்தாயகமே!
எந்தையும் தாயும் வாழ்ந்து மடிந்த என் பொன்னாடே!
என் காதல் நினைவுகளை அடைகாத்த எழிற் கூடே!
துயருற்ற உன் இனிய பூமியை மீண்டும் நான் காண்கிலேனே!

. . .

Je ne reverrai pas ta rive qui nous tente,
France! hors le devoir, hélas! j'oublierai tout,
Parmi les éprouvés je planterai ma tente.
Je resterai proscrit, voulant rester debout.
J'accepte l'âpre exil, n'eût-il ni fin ni terme,
Sans chercher à savoir et sans considérer
Si quelqu'un a plié qu'on aurait cru plus ferme,
Et si plusieurs s'en vont qui devraient demeurer.
Si l'on n'est plus que mille, eh bien, j'en suis! Si même
Ils ne sont plus que cent, je brave encor Sylla;
S'il en demeure dix, je serai le dixième;
Et s'il n'en reste qu'un, je serai celui-là!

* * *





எம்மை ஈர்க்கும் உன் கடற்கரையைக் காண்கிலேன் நான்
இன்பத் தாயகமே, எதையும் நான் மறக்கத் தயார்,
என் கடமையைத் தவிர!
இடர்ப்பட்டோர் இடையே ஒரு குடிலை யான்
அமைத்துக்கொள்வேன்
நான் நிமிர்ந்து நிற்க விரும்புவதால்
நாடு கடத்தப்பட்டவனாகவே நான் தொடர்ந்து வாழ்ந்திருப்பேன்
கொடிய இந்நிலைக்கு முடிவோ விடிவோ இல்லை
என்றிட்ட போதிலும் இதையேற்க நான் தயார்/
திடம் எனக் கருதப்பட்ட எவர் வளைந்து போனபின்னும்
நிலைத்து நிற்க வேண்டியவர் பலர் ஓடிப்போயினுங்கூடக்
கவலையில்லை ! -
காரணம் ஏதும் நான் கண்டறிய விரும்பிலேன்
ஆயிரத்துக்கும் அதிகமானோர் அடிநிலைத்து நிற்பரேல்
அவருள் ஒருவன் யான் என நீடித்து நின்றிருப்பேன்
நூறுபேர் மட்டுமே எஞ்சினர் என்றபோதும்
அரக்கனை எதிர்த்தேதான் ஆர்ப்பரிக்கு மென்குரல்
பத்தேபேர் மட்டுமே பாக்கி என்றபோதும்
அந்தப் பத்தாவது நபராக நான்தான் இருந்திடுவேன்!
எஞ்சியவர் ஒரே ஒருவர் மட்டுந்தான் என்றால்
அந்த ஒருவனாக இருக்கப்போவதும் நானேதான்!

* * *



## ㉕ VICTOR HUGO - 3
## OCEANO NOX

Oh! Combien de marins, combien de capitaines
Qui sont partis joyeux pour des courses lointaines,
Dans ce morne horizon se sont évanouis !
Combien ont disparu, dure et triste fortune,
Dans une mer sans fond, par une nuit sans lune,
Sous l'aveugle océan à jamais enfouis !

Combien de patrons morts avec leur équipage !
L'ouragan de leur vie a pris toutes les pages,
Et d'un souffle il a tout dispersé sur les flots !
Nul ne saura leur fin dans l'abîme plongée;
Chaque vague en passant d'un butin s'est chargée;
L'une a saisi l'esquif, l'autre les matelots.

Nul ne sait votre sort, pauvres têtes perdues!
Vous roulez à travers les sombres étendues,
Heurtant de vos fronts morts des écueils inconnus.
Oh ! que de vieux parents qui n'avaient qu'un seul rêve
Sont morts en attendant tous les jours sur la grève
Ceux qui ne sont pas revenus !

. . .



## ㉕ விக்தோர் உய்கோ - 3
## நடுக்கடலில்... நள்ளிரவில்...!

மகிழ்ச்சி பொங்க நெடும் பயணம் மேவிச் சென்ற
எத்தனை மீனவர்கள், எத்தனை மாலுமிகள், அந்தோ,
துயர் மிகு அத்தொடு வானில் தொலைந்தே
போய்விட்டனரே! சோகமிகு விதியின் கொடுமையிது!
நிலவில்லா மையிருட்டில் ஆழங்காணா அலைவெளியில்
கண்ணிலாக் கருங்கடலில் எண்ணிலா மாந்தர்கள்
நிரந்தரமாய் நீருக்குள் அழுந்திப் புதைந்து போயினரே!

தலைவனும் அவன் குழுவும் ஒருசேரப் படகோடு
மூழ்கி மடிந்த கதை எத்தனையோ!
சுழன்றடித்த சூறாவளி அவர்தம் வாழ்வின் ஏடுகள்
அனைத்தையும் கிழித்தது ஒரே மூச்சில்;
அலைகள்மேல் விட்டெறிந்தது ஒரே வீச்சில்;
அதல பாதாளத்தில் அமிழ்ந்த அன்னவர்க்கு நேர்ந்தகதி
என்னவென்று யார் அறிவார்? திரண்டெழுந்த
அலைகள், தோணியை ஒன்றும் மீனவரை ஒன்றும்,
தமக்குப் பிணையாய்ப் பரிசாய் இழுத்துச் சென்றுவிட்டனவே!

சிதைந்து போன தலைகளே!
உங்களுக்கு உற்ற கதி யார் அறிவார்?
பாதாள இருள்வெளியில் உருண்டு புரண்டு உலகறியாப்
பாறைகளை உயிரற்ற உங்கள் நெற்றியால் முட்டித்
தள்ளிக்கொண் டிருக்கிறீர்களே! நாளொன்று தவறாமல்
கடலோரம் வந்து வாராத உங்கள் வருகையை
எதிர்பார்த்துத் தம் ஒரேகனவும் நிறைவேறா
ஏமாற்றத்தில் உயிர்நீத்த வயோதிகப் பெற்றோர்கள் எத்தனை பேர்!

. . .

On s’entretient de vous parfois dans les veillées,
Maint joyeux cercle, assis sur des ancres rouillées,
Mêle encor quelque temps vos noms d’ombre couverts
Aux rires, aux refrains, aux récits d’aventure,
Aux baisers qu’on dérobe à vos belles futures,
Tandis que vous dormez dans les goëmons verts.

On demande : Où sont ils? Sont-ils rois dans quelque île?
Nous ont-ils délaissés pour un bord plus fertile ?
Puis votre souvenir même est enseveli.
Le corps se perd dans l’eau, le nom dans la mémoire.
Le temps, qui sur toute ombre en verse une plus noire,
Sur le sombre océan jette le sombre oubli.

Bientôt des yeux de tous votre ombre est disparue,
L’un n’a-t-il pas sa barque et l’autre sa charrue?
Seules, durant ces nuits où l’orage est vainqueur,
Vos veuves aux fronts blancs, lasses de vous attendre,
Parlent encor de vous en remuant la cendre
De leur foyer et de leur coeur !

. . .



கண்விழித்திருக்கும் இரவுகளில் சில சமயம்
உங்களைப் பற்றிய பேச்சு வரும்
கரைமணலில் அரைகுறையாய்ப் புதைந்து கிடக்கும்
பழைய துருப்பிடித்த நங்கூரம் ஒன்றினைச்
சுற்றி யமர்ந்து கூடிக் களித்திருக்கும் சில நாளில்
பழைய பாடல்கள், கேலிப் பேச்சுகள், வீர சாகசங்கள்,
உங்கள் காதலிக்குக் கிட்டாத முத்தங்கள்
ஆகிய இவற்றுடன் இணைத்துப் பிணைத்து
நிழல் படிந்த உங்கள் பெயரும் பேசப்படும், சில காலம் வரை.
நீங்களோ, ஆழ்கடல் அடியில், பச்சைப்பாசிப் படுக்கையில்
படுத்துறங்கிக்கொண்டிருப்பீர்கள்!

யாரோ கேட்பார்: எங்கே அவர்கள்? ஏதேனும் தீவொன்றின்
மன்னராகிவிட்டனரோ?
நம்மைக் கைவிட்டு இதனினும் செழுமைமிகு இடம்
வேறெங்கும் போய்ச் சேர்ந்துவிட்டனரோ?
காலப்போக்கில் உங்கள் நினைவும் கூட மறைந்துவிடும்.
உப்புத் தண்ணீரில் உடல் கரைந்துபோயிற்று,
உள்ளத்து நினைவிலிருந்து பெயர் கரைந்துபோயிற்று.
ஒவ்வொரு நிழலின்மீதும் அதனினும் கரியதோர்
நிழலைக்கொட்டி மெழுகி மூடிவிடும் காலனவன்
இருள் படர்ந்த கடலின்மேல் நினைவகற்றும்
மறதியெனும் போர்வையினைப் போர்த்திட்டான்.

அனைவர் கண்களிலிருந்தும் விரைவில்
உங்கள் நிழலும் மறைந்துவிடும்.
அவரவர்க்கு அவரவர் பிழைப்பு இருக்கிறதே!
சிலருக்கு ஏர்க்கலப்பை, சிலருக்கு கட்டுமரம்.
ஆனாலும் புயல்காற்று பயங்கரமாய் கொக்கரிக்கும்
இரவுகளில் நெற்றி வெளிறிய உங்கள் விதவைகள்
மாத்திரம் தனிமையின் வெறுமையில்
உங்களுக்காகவே காத்திருந்து காத்திருந்து
சலித்துப்போன பின்னும் கூட
உங்களைப் பற்றித் தான் பேசுகின்றனர்,
கணப்புத் தணல்மீது படிந்த சாம்பலையும்
தம் நினைவுகள்மீது படிந்த சாம்பலையும் கிளறியபடி! . . .

Et quand la tombe enfin a fermé leurs paupières,
Rien ne sait plus vos noms, pas même une humble pierre
Dans l'étroit cimetière où l'écho nous répond,
Pas même un saule vert qui s'effeuille à l'automne,
Pas même la chanson naïve et monotone
Que chante un mendiant à l'angle d'un vieux pont !

Qù sont ils, les marins sombrés dans la nuit noire?
Oh flots, que vous savez de lugubres histoires!
Flots profonds redoutés des mères à genoux!
Vous nous les racontez en montant les marées,
Et c'est ce qui vous fait ces voix désespérées
Que vous avez le soir quand vous venez vers nous!

* * *



காலப்போக்கில் கல்லறை அவர்கள் கண்களையும்
மூடியபின் உங்கள் பெயர் சொல்ல எதுவுமே இராது.
எங்கள் குரல் எதிரொலிக்கும் சிறு இடுகாட்டில்
எந்தவொரு மூலைமுடுக்கிலும் சாதாரண
ஒரு நடுகல் கூட இல்லையே, உங்களை நினைவு கூர!
குளிர்காலத்தில் உங்களுக்காக இலை உதிர்க்க
அழுமூஞ்சிச் செடிகூட இங்கில்லை.
தெருக்கோடித் திருப்பத்தில் பழையதோர் பாலத்தில்
அமர்ந்து ஒரு பிச்சைக்காரன் சமதொனியில் சோகமாய்
இழுத்து முனகும் தெம்மாங்குப் பாடலில்
உங்கள் நினைவு கூரும் வரி ஒன்றுகூட இல்லையே!

இருள்சூழ் நள்ளிரவில் நடுக்கடலில் மூழ்கி
மறைந்துபோன அக்கடலோடிகள்தாம் எங்கே?
ஆர்ப்பரிக்கும் அலைகளே! எத்தனைச் சோகக்
கதைகளைத்தான் நீங்கள் சுமந்துகொண்டிருக்கிறீர்கள்?
ஆழ்கடலே! தாய்மார்கள் உள்ளங்களை உலுக்கி
மண்டியிடச் செய்யும் பாழ்கடலே! நீரேற்ற நாள்களில்
திரண்டெழுந்து வந்தெமக்கு அச்சோகக்
கதைகளைத்தான் சொல்லிச் செல்கின்றீர்கள்
ஆம், மாலைப் பொழுதினிலே கரையேறி எமைநேக்கி வரும்போது
உங்கள் குரல் தழுதழுத்து ஓலமிட அச்சோகம்தான் காரணம்!

* * *

## (26) VICTOR HUGO - 4
## MORS

Je vis cette faucheuse. Elle était dans son champ.
Elle allait à grands pas, moissonnant et fauchant,
Noir squelette laissant passer le crépuscule,
Dans l'ombre où l'on dirait que tout tremble et recule,
L'homme suivait des yeux les lueurs de la faux,
Et les triomphateurs sous les arcs triomphaux
Tombaient; elle changeait en désert Babylone,
Le trône en échafaud et l'échafaud en trône,
Les roses en fumier, les enfants en oiseaux,
L'or en cendre et les yeux des mères en ruisseaux.
Et les femmes criaient : « Rends-nous ce petit être :
Pour le faire mourir, pourquoi l'avoir fait naître? »
Ce n'était qu'un sanglot sur terre, en haut, en bas;
Des mains aux doigts osseux sortaient des noirs grabats;
Un vent froid bruissait dans les linceuls sans nombre;
Les peuples éperdus semblaient sous la faux sombre
Un troupeau frissonnant qui dans l'ombre s'enfuit;
Tout était sous ses pieds deuil, épouvante et nuit.

Derrière elle, le front baigné de douces flammes,
Un ange souriant portait la gerbe d'âmes.
(Les Contemplations)

* * *



## (26) விக்தோர் உய்கோ - 4
## கடிவாளம்

கதிர் அறுக்கும் அப்பெண்ணைக் கண்டேன்/
இந்நிலம் அவளுக்குச் சொந்தம்.
கரிய எலும்புக்கூடாய்,
மாலை மயங்கி இருள்சூழ்ந்த பின்னரும்
எட்டி நடைபோட்டுக் கதிர்அறுத்துக் கட்டுகின்றாள்!
அனைத்தும் நடுங்கி ஒடுங்கிய நிழல்களூடே
அவள் அரிவாள் மின்னுவதைப்
பின் தொடர்ந்து சென்றது மானுடனின் பார்வை.
வெற்றி மண்டபம் வாழ் மாவீரர் வீழ்ந்தனர்!
பபிலோன் நகரைப் பாலைவனம் ஆக்கினாள்!
அரியணையைத் தூக்கு மேடையாக்கி,
தூக்கு மேடையை அரியணை ஆக்கினாள்!
ரோஜா மலர்களைக் குப்பைமேடாக்கி,
மழலைச் செல்வங்களைப் பறவைகள் ஆக்கி,
செம்பொன்னை எரி சாம்பலாக்கி,
தாய்மார்கள் கண்களைக் குளமாக்கினாள்!
பெண்களின் அழுகுரல்கள்:
"பிஞ்சுக் குழந்தையினைத் திருப்பித் தந்துவிடு,
இப்போதே இறந்துபோகத்தான் வேண்டுமெனில்
இவர்களைப் பிறப்பித்தது ஏன்?
அங்கிங்கெனாதபடி அவனியெங்கும் அழுகை ஓலம்!!
எலும்பாய் மெலிந்த விரல்கொண்ட கைகள்
இருள் எனும் சவப்படுக்கைகளை விரித்துப்போட்டன!
எண்ணற்ற பாடைகள் ஊடே உடல் சிலிர்க்கும் குளிர்காற்று.
பாழும் அரிவாள்முன் பதைபதைக்கும் மனிதர் கூட்டம்
நடுங்கிச் சிதறியோடும் மந்தையைப் போல்
காரிருளிற் சென்று ஒடுங்கியது.
அவள் கால்வைத்த இடமெல்லாம்
சாக்காடு, ஓலம். அந்தகாரம்!

அவளைப் பின்தொடர்ந்து
இதந் தரும் மென்சுடர் நெற்றியில் ஒளிரப்
புன்முறுவல் பூத்த ஒரு தேவதை
புத்துயிர்கள் கொத்தொன்றைப்
பூச்செண்டென ஏந்திவந்தாள்!

## (27) VICTOR HUGO - 5

Veni, vidi, vixi
J’ai bien assez vécu, puisque dans mes douleurs
Je marche, sans trouver de bras qui me secourent,
Puisque je ris à peine aux enfants qui m’entourent,

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

Puisque je ne suis plus réjoui par les fleurs;
Puisque l’espoir serein dans mon âme est vaincu;
Puisqu’en cette saison des parfums et des roses,
O ma fille ! j’aspire à l’ombre où tu reposes,
Puisque mon coeur est mort, j’ai bien assez vécu.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

Maintenant, mon regard ne s’ouvre qu’à demi;
Je ne me tourne plus même quand on me nomme;
Je suis plein de stupeur et d’ennui, comme un homme
Qui se lève avant l’aube et qui n’a pas dormi.

Je ne daigne plus même, en ma sombre paresse,
Répondre à l’envieux dont la bouche me nuit.
O Seigneur! ouvrez-moi les portes de la nuit,
Afin que je m’en aille et que je disparaisse!

* * *



## (27) விக்தோர் உய்கோ - 5
## வந்தேன் ! கண்டேன் ! மடிந்தேன் !

நான் வாழ்ந்தது போதும்!
ஏனெனில், இப்போதெல்லாம்
துன்பங்களைச் சுமந்து நான் நடக்கும்போது
தாங்கிப் பிடித்தென்னைத் தூக்கிவிட
எந்த ஒரு கரமும் நீள்வதில்லை!
சூழ்ந்து நிற்கும் குழந்தைகளைக் காணும்போதும்
மலர்ச்சிரிப்பு என்முகத்தில் அரும்பவில்லை!

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

வாச நறுமலர்களைக் கண்டால்கூட
முன்போல் மகிழ்ச்சியெனக்குத் தோன்றவில்லையே!
அமைதியின் நம்பிக்கை என் மனத்தளவில் தோற்றுவிட்டது!
அழகிய ரோஜாக்களும், மணம்கமழும் மலர்களும்
குலுங்கிச் சிரிக்கும் இவ்வசந்த காலத்திலும்,
பார் மகளே, நீ உறங்கும் நிழலைத்தான் நான் நாடிவந்தேன்
என் இதயம்தான் இறந்துவிட்டதே!
நான் வாழ்ந்தது போதும்!

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

இப்போதெல்லாம் என்விழிகள்
இவ்வுலகைக் காணக்கூடப் பாதிதான் திறக்கின்றன.
என் பெயர்சொல்லி யாரேனும் அழைத்தாலும்
நான் திரும்பிப் பார்ப்பதில்லை!
இரவெல்லாம் உறங்காமல்
விடியலுக்கு மிகமுன்பே எழுந்தவன்போல்
அசதியும் அலுப்பும் என்னை ஆட்கொண்டுவிட்டன.

பொறாமை கொண்டெனை ஏசித் தூற்றும்
புல்லர்க்குப் பதிலடி கொடுக்கக்கூட
இருள்சூழ்ந்த ஏதோஅலுப்பு இடந்தரவில்லையே
இறைவா! எனக்கு அந்தகார இருட்கதவைத் திறந்துவிடு
அங்கே சென்று நான் மறையவேண்டும்!

* * *

## (28) VICTOR HUGO - 6
## LA LUNE

Ah! vous voulez la lune? où dans le fond du puits?
Non; dans le ciel. Eh bien, essayons, je ne puis
Et c' est ainsi toujours, chers petits, il vous passe
Par l'esprit de vouloir la lune, et dans l'espace
J'étends mes mains, tâchant de prendre au vol phoebé
L'adorable hasard d'être aïeul est tombé
sur ma tête, et m'a fait une douce félure
Je sens en vous voyant que le sort put m'exclure
Du bonheur, sans m'avoir tout à fait abattu
Mais causons. Voyez-vous, vois-tu Georges, vois-tu
jeanne? Dieu nous connaît et sais ce qu'ose faire
Un aïeul, car il est lui-même un peu grand-père
Ce bon Dieu, qui toujours contre nous se défend,
Craint ceci : Le vieillard qui veut plaire ã l'enfant :
Il sait que c'est ma loi qui sort de votre bouche
Et que j'obéirais; il ne veut pas qu'on touche
Aux étoiles et c'est pour en être sûr
Qu'il les accroche aux clous les plus hauts de l'azur

- L'art d'être grand-pere.

* * *



## (28) விக்தோர் உய்கோ - 6
## நிலா

ஓ! உங்களுக்கு நிலா வேண்டுமா? எந்த நிலா?
இக்கிணற்றின் ஆழத்தே மிதக்கிறதே, அதுவா?
இல்லையா? அதோ வானத்தில் தவழும் அம்புலியா?
இதோ எட்டிப் பிடிக்கப் பார்க்கின்றேன்
அடாடா முடியவில்லை. என்னருமைக் குழந்தைகளே!
எப்போதும் இப்படித்தான் திடீரென உங்களுக்கு
அம்புலி வேண்டுமெனத் தோன்றிவிடுகிறது,
நானும் விண்நோக்கி என்கைகளை வீசுகின்றேன்,
பறந்து செல்லும் அச்சந்திரனைப் பிடிக்கத்தான்.
தாத்தாவாக இருக்கும் பேறு என் தலையில் விழுந்து ஓர்
இன்ப விரிசலையும் ஏற்படுத்தியிருக்கிறதே!
முழுவதுமாய் என்னை வீழ்த்தியும் விடாமல்
இன்பத்தை எனக்குக் கிட்டவும் விடாமல்
செய்திருக்க முடியும் அவ்விதியால்/
நல்லவேளை அப்படிச்செய்யவில்லை என்பதை
உங்களைக் காணுந்தோறும் உணர்கின்றேன்.
இதோ பார் ழோர்ழ், இதோ பார் ழான்
நான் சொல்வதைக் கேளுங்கள்:
இறைவன் நம்மை நன்கறிவார்
அதிலும் ஒரு தாத்தாவாக இருப்பவர் எந்த அளவுக்குத்
துணிந்து செயல்படுவார் என்று நன்றாகவே தெரியும், காரணம்
அவரும் ஒருவகையில் ஒரு தாத்தாதானே ! எப்போதும்
நம்மிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்கிறார்.
அவருக்கென்ன பயம் தெரியுமோ?
குழந்தை சொல் கேட்கும் தாத்தாவிடம்தான் பயம்!
ஆம்! நீங்கள் வாய்திறந்து சொல்வதையெல்லாம்
ஆணையாக ஏற்று அதன்படி நான் செய்திடுவேன்
என்று அவர்க்கு நன்றாகத் தெரியும்.
வானத்து நிலவையும் நட்சத்திரங்களையும்
யாரும் தொடக்கூடாது என்பதவர் விருப்பம். அதனால் தான்
வானத்தில் எட்டாத உச்சியில் உயரே
ஆணி அடித்து அவற்றை மாட்டிவைத்துவிட்டார்

*(தாத்தாவாக இருக்கும் கலை)*

***

## (29) VICTOR HUGO - 7
## Sur une barricade

Sur une barricade, au milieu des pavés
Souillés d’un sang coupable et d’un sang pur lavés
Un enfant de douze ans est pris avec des hommes.
-Es-tu de ceux-là toi? – L’enfant dit: Nous en sommes.
-c’est bon, dit l’officier, on va te fusiller.
Attends ton tour – L’enfant voit des éclairs briller,
Et tous ses compagnons tomber sous la muraille.
Il dit à l’officier: Permettez vous que j’aille
Rapporter cette montre à ma mère chez nous?
- Tu veux t’enfuir ? – je vais revenir – Ces voyous
ont peur ! où loges – tu? – Là près de la fontaine
Et je vais revenir monsieur le Capitaine.
- Va-t’en drôle ! L’enfant s’en va-Piège grossier!
Et les soldats riaient avec leur officier
Et les mourants mêlaient à ce rire leur râle;

. . .



## (29) விக்தோர் உய்கோ - 7
## சாலை மறியல்

[*ஃபிரஞ்சுப் புரட்சியின் உச்ச கட்டம். கலவரம் முற்றி 25000 பாரீஸ் மக்கள் வன்முறைக்குப் பலி/ ஆயினர் இது பற்றிய ஒரு கவிதை:*]

மறியலுக்காகத்
தடுப்புகள் குவிந்திருந்த அச்சாலையைக்
கொடியவர்கள் குருதிக்கறைப்படுத்தி அசுத்தமாக்க,
அதைக் கழுவியது போல் மெழுகியிருந்தது
நிரபராதிகளின் இரத்தம்!
சில பெரியவர்களுடன் சேர்ந்து பிடிபட்டான்
பன்னிரண்டு வயதுப் பாலகன் ஒருவன்!
“நீயும் இவர்களைச் சேர்ந்தவன்தானா?“
“ஆம் நாங்கள் எல்லோரும் ஒன்றே’ என்றான் பையன்.
“ரொம்ப சரி, உன்னையும் சுடவேண்டியதுதான்/
உன் முறை வரும்வரை காத்திரு“ என்றார் அதிகாரி.
சிறுவன் கண்முன்னே, மின்னல்கள் பளிச்சிட்டன.
சுவர்முன் சுருண்டு விழுந்தனர் சகாக்கள்.
“இக்கைக்கடிகாரத்தை வீட்டில் என் அம்மாவிடம்
கொடுத்துவிட்டு வர அனுமதிப்பீர்களா?“ பையன் கேட்டான்.
“ஓடிப்போய்விடலாம் என்று பார்க்கிறாயா?“
“இல்லை திரும்பி வந்திடுவேன்“
“இந்தப் பொறுக்கிகளுக்குப் பயம்“ - “எங்கே உன்வீடு?“
“அந்தத் தண்ணீர்க்குழாய் அருகில்“,
“நான் திரும்பிவந்திடுவேன் கேப்டன் அவர்களே,“
“போய்த்தொலை“ - பையன் சென்றான். முரட்டு வலை.
இராணுவ வீரர்கள்
அதிகாரிகளுடன் சேர்ந்து
”கெக்கெக்கே” என உரக்க இளித்தனர்.
செத்துக்கொண்டிருந்தோர் முனகல்
அச்சிரிப்போடு கலந்தது.

. . .

Mais le rire cessa, car soudain l’enfant pâle
Brusquement reparut, fier comme Viala,
Vint s’adosser au mur et leur dit : me voilà.
La mort stupide eut honte et l’officier fit grâce

(L’année terrible)

* * *





சட்டென நின்றது சிரிப்பு.
பாலன்ன வெண்முகத்துப் பாலகன்
பட்டெனத் தோன்றினான்.
வியாலாவைப்* போல கம்பீரமாய்ச் சென்று
முதுகைச் சுவருடன் முட்டி நின்று
”இதோ நான் தயார்” என்றான்.
மதிகெட்ட மரணம் வெட்கியது.
அதிகாரி அவனை விடுவித்தார்.

(பயங்கரமான ஆண்டு)

* * *

** வியாலா - புரட்சியை ஒடுக்கவரும் மன்னரின் படைகள் ஆற்றைக் கடந்து வருவதைத் தடுத்திடவேண்டிப் பாலத்தைத் தகர்த்துக்கொண்டிருக்கும்போது சுடப்பட்டு இறந்து வரலாற்றில் இடம் பெற்ற பதின்மூன்று வயது இளம்புரட்சிவீரன்.*

## (30) MUSSET (1810-1857)
## Tristesse

J'ai perdu ma force et ma vie,
Et mes amis et ma gaîté;
J'ai perdu jusqu' à la fierté
Qui faisait croire à mon génie.

Quand j'ai connu la Vérité,
J'ai cru que c'était une amie;
Quand je l'ai comprise et sentie,
J'en étais déjà dégoûté.

Et pourtant elle est éternelle,
Et ceux qui se sont passés d'elle
Ici-bas ont tout ignoré.

Dieu parle, il faut qu'on lui réponde.
Le seul bien qui me reste au monde
Est d'avoir quelquefois pleuré.

* * *



## (30) முய்செ (1810-1857) - 1
## சோகம்

வலிமையைத் தொலைத்துவிட்டேன்
வாழ்க்கையைத் தொலைத்துவிட்டேன்
நண்பர்களைத் தொலைத்துவிட்டேன்
மகிழ்ச்சியைத் தொலைத்துவிட்டேன்
என் மேதைமையில் நான் வைத்திருந்த தன்னம்பிக்கை எனும்
செருக்கைக் கூட இழந்துவிட்டேன்.

சத்தியம் எனக்கு அறிமுகம் ஆனபோது
அதனை உற்றதோர் சகி என நினைத்தேன் /
அதைப் புரிந்துகொண்டு உணர்ந்தபோது
எனக்கு அதன்மேல் வெறுப்பு வந்துவிட்டது.

ஆனாலும் அது சாசுவதமானது.
அதைப் புறக்கணித்துச் சென்றவர் அனைவரும்
இவ்வுலகில் முழுஅறியாமையில் உழன்றார்.

இறைவர் பேசுகின்றார்.
அவருக்குப் பதில் சொல்லி ஆகவேண்டும் !
இவ்வுலகில் எனக்கிருக்கும் ஒரே சொத்து
"நான் சிலமுறை அழுதிருக்கிறேன்" என்பது மட்டும்தான்.

* * *

## (31) MUSSET - 2
## Le Pélican

Lorsque le pélican, lassé d'un long voyage,
Dans les brouillards du soir retourne à ses roseaux,
Ses petits affamés courent sur le rivage
En le voyant au loin s'abattre sur les eaux.
Déjà, croyant saisir et partager leur proie,
Ils courent à leur père avec des cris de joie
En secouant leurs becs sur leurs goitres hideux.
Lui, gagnant à pas lents une roche élevée,
De son aile pendante abritant sa couvée,
Pêcheur mélancolique, il regarde les cieux.
Le sang coule à longs flots de sa poitrine ouverte ;
En vain il a des mers fouillé la profondeur ;
L'Océan était vide et la plage déserte ;
Pour toute nourriture il apporte son coeur.
Sombre et silencieux, étendu sur la pierre,
Partagent à ses fils ses entrailles de père,
Dans son amour sublime il berce sa douleur,
Et, regardant couler sa sanglante mamelle,
Sur son festin de mort il s'affaisse et chancelle,
Ivre de volupté, de tendresse et d'horreur.

. . .



## (31) முய்சே - 2
## பெலிகன் பறவை

*[கவிஞனை ஒரு பெலிகன் பறவைக்கு உவமையாக்கி முய்சே எழுதியிருக்கும் ஒரு கவிதையிலிருந்து]*

அந்திமாலைப் பனிமூட்டம் அவனியை இருட்டடிக்க,
நீண்ட பயணத்தால் அலுத்துக் களைத்திட்ட
பெலிகன் ஒன்று தன் கூட்டுக்குத் திரும்பியது.
நீரில் அது பாய்ந்து மேலெழுந்த வேகத்தைத்
தூரத்தே கண்ட அதன் குஞ்சுகள்,
கரையோரம் பசியுடன் எதிர்நோக்கி ஓடிவந்து
இரையைக் கொத்திப் பகிர்ந்துண்டு களிப்பதுபோல்
கற்பனையில் அப்போதே கண்டு மகிழ் கூச்சலுடன்
அலகின் கீழ் தொங்கும் இரைப்பை அசைந்தாட,
வந்த பறவையினை ஆவலோடு நெருங்கின.
மெல்ல அடிவைத்து உயர்ந்த ஒரு பாறைமேல்
நடந்து வந்தமர்ந்த பெரிய பறவை
தொங்கும் தன் இறக்கையால் குஞ்சுகளை உடன்அணைத்துச்
சோகமிகு மீனவன்போல் வானத்தை நோக்கியது.
பிளந்த அதன் மார்பகத்தின் பீறிட்ட இரத்தவெள்ளம்!
கடலினுள் மூழ்கித் தேடிய முயற்சி வீண்.
கடலுக்குள் மீன் முதல் எதுவும் கிடைக்கவில்லை.
கரையிலும் ஏதும் இரையில்லை என்செய்ய?
குஞ்சுகள் பசிக்குணவாய்க் கொடுத்து மகிழ்ந்திடவே
அதன் இதயம்தான் அன்றி வேறில்லை! பசியாற்ற
மௌனமாய்ச் சோகமாய்ப் பாறையிலே படுத்து
மீனில்லாத் தன் அலகை அகலத் திறந்து
தன் நெஞ்சின் ஊனையே குஞ்சுகளுக்குணவாக்கி
உன்னத பாசத்தில் உடல் வேதனை ஊஞ்சலாட
மார்பகம் பெருகும் குருதியைப் பொழிதரவே,
ஆசைப் பாசம் அளித்த கொடும்போதையினால்
தன் மரண விருந்தில் துவண்டு தள்ளாடியது.

. . .

Mais parfois, au milieu du divin sacrifice,
Fatigué de mourir dans un trop long supplice,
Il craint que ses enfants ne le laissent vivant ;
Alors il se soulève, ouvre son aile au vent,
Et, se frappant le coeur avec un cri sauvage,
Il pousse dans la nuit un si funèbre adieu,
Que les oiseaux des mers désertent le rivage,
Et que le voyageur attardé sur la plage,
Sentant passer la mort, se recommande à Dieu.

La nuit de Mai

* * *





தெய்வீக உயிர்த்தியாகம் ! நீண்டு தொடரும்
சித்திரவதை ! அவ்வதை தந்த வேதனையாற்
சோர்வுற்ற அப்பெலிகன், குஞ்சுகள் தன்னை
குற்றுயிராய் விட்டுவிடுமோ என்றஞ்சி
எழுந்து காற்றில் விரித்தது இறக்கைகளை/
காட்டுக் கத்தலுடன் தன் மார்பின்மேல் அடித்தது.
இறுதிப் பயணத்தின் சோகமிகு அலறல்
கேட்ட கடற்பறவையெலாம் அரண்டோடி மறைந்தன.
கரையோரம், நேரம் போனதே தெரியாமல்
தனித்து விடப்பட யாரோ ஒரு பயணி
மரணம் தன் முன்னே செல்வதையுணர்ந்து
இறுதிவணக்கத்தை இறைவனுக்குச் செலுத்தி நின்றான்

மே மாத இரவு

* * *



## (32) MARCELINE DESBORDES - VALMORE
## (1786 – 1859)
## Qu’en avez-vous fait?

Vous aviez mon coeur,
Moi, j’avais le vôtre :
Un coeur pour un coeur;
Bonheur pour bonheur!

Le vôtre est rendu,
Je n’en ai plus d’autre,
Le vôtre est rendu,
Le mien est perdu!

La feuille et la fleur
Et le fruit lui-même,
La feuille et la fleur,
L’encens, la couleur :

Qu’en avez-vous fait,
Mon maître suprême?
Qu’en avez-vous fait,
De ce doux bienfait?

Comme un pauvre enfant
Quitté par sa mère,
Comme un pauvre enfant
Que rien ne défend,

Vous me laissez là,
Dans ma vie amère;
Vous me laissez là,
Et Dieu voit cela!

. . .



## (32) மர்சலீன் தெபோர்த் வால்மோர் (1786 - 1859)
## அதை என்ன செய்தீர்கள்?

என் இதயம் உங்களிடம்
உங்கள் இதயம் என்னிடம்
இதயப் பரிமாற்றம்
இன்பப் பரிமாற்றம்

உங்களுடையதைத் திருப்பித் தந்துவிட்டேன்
என்னிடம் வேறு எதுவும் இல்லை
உங்களுடையதைத் திருப்பித் தந்துவிட்டேன்
என்னுடையது? அதைக் காணோம்

இலையும் மலரும்
அத்துடன் பழமும் தான்
இலையும் மலரும்
சுகந்தம் எழில் வண்ணம்

அதை என்ன செய்தீர்கள்
ஒப்பற்ற என் நாயகனே?
என்ன செய்தீர்கள்
அந்த இனிய நற்செயலை?

தாயால் கைவிடப்பட்ட
ஓர் அனாதைக் குழந்தையைப்போல்
தற்காப்பு எதுவும் அற்ற
ஓர் அபலைக் குழந்தையைப்போல்,

என்னை இப்படி கை விட்டு விட்டீர்களே!
கசந்து போன என் வாழ்வுடன்
இப்படி என்னை கை விட்டுவிட்டீர்களே!
தெய்வமும் இதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது!

. . .

Savez-vous qu’un jour
L’homme est seul au monde?
Savez-vous qu’un jour
Il revoit l’amour?

Vous appellerez,
Sans qu’on vous réponde;
Vous appellerez,
Et vous songerez!...

Vous viendrez rêvant
Sonner à ma porte;
Ami comme avant,
Vous viendrez rêvant.

Et l’on vous dira :
« Personne!... elle est morte. »
On vous le dira;
Mais qui vous plaindra?

* * *





உங்களுக்குத் தெரியுமா? உலகில்
எந்த மனிதனும் ஒரு நாள் தனிமையில் உழல்வான்.
உங்களுக்குத் தெரியுமா ஒரு நாள்
அவன் காதலை மீண்டும் உணர்வான்

நீங்கள் அழைப்பீர்கள்
யாரும் உங்களுக்குப் பதிலளிக்க மாட்டார்கள்.
நீங்கள் அழைப்பீர்கள்
அப்போது நினைவு கூர்வீர்கள்...!

கற்பனைகளோடு வந்து
என் வீட்டுக் கதவைத் தட்டுவீர்கள்/
பழைய நண்பனாகக்
கற்பனைகளைச் சுமந்துகொண்டு

உங்களிடம் சொல்வார்கள்:
“யாருமில்லை...! அவள் இறந்து விட்டாள்“
என்று உங்களிடம் சொல்வார்கள். ஆனால்
உங்களிடம் அனுதாபம் காட்டப்போவது யாரோ?

* * *

## 33 MARCELINE DESBORDES - VALMORE - 2
## Les roses de saadi

J’ai voulu ce matin te rapporter des roses;
Mais j’en avais tant pris dans mes ceintures closes
Que les noeuds trop serrés n’ont pu les contenir.

Les noeuds ont éclaté. Les roses envolées
Dans le vent, à la mer s’en sont toutes allées.
Elles ont suivi l’eau pour ne plus revenir;

La vague en a paru rouge et comme enflammée.
Ce soir, ma robe encore en est tout embaumée...
Respires-en sur moi l’odorant souvenir.

* * *



## 33 மர்சலீன் தெபோர்த் வால்மோர் - 2
## மடி நிறைய மலர்கள்

இன்று காலை உனக்கு ரோஜா மலர்கள் கொண்டுதர நினைத்தேன்
நிறைய அவற்றை அள்ளி என் மடியில் இறுகக் கட்டிக்கொண்டேன்
மிக அதிகமாகச் சேர்த்துவிட்டேன் போலும் மடி கொள்ளவில்லை

முடிச்சு அவிழ்ந்து போயிற்று; - மலர்கள் பறந்து போயின;
காற்றிலே பறந்து அவையனைத்தும் கடலுக்குச் சென்று விட்டன.
நீரோடு போய்விட்டன திரும்பிவாராதபடி/

அவற்றின் வண்ணத்தால் அலை செந்நிறத் தீப்பிழம்பானது
இன்று மாலை என் உடையெல்லாம் இன்னமும் ரோஜாவின் நறுமணம் ...
அந்நறுமணத்தின் நினைவை என்மேல் நுகர்ந்துபாரேன்.

* * *

## (34) GÉRARD DE NERVAL (1808-1855)
## LE POINT NOIR

Quiconque a regardé le soleil fixement
Croit voir devant ses yeux voler obstinément
Autour de lui, dans l'air, une tache livide.

Ainisi, tout jeune encore et plus audacieux,
Sur la gloire un instant j'osai fixer les yeux:
Un point noir est resté dans mon regard avide.

Depuis, mêlée à tout comme un signe de deuil,
Partout, sur quelque endroit que s'arrête mon oeil,
Je la vois se poser aussi, la tache noire ! –

Quoi, toujours ? Entre moi sans cesse et le bonheur !
Oh! c'est que l'aigle seul – malheur à nous, malheur !
Contemple impunément le Soleil et la Gloire.

(odelettes)

* * *





## (34) ழெரார் த நெர்வால் (1808 - 1855)
## கறுப்புப் புள்ளி

கதிரவனையே ஒருவர் உற்று நோக்கிக்கொண்டேயிருந்தால்,
அவர்கண் எதிரே, காற்று வெளியினிலும்
திரும்பும் திசையெங்கிலும் ஏதோ ஒரு வெள்ளைப் புள்ளி
தொடர்ந்து வட்டமிட்டுக்கொண்டிருப்பது போல் தோன்றும்.

அதேபோல இளமைப் பருவத்தில் மிகுந்த துணிச்சலுடன்
என் பார்வையைச் சற்றே புகழின்மேல் படியவிட்டேன்
கறுப்புப்புள்ளியொன்று என் ஆவல்மிகு பார்வையில் நிலைத்து
விட்டது.

அப்போதிருந்து என்பார்வை படிகின்ற எந்தவொரு இடத்திலும்
அந்தக் கறுப்புப்புள்ளியும் உடன்வந்து அமர்ந்து விடுகிறது
அனைத்திலும் கலந்துவிட்ட துக்கத்தின் அடையாளமாய்

எப்போதுமா? ஆம் எனக்கும் இன்பத்துக்கும் குறுக்கே தவறாமல்!
ஓ மனிதர்களாகிய நமக்கு இது, ஐயகோ துயரச் செய்தி
காரணம் கழுகு, ஆம் கழுகு மட்டும்தான்
ஆதவனையும், புகழையும் தனக்கு ஏதும்
பாதிப்பின்றிப் பார்த்து ரசிக்கவல்லது.

* * *



## (35) THEOPHILE GAUTHIER (1811 – 1872)
## FUMÉE

Là-bas, sous les arbres s’abrite
Une chaumière au dos bossu;
Le toit penche, le mur s’effrite,
Le seuil de la porte est moussu.

La fenêtre, un volet la bouche;
Mais du taudis, comme au temps froid
La tiède haleine d’une bouche,
La respiration se voit :

Un tire-bouchon de fumée,
Tournant son mince filet bleu,
De l’âme en ce bouge enfermée
Porte des nouvelles à Dieu.

* * *





## (35) தெயோஃபீல் கொத்தியே (1811 – 1872)
## புகை

அதோ அம்மரங்களுக்குக் கீழே
கூனியின் முதுகெனக் குவிந்த கூரையுடன்
ஒரு குடிசை;
சாய்ந்த கூரை
காரை பெயரும் சுவர்
பாசி படர்ந்த வாயிற்படி

ஒரு பலகை மூடிய சன்னல்;
குளிர் காலத்தில் வாய்வழியே வரும்
வெம்மையான மூச்சுக் காற்றைப்போல்
அக்குடில் சுவாசிப்பதைக்காண முடிகிறது.

மெல்லிய நீலப்
புகைச் சுருள் ஒன்று
நூலிழைபோல் சுழன்று எழும்பி
இக்குடிசையில் அடைந்து கிடக்கும்
ஜீவன் பற்றிய செய்திகளை
தெய்வத்துக்கு எடுத்துச் செல்கிறது.

* * *



## (36) LECONTE DE LISLE
## 1818 – 1894

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
En un creux du bois sombre interdit au soleil
ll s'affaisse, allongé sur quelque roche plate ;
D'un large coup de langue il se lustre la patte ;
ll cligne ses yeux d'or hébétes de sommeil ;

Et, dans l'illusion de ses forces inertes,
Faisant mouvoir sa queue et frissonner ses flancs,
ll rêve qu'au milieu des plantations vertes,
ll enfonce d'un bond ses ongles ruisselants
Dans la chair des taureaux effarés et beuglants.
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

Le rêve du jaguar

* * *





## (36) லக்கோந்த் த லீல் (1818 - 1894)
## சிறுத்தையின் கனவு

“இருண்ட கானகத்தில் ஒளி நுழையாத ஓர் இடுக்கில்
தட்டைப் பாறையொன்றின்மீது தன் உடல் ஒட்டி
நீட்டிப் படுத்து நீண்ட நாவைச் சுழற்றித்
தன் பாதம் பளபளக்கப் பலமுறையும் தான் நக்கித்
தூக்க மயக்கத்தால் துவண்ட தன்னுடைய
பொன்நிறக் கண்களைப் புலரவே சிமிட்டியது/

செயலின்றித் தன்வலிமை திரண்டுள்ள சீர்மையில்
வாலை அசைத்து விலாப்புறங்கள் சிலிர்க்கப்
பசுமை நிறைந்த பழனக் காட்டுஊடே
மிரண்டலறி யோடும் மாட்டின் மிடற்றிடைக்
குருதி வழிந் தோடத்தன் கூரிய நகங்களை
ஆழப் புதைப்பது போல் கனவொன்று கண்டது.“

* * *



## (37) BAUDELAIRE (1821 – 1867)
## Chant d'automme

Bientôt nous plongerons dans les froides ténèbres;
Adieu, vive clarté de nos étés trop courts!
J'entends déjà tomber avec des chocs funèbres
Le bois retentissant sur le pavé des cours.

Tout l'hiver va rentrer dans mon être : colère,
Haine, frissons, horreur, labeur dur et forcé,
Et, comme le soleil dans son enfer polaire,
Mon coeur ne sera plus qu'un bloc rouge et glacé.

J'écoute en frémissant chaque bûche qui tombe;
L'échafaud qu'on bâtit n'a pas d'écho plus sourd.
Mon esprit est pareil à la tour qui succombe
Sous les coups du bélier infatigable et lourd.

Il me semble, bercé par ce choc monotone,
Qu'on cloue en grande hâte un cercueil quelque part...
Pour qui? – C'était hier l'été; voici l'automne!
Ce bruit mystérieux sonne comme un départ.

(Les Fleurs du Mal)

* * *



## (37) பொதலேர் (1821 - 1867)
## கார்கால கீதம்

குளிர்மிகு அந்தகாரத்தில் இதோ மூழ்கப்போகிறோம்/
சிறுத்துக் குறுகிய எம் வசந்தகாலத்தின் சுடரொளியே,
சென்று வா!
கொல்லைப் புறத்தில் வெட்டிச் சாய்க்கப்படும் மரக்கிளைகளின்
நெய்தல்பறைக்கொட்டு இதோ என் செவிகளில்
கேட்கத் தொடங்கிவிட்டது.

குளிர்காலம் முழுவதும் என் அகத்துள் புகப்போகிறது: கோபம்,
வெறுப்பு, நடுக்கம், பயங்கரம், கொடுமையான அடிமை வேலைகள்/
குளிர் துருவமெனும் தன் நரகத்தில் சிக்குண்ட ஆதவன்போல்
என் இதயமும் இனிச் சில்லிட்டு இறுகிப்போன
சிவந்த ஒரு கட்டிதான்.

விழும் ஒவ்வொரு விறகுக்கட்டையின் ஓசைகேட்டு நடுங்குகிறேன்.
கட்டப்படும் தூக்குமேடை இதைவிட ஊமை அடியாகவா
எதிரொலிக்கப் போகிறது?
ஓயாமல் தகர்க்கும் ராட்சதச் சம்மட்டியின் இடிபட்டு
நொறுங்கும் கோட்டைச் சுவர்போல் இருக்கிறது என் உணர்வு.

ஒரே கதியில் தொடரும் இவ்விடியோசை மயக்கத்தால்
எங்கோ ஒரு சவப்பெட்டிக்கு யாரோ மிக அவசரமாய்
ஆணிகளை அடிப்பது போல் எனக்குத் தோன்றுகிறது.
பாடை யாருக்கு? நேற்று வசந்தம் இப்போது கார்காலம்.
மர்மமான இவ்வோசை ஏதோ புறப்பாடு போல் ஒலிக்கிறது.

தீமையில் பூத்த மலர்கள்.

* * *

## (38) BAUDELAIRE - 2
## RECUEILLEMENT

Sois sage, ô ma Douleur, et tiens-toi plus tranquille.
Tu réclamais le Soir; il descend; le voici :
Une atmosphère obscure enveloppe la ville,
Aux uns portant la paix, aux autres le souci.

Pendant que des mortels la multitude vile,
Sous le fouet du plaisir, ce bourreau sans merci,
Va cueillir des remords dans la fête servile,
Ma Douleur, donne-moi la main; viens par ici,

Loin d'eux. Vois se pencher les défuntes Années,
Sur les balcons du ciel, en robes surannées;
Surgir du fond des eaux le Regret souriant;

Le Soleil moribond s'endormir sous une arche,
Et, comme un long linceul traînant à l'Orient,
Entends, ma chère, entends la douce Nuit qui marche.

Les Fleurs du Mal

* * *





## (38) பொதலேர் - 2
## அமைதி

என் உடலை வாட்டும் வலியே - நீ சாதுவல்லவா?
சற்றே அடங்கி இரு.
மாலைப்பொழுது வேண்டுமென்றாய்/
அதுதான் இதோ வந்து விட்டதே.
நகரத்தை இருளெனும் போர்வை மூடுகிறது பார்.
சிலருக்கு அமைதியையும் சிலருக்குக் கவலையையும் அளித்துவிட்டு.

மடியப்போகும் கீழ்த்தரமான மனிதக்கும்பல்
இன்பமெனும் இரக்கமிலாக் கொலைகாரனின்
சாட்டையால் அடிவாங்கி,
அடிமைக் கேளிக்கைகளுக்குச் சென்று
குற்ற உணர்வுகளை அறுவடை செய்யப்போகிறது.
போகட்டும் விடு.
என் உடல்வலியே, இதோ என் கையைப் பிடி.

நீவா இங்கு அந்தப் பக்கமே நமக்கு வேண்டாம்.
வானத்தின் உப்பரிகையில் பழங்கால உடையணிந்து
இறந்த காலம் குனிந்து நிற்பதைப் பார்,
நீர்நிலையின் ஆழத்திலிருந்து
குற்ற உணர்வு சிரித்தெழுந்து வருவதைப் பார்.

மறையப்போகும் சூரியன் வானத்து வளைவில்
உறங்கச் செல்வதைப் பார்.
கீழ்த்திசை தொடங்கி நீளும் பிணப்போர்வை போல்
இனிய இரவு மெல்ல நடந்து வருவதைக் கேள்.
என் அன்பே, அதன் காலடி ஓசையைக் கேள்.

தீமையில் பூத்த மலர்கள்.

* * *

## (39) BAUDELAIRE - 3

### LE CYGNE

Un cygne qui s'était évadé de sa cage,
Et, de ses pieds palmés frottant le pavé sec,
Sur le sol raboteux traînait son blanc plumage.
Près d'un ruisseau sans eau la bête ouvrant le bec

Baignait nerveusement ses ailes dans la poudre,
Et disait, le coeur plein de son beau lac natal :
« Eau, quand donc pleuvras-tu? quand tonneras-tu, foudre?»
Je vois ce malheureux, mythe étrange et fatal,

Vers le ciel quelquefois, comme l'homme d'Ovide,
Vers le ciel ironique et cruellement bleu,
Sur son cou convulsif tendant sa tête avide,
Comme s'il adressait des reproches à Dieu!
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

Les Fleurs du Mal

* * *





## (39) பொதலேர் - 3

### அன்னப் பறவை

கூடுவிட்டுத் தப்பிவந்த அன்னப் பறவையொன்று
விரிந்த தன்பாதத்தால் ஈரமற்ற நகர்த்தெருவைப்
பெருக்கித் தேய்த்துத் தன் வெண்ணிறச் சிறகுகளைக்
கட்டாந்தரையின்மேல் இழுத்துக்கொண்டே சென்றது.
தன் அலகை அகலத்திறந்து, நீர் வற்றிய ஓடையிலே

நடுங்கிப் பயந்துகொண்டே தன் இறக்கைகளைத்
தெருப்புழுதிமண்ணில் முழுக்காட்டியது,
தான் பிறந்துவிடத்து எழில் மிகு ஏரியின் நினைவு
அதன் இதயம் முழுவதையும் நிரப்பிடக் கூறியது:
"தண்ணீரே நீ எப்போது மழையாகப் பொழியப்போகிறாய்?
இடியே நீ எப்போது முழங்கப்போகிறாய்?"
பாவம், துன்பத்தைச் சுமந்து நிற்கும் இப்பழங்காலத்துப் பறவை

தணியா ஆவலுடன் தலை நிமிர்த்தி
படபடக்கும் தன் கழுத்தை நீட்டி
எள்ளி நகையாடும் அவ்வானத்தை
ஈவிரக்கமற்ற அந்நீலவானத்தை நோக்கியது
கடவுளைக் குற்றம் சாட்டுதல்போல்.

தீமையில் பூத்த மலர்கள்

* * *

## (40) BAUDELAIRE - 4
## LES HIBOUX

Sous les ifs noirs qui les abritent,
Les hiboux se tiennent rangés,
Ainsi que des dieux étrangers,
Dardant leur oeil rouge. Ils méditent.

Sans remuer ils se tiendront
Jusqu'à l'heure mélancolique
Où, poussant le soleil oblique,
Les ténèbres s'établiront.

Leur attitude au sage enseigne
Qu'il faut en ce monde qu'il craigne
Le tumulte et le mouvement;

L'homme ivre d'une ombre qui passe
Porte toujours le châtiment
D'avoir voulu changer de place.

Les Fleurs du Mal

* * *



## (41) பொதலேர் - 4
## ஆந்தைகள்

தூங்குமூஞ்சி மரப் பொந்து இருட்டில்
கோயில் பிரகாரச் சிற்பங்கள் போல்
வரிசையாய் அமர்ந்திருந்த ஆந்தைகள்
சிவந்த தம் கண்களால்
சுட்டெரிப்பது போல் பார்த்துக்கொண்டிருந்தன.
அவை தியானத்தில் இருக்கின்றன !

பகலவனைச் சாய்த்துத் தள்ளிக்
காரிருள் சூழ்ந்து படரும்
அச்சோக நேரம்வரை
அவை அசையாமல் அமர்ந்திருக்கும்.

ஆரவாரம் அலைச்சல் எனுமிவைதாம்
இவ்வுலகில் அஞ்ச வேண்டியவையென
ஞானிக்கு அவை உணர்த்தும், தம் செயலால்.

வழி செல்லும் நிழல் கண்டு மையல் கொண்டு
இடம்மாற விழைந்திட்ட மனிதன் அதற்குரிய
தண்டனையை என்றென்றும் சுமந்து நிற்பான்.

தீமையில் பூத்த மலர்கள்.

* * *

## (41) VERLAINE (1844 - 1896)

Le ciel est, par-dessus le toit,
Si bleu, si calme!
Un arbre, par-dessus le toit,
Berce sa palme.

La cloche, dans le ciel qu'on voit,
Doucement tinte.
Un oiseau sur l'arbre qu'on voit
Chante sa plainte.

Mon Dieu, mon Dieu, la vie est là
Simple et tranquille.
Cette paisible rumeur-là
Vient de la ville.

- Qu'as-tu fait, ô toi que voilà
Pleurant sans cesse,
Dis, qu'as-tu fait, toi que voilà,
De ta jeunesse?

Sagesse 6, III

* * *





## (41) வெர்லேன் (1844 - 1896)
## ஞானம்

கூரைக்கு மேலே வானம்
என்ன நீலம்! என்ன அமைதி!
கூரைக்கு மேலே ஒரு மரம்
தன் கிளையை ஊஞ்சலாட்டுகிறது.

வானில் காணும் ஒரு மணியின் நாதம்
சுகமாக ஒலிக்கிறது.
மரத்தில் காணும் ஒரு பறவை
தன் குறையைப் பாடுகிறது.

தெய்வமே, என் தெய்வமே, அதுதான் வாழ்க்கை
எளிமையும், அமைதியுமாய்.
இதமான இவ்வோசை
நகரிலிருந்து வருகிறது.

நீ - ஆமாம் உன்னைத்தான் -
ஓயாமல் அழுதுகொண்டே இருக்கிறாயே!
சொல், நீ என்னதான் செய்தாய்,
உன் இளமைப் பருவத்தை ?

ஞானம் - 6 - III

* * *



## (42) PAUL VERLAINE (1844 – 1869) - 2
La lune blanche...

La lune blanche
Luit dans les bois;
De chaque branche
Part une voix
Sous la ramée...

O bien-aimée

L'étang refléte,
Profond mirroir,
La silhouette
Du saule noir
Où le vent pleure...

Rêvons, c'est l'heure.

Un vaste et tendre
Apaisement
Semble descendre
Du firmament
Que l'astre irise..

C'est l'heure exquise.

- (Labonne chanson)

* * *



## (42) **வெர்லேன் (1844 - 1896) - 2**
வெள்ளை நிலா

வெள்ளை நிலா
காட்டில் காய்கிறது
ஒவ்வொரு அடர்ந்த கிளையினின்றும்
ஒரு குரல் எழுகிறது

ஓ என் அன்பே

குளம் ஓர்
ஆழமான கண்ணாடி
கருநிற கோரைப் புல்லின்
நிழலைப் பிரதிபலிக்கிறது
அங்கு காற்று விம்மியழுகிறது

கனவு காண்போம் இருவே தருணம்

வான வில்லின் வண்ணங்களை நிலவு
வாரித்தெளித்த அந்த வான் வெளியிலிருந்து
எல்லை இலா இதந்தரும் அமைதி
இறங்கி வருவதுபோல் தோன்றுகிறது

இதுவே ஆனந்தமயமான நேரம்

* * *

## (43) RIMBAUD (1854 – 1891)

O saisons, ô châteaux,
Quelle âme est sans défauts?

O saisons, ô châteaux,

J'ai fait la magique étude
Du bonheur, que nul n'élude.

O vive lui, chaque fois
Que chante le coq gaulois.

Mais je n'aurai plus d'envie,
Il s'est chargé de ma vie.

Ce charme ! il prit âme et corps,
Et dispersa tous efforts.

Que comprendre à ma parole?
Il fait qu'elle fuie et vole!

O saisons, ô châteaux,

* * *





## (43) ரேம்போ (1854 - 1891)

### பருவ காலங்கள்

பருவ காலங்களே, கோட்டைகளே
எந்த ஆன்மாவிடத்தில்தான் குறையில்லை?

பருவ காலங்களே, கோட்டைகளே!

யாருமே தவிர்க்காத இன்பத்தை
மாயப் பயிற்சியாகக் கற்றேன்.

இந்நாட்டுச் சேவல் கூவும் போதெல்லாம்
அவன் வாழ்க !

ஆனால் எனக்கு இனி விருப்பு ஏதுவுமில்லை
என்வாழ்க்கையின் பொறுப்பை அவன் ஏற்றுக் கொண்டுவிட்டான்

இந்தக் கவர்ச்சி ! அவன் உள்ளத்தையும் உடலையும் எடுத்துக்கொண்டு
எல்லா முயற்சிகளையும் சிதற அடித்தான்.

என்னுடைய பேச்சிலிருந்து என்ன புரிந்துகொள்வது?
என் பேச்சைத்தான் பறந்தோடிவிடச் செய்துவிடுகிறானே

பருவகாலங்களே, கோட்டைகளே!

* * *



## (44) Jules LAFORGUE (1860 – 1887)

Un couvent dans ma ville natale
Douce de vingt mille âmes à peine,
Entre le lycée et la préfecture
Et vis-à-vis la cathédrale,

Avec ces anonymes en robes grises,
Dans la prière, le ménage, les travaux de couture;
Et que cela suffise...
Et méprise sans envie.
Tout ce qui n'est pas cette vie de Vestale
Provinciale,
Et marche à jamais glacée,
Les yeux baissés.
..............



La nuit est à jamais noire,
Le vent est grandement triste,
Tout dit la vieille histoire
Qu'il faut être deux au coin du feu,
Tout bâcle un hymne fataliste,
Mais toi, il ne faut pas que tu t'abandonnes,
À ces vilains jeux !...

À ces grandes pitiés du mois de novembre !
Reste dans ta petite chambre,
Passe, à jamais glacée,
Tes beaux yeux irréconciliablement baissés.

* * *





## (44) ழூயில் லஃபோர்க் (1860 – 1887)
## கன்யாஸ்த்ரீ மடம்

சுமார் இருபதாயிரம் ஆன்மாக்கள் மட்டுமே வாழும்
இனிய என் சொந்த ஊரில்
ஒரு கன்யாஸ்த்ரீ மடம்
உயர்நிலைப் பள்ளிக்கும் காவல் நிலையத்திற்கும் மத்தியில்
மாதாக்கோவிலுக்கு நேர் எதிரில்.

சாம்பல் நிற அங்கி அணிந்த பெயரற்ற உருவங்கள்
தொழுதல், வீட்டுவேலை, தையல்வேலை
இவற்றிலேயே நிறைவு கண்டனர்.
முழுவதும் தெய்வத்திருப்பணிக்கே அர்ப்பணிக்கப்பட்ட
கிராம சன்யாசினி வாழ்க்கைக்குப் புறம்பான எதையும்
சபலத்துக்கு இடம் கொடாமல் புறக்கணித்து
குனிந்ததலை நிமிராமல்
நடமாடிக்கொண்டிருந்தனர்.
. . . . . . .
எல்லாமே அந்தகார இரவுகள்,
பெரும் சோகத்தைச் சுமந்த காற்று,
அனைத்துமே பழைய கதையைத்தான்
அதாவது கணப்பு நெருப்பருகே இருவராக இருக்கவேண்டும்
என்பதைத்தான் நினைவுறுத்துகின்றன
தவிர்க்க வொணா
இயற்கை மீட்டும் இசைக் குத்தாழ்ப்பாள்!
ஆனாலும் நீ இந்த விஷம விளையாட்டுக்களில்
ஈடுபடக்கூடாது.

இத்தகைய நவம்பர்
மாத பரிதாபங்களைக் காணாத வண்ணம்
நீ, உன் பார்வையை
சமரசத்துக்கு இடமின்றித் தாழ்த்திக்கொண்டு
உன் சிறிய அறைக்குள் அடைந்து
என்றென்றைக்குமாய் சில்லிட்டு உறைந்துபோய்க்
காலம் கழிக்க வேண்டியதுதான்.

* * *

(கடைசிக்கவிதைவரிகள் - XII)

## (45) FRANCIS JAMMES (1868 – 1938)
### Prière pour aller au Paradis avec les ânes.

Je prendrai mon bâton, et sur la grande route
j’irai, et je dirai aux ânes, mes amis :
Je suis Francis Jammes et je vais au Paradis,
Car il n’y a pas d’enfer au pays du Bon Dieu.
Je leur dirai : Venez, doux amis du ciel bleu,
........................
Que je vous apparaisse au milieu de ces bêtes
que j’aime tant parce qu’elles baissent la tête
doucement, et s’arrêtent en joignant leurs petits p
d’une façon bien douce et qui vous fait pitié.
J’arriverai suivi de leurs milliers d’oreilles,
suivi de ceux qui portèrent au flanc des corbeilles,
de ceux traînant des voitures de saltimbanques
ou des voitures de plumeaux et de fer-blanc,
de ceux qui ont au dos des bidons bossués,
des ânesses pleines comme des outres, aux pas cassés,
de ceux à qui l’on met de petits pantalons
à cause des plaies bleues et suintantes que font
les mouches entêtées qui s’y groupent en ronds.
Mon Dieu faites qu’avec ces ânes je vous vienne.
........................



(Le Deuil des Primevères)

* * *





## (45) ஃபிரான்ஸிஸ் ழாம்
(1868 – 1938)
### கழுதைகள் பின் தொடர சுவர்க்கம் போவதற்கு ஒரு பிரார்த்தனை

கையில் தடியுடன் ராஜபாட்டையில் செல்லும் போது
என் நண்பர்களான கழுதைகளிடம் இவ்வாறு கூறுவேன்.
« நான்தான் ஃபிரான்ஸிஸ் ழாம், சுவர்க்கத்திற்குப் போகிறேன்
(கருணையே வடிவான கடவுளின் வானுலகில்
நரகம் என ஒன்று எப்படி இருக்கமுடியும்?)
நீலவானின் இனிய நாண்பர்களே நீங்களும் வாருங்கள். »
...............................
தெய்வமே! நான் மிகவும் நேசிக்கும் இம்மாக்களுடன் தான்
உன்முன்னிலையில் நான் தோன்ற விரும்புகின்றேன்
பொருமையுடன், தலைகுனிந்து சிறிய தம் பாதங்களை
இணைத்து இவை நிற்பதைப் பார்க்குந்தோறும்
நம் மனத்தில் ஓர் இரக்கம் தோன்றும்.
பல்லாயிரம் காதுகள் பின் தொடர நான் வரவேண்டும்.
வயிற்றின் இருபுறமும் பெரிய மூட்டைகளைச் சுமக்கும் இவை
கழைக்கூத்தாடிகளின் வண்டிகளையும்
தகரடின்களும் தட்டுமுட்டு சாமான்களும்
நிறைந்த வண்டிகளையும் இழுத்தவை
முதுகொடிய தண்ணீர்க் குடங்களைச் சுமந்தவை
நிறை கர்பத்தில் வயிறு முட்ட
நடை இடறித் தள்ளாடிய பெட்டைகள் பல;
சிறு காலுறைகள் அணிந்தவையும் உண்டு -
கரு இரத்தம் கசிந்தொழுகும் கால்புண்ணில் அடையாக
மொய்த்து வதைக்கும் ஈக்களின் தொல்லை தவிர்க்க
அணிவிக்கப்பட்ட மலிவு “போண்டேஜ்” தான் அக்காலுறைகள்
இத்தகைய கழுதைகள் புடைசூழ நான் வந்து
உன்னை அடைய விழைகின்றேன் அருள் செய் ஆண்டவனே!

* * *

## (46) ANNA DE NOAILLES (1876 – 1933)
## CHALEUR

.....Chaque petite feuille est chaude
Et miroite dans l'air où rôde
Comme un parfum de reine-claude.

Du soleil comme de l'eau pleut
Sur tout le pays jaune et bleu

S'élance de la forêt ivre,
Des blés roses comme du cuivre.



La joie est ainsi qu' une tour
Haute et lisse dans l'or du jour
Et l'air suave est de l'amour.

O tendresses aériennes,
Tout est disposé pour que viennent
Comme en des saisons anciennes

Juliette avec Roméo,
Daphnis chantant dans un roseau,
Ou Vénus avec son oiseau.



Au cœur des corolles sucrées
L'abeille bourdonne, serrée
Par les fleurs de pollen soufrées;

O mon plaisir, soyez aussi
Comme un lys vibrant et roussi
Où l'insecte d'or est assis...

(L'Ombre des Jours, 1902.)

* * *



## (46) அன்னா த நொ ஆய் (1876 – 1933)
## இதமான வெப்பம்

ஒவ்வொரு இலைத்தளிரிலும் கதகதப்பு
ராணியரின் வாச நறுமணம் கமழும்
காற்றில் அவை மின்னுகின்றன

சற்றே அசைந்தாடி சுருதி கூட்டும்
மஞ்சள் நீல வண்ண வெட்டவெளி எங்கிலும்
பரிதியின் வெப்பம் மழையென்ப பொழிகிறது

செப்பெனச் சிவந்த கோதுமைக் கதிரிலிருந்தும்
மயக்கத்தில் கட்டுண்ட காட்டு வெளியிலிருந்தும்
வாழும் வேட்கை எல்லையின்றி எழுகிறது.

பகலவனின் பொற்கிரணத்தில் நெடிதுயர்ந்த
வழுவழு ஸ்தூபியென ஆனந்தம் திகழ்கிறது
தழுவும் தென்றலே காதல்

வான் வெளியின் உறவாடல்களே!
புராண கால நாயகர்களான
ஜூலியட்டுடன் கூடிய ரோமியோவும்

நாணலில் இசைபாடும் டஃபினீஸூம்*
தோளில் புறா வீற்றிருக்கும் வீனஸூம்**
மீண்டும் வந்து தோன்றிட ஏற்ற தருணமிது.

தேன் சுவைக்கப் பூவிதழுள் புகுந்தவண்டு
மஞ்சள் மகரந்த மலரினுள் சிக்குண்டு
இன்பச் சிறையினுள் ரீங்காரமிடுகிறது.

சூரிய ஒளி பருகி விகசித்துச் சிலிர்க்கும்
பொன்வண்டு வந்தமாந்த நன்மலர் போல்
என் இன்பக் கிளர்ச்சியே நீயிருக்கமாட்டாயோ?

- (நாள்களின் நிழல் 1902)

* * *

---

*கிரேக்க காதல் கதை ஒன்றின் யாதவகுல நாயகன்
**கிரேக்க புராணத்தில் அழகுத் தெய்வம்

## ㊼ G. APOLLINAIRE (1880 – 1918)

Sous le pont Mirabeau coule la Seine
Et nos amours
Faut-il qu'il m'en souvienne
La joie venait toujours après la peine

Vienne la nuit sonne l'heure
Les jours s'en vont je demeure

Les mains dans les mains restons face à face
Tandis que sous
Le pont de nos bras passe
Des éternels regards l'onde si lasse

Vienne la nuit sonne l'heure
Les jours s'en vont je demeure

L'amour s'en va comme cette eau courante
L'amour s'en va
Comme la vie est lente
Et comme l'Espérance est violente

Vienne la nuit sonne l'heure
Les jours s'en vont je demeure

Passent les jours et passent les semaines
Ni temps passé
Ni les amours reviennent
Sous le pont Mirabeau coule la Seine



Vienne la nuit sonne l'heure
Les jours s'en vont je demeure

* * * (Alcools)



## ㊼ அப்பொலினேர் (1880 - 1918)
## மீராபோ பாலம்

மீராபோ பாலத்தின் கீழே
சீன் நதி ஓடிக்கொண்டேயிருக்கிறது
நம் காதலும் கூடத்தான்!
அதை நினைவுறுத்த வேண்டுமா என்ன?
எப்போதும் இடுக்கணைத் தொடர்ந்துதான் இன்பம்
இரவு வருகிறது, மணி ஒலிக்கின்றது.
நாள்கள் உருண்டோடுகின்றன
நான்மட்டும் இருந்து கொண்டிருக்கிறேன்.

கையோடு கைகோத்து எதிர் எதிரே நின்றிடுவோம்
இணைந்த நம் கரங்களே பாலம்
எனின் அதன் கீழ்க்
கலந்து உறைந்துபோன நம் பார்வைகளையே
கண்டு அலுத்துப்போன நீரலைகள் போய்க்கொண்டேயிருக்கின்றன.
இரவு வருகிறது/ மணி ஒலிக்கின்றது
நாள்கள் உருண்டோடுகின்றன
நான் மட்டும் இருந்து கொண்டிருக்கிறேன்

காதலும் போய்விடுகிறது, ஓடும் இந்நீரலை போலக்
காதலும் போய்விடுகிறது
எத்துணை மெல்ல ஊர்ந்து நகர்கிறது வாழ்க்கை
எத்துணை முரட்டுத்தனமாக உலுக்குகிறது நம்பிக்கை
இரவு வருகிறது/ மணி ஒலிக்கின்றது
நாள்கள் உருண்டோடுகின்றன
நான் மட்டும் இருந்துகொண்டிருக்கிறேன்.

நாள்கள் செல்கின்றன/ வாரங்கள் ஓடுகின்றன
கடந்துபோன காலமும் காதலும்
திரும்பி வருவதில்லை
மீராபோ பாலத்தின் கீழே
ஓடிக்கொண்டேயிருக்கிறது சீன் நதி
நாள்கள் உருண்டோடுகின்றன
நான் மட்டும் இருந்துகொண்டிருக்கிறேன் (மது)

* * *

## (48) G. APOLLINAIRE - 2

1.

Le pré est vénéneux mais joli en automne
Les vaches y paissant
Lentement s'empoisonnent
Le Colchique couleur de cerne et de lilas
Y fleurit tes yeux sont comme cette fleur-là
Violâtres comme leur cerne et comme cet automne
et ma vie pour tes yeux lentement s'empoisonne

* * *

2.

Soirs de Paris ivres du gin
Flambant de l'électricite
Les tramways feux verts sur l'échine
Musiquent au long des portées
De rails leur folie de machines

* * *

3.

A la fin tu es las de ce monde ancien
Bergère ô tour Eiffel le troupeau des ponts bêle ce matin
Tu en as assez de vivre dans l'antiquité grecque et romaine
Ici même les automobiles ont l'air d'être anciennes
La religion seule est restée toute neuve la religion
Est restée simple comme les hangars de Port'd Aviation

* * *



## (48) அப்பொலினோ - 2

1.

இலையுதிர் காலத்தில் புல்வெளியினூடே விஷப்பூண்டுகள்
ஆனாலும் அவற்றிலும் கவர்ச்சியான தனியழகு
மேயவந்த பசுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக
விஷத்தையும் விழுங்கிக் கொண்டிருக்கின்றன
நீலோற்பல வண்ணப் பூக்கள் அங்கு மலர்கின்றன
உன்கண்களைப் போலவே இலையுதிர் காலம் ஊதாநிறம்!
அந்த உன் கண்களுக்காகவே
என் வாழ்க்கையும்
மெல்ல மெல்ல விஷமுண்டு வருகிறது.

* * *

2.

பாரீஸ் நகரின் மாலைப் பொழுதுகள்
ஜின் தந்த போதையில்
மின்சார ஒளிப்பிழம்பை உமிழ்ந்துகொண்டு
டிராம் வண்டிகளின் பச்சை விளக்குகளை
தம் முதுகுத்தண்டு வளையச் சுமந்துகொண்டு
இயந்திரப் பித்துப்பிடித்துக் கலங்கிய தம் சித்தத்தைத்
தண்டவாளம் செல்லுமிடமெல்லாம்
இசையாக்கி வெளியிடுகின்றன.

* * *

3.

கிரேக்க ரோமானியப் புராணப்
பழங்கதைகளில் உழன்றது போதுமே
பழங்காலத்து உலகம் உனக்கு அலுத்தே போய்விட்டது
பாலங்களாம் ஆடுகளை மேய்க்கும்
ஆயர்குலப் பெண்ணான ஈஃபல் கோபுரமே!
இவ்வைகறைப் பொழுதினிலே அவற்றின் பேரரவம் கேட்டிலையோ?
இங்குப் பேருந்துகள் கூட மிகப் பழையனவாய்த் தோற்றமளிக்கின்றன
மதம் மட்டுமே இன்றும் அதே புதுமையுடன் இருக்கிறது
ஆம், விமானங்களை நிலையத்தில் நிறுத்தி வைக்கும்
எளிய வெற்றுக் கொட்டகைகளைப் போல.

* * *

## (49) Guillaume Apollinaire - 3
## CALLI GRAMMES (1918)



Mon Coeur Pareil
à une flamme
renversée

* * *



## (49) கிய்யோம் அப்பொலினேர் - 3
## சித்திரக்கவிதைகள்

*கவிதையின் உட்பொருள் உணர்த்துவதை ஒரு சித்திரமாக வரித்து அந்த ஓவியத்தின் வடிவத்தில் எழுத்துக்களைச், சீர்களைச், சொற்களை, வரிகளைப் பதித்து நம் கண்முன் காட்டுவதுதான் சித்திரக் கவிதை. (இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், ஓவியக்கலையில் பல அடிப்படைப் புரட்சிகள் நடந்தன என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.) சித்திரக் கவிதைகள் பல எழுதியவர் புரட்சிக்கவிஞர் அப்பொலினேர். எடுத்துக்காட்டாக இரண்டை இங்கே காணலாம்.*

என் இதயம்
தலைகீழான ஒரு தீபச் சுடரை
ஒத்திருக்கிறது.

* * *

## (50) Guillaume Apollinaire - 4: le jet d'eau




* * *



## (50) GUILLAUME APOLLINAIRE - 4
## LE JET D'EAU

**?**

Tous les souvenirs de naguère
Ô mes amis partis en guerre
jaillissent vers le firmament
Et vos regards en l'eau dormant
Meurent mélancoliquement
où sont-ils Braque et Max Jacob
Derain aux yeux gris comme l'aube

où sont Raynal Billy Dalize
dont les noms se mélancolisent
comme des pas dans une Eglise
où est Cremnitz qui s'engagea
Peut-être sont-ils morts dejà
de souvenirs mon âme est pleine.
le jet d'eau pleure sur ma peine

CEUX qui sont partis à la guerre au Nord se battent maintenant
le soir tombe O sanglante mer
jardins où saigne abondamment le laurier rose fleur guerrière

* * *

## GUILLAUME APOLLINAIRE - 4
## LE JET D'EAU

**?**

Tous les souvenirs de naguère
Ô mes amis partis en guerre
jaillissent vers le firmament
Et vos regards en l'eau dormant
Meurent mélancoliquement
où sont-ils Braque et Max Jacob
Derain aux yeux gris comme l'aube
où sont Raynal Billy Dalize
dont les noms se mélancolisent
comme des pas dans une Eglise
où est Cremnitz qui s'engagea
Peut-être sont-ils morts dejà
de souvenirs mon âme est pleine.
le jet d'eau pleure sur ma peine

CEUX qui sont partis à la guerre au Nord se battent maintenant
le soir tombe O sanglante mer
jardins où saigne abondamment le laurier rose fleur guerrière

* * *



## (50) கீய்யோம் அப்பொலினேர் - 4
## (கண்களே வற்றாத) நீரூற்று

?

இறந்தகால நினைவுகளெல்லாம்
ஓ போர்க்களம் சென்ற என் நண்பர்களே
விண்ணோக்கிப் பீறிட்டெழுகின்றன
நீரில் உறங்கும் உங்கள் பார்வைகள்
சோகத்தைச் சுமந்து இறந்து கொண்டிருக்கின்றன
பிராக், மாக்ஸ் ழக்கோப் மற்றும்
விடியாத காலைப்பொழுதின் கருமை சூழ் கண்களையுடைய தெரேன்
ரெய்னால் பில்லி தலீஸ் போன்றோர்களின்
பெயர்கள் துயரில் தோய்ந்து ஒலிக்கின்றன
மாதாக்கோவிலுள் கேட்கும் காலடியோசை போல்
பட்டாளத்தில் விரும்பிச் சேர்ந்த கிரம்னிட்ஸ் எங்கே?
இதற்குள் ஒருகால் இறந்தும் போயிருக்கக் கூடும்.
என் ஆன்மா நினைவுகளால் நிரம்பி வழிகிறது
நீர் ஊற்று என் சோகத்தின் மீது கண்ணீர் வடிக்கிறது.

போருக்குச் சென்றவர்கள் வடக்கே இப்போது போரிட்டுக்
கொண்டிருக்கிறார்கள்
அந்தி சாய்கிறது, ஓ, குருதிக்கடல்
போர்மலரான சிவப்பு வாகைக் குருதியைத் தோட்டமெங்கிலும்
பாய்ச்சிக் கொண்டிருக்கிறது.

* * *

*கவிதையெனும் நீரூற்று*

*இத்தொகுப்பின் முதற்கவிதையின் பாடுபொருள் நீரூற்று. ஐந்நூறு ஆண்டுகள் கழித்து எழுதப்பட்ட இறுதிக் கவிதையின் பொருளாக அமைந்திருப்பதும் அதுவே! ஃபிரஞ்சுக் கவிதை வற்றாத நீரூற்றாகத் தொடர்ந்து வளர்ந்து கொண்டேயிருக்கிறது!!*

# கவிஞர்கள் பற்றிய சிறு குறிப்பு

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள 25 கவிஞர்களைப் பற்றிய சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்களைப் பற்றியும் இவர்தம் படைப்புகள் பற்றியும் விரிவான விளக்கங்களை இந்நூலாசிரியர் வெ. ராஜகோபாலனின் "ஃபிரஞ்சு இலக்கிய வரலாறு" தொகுதி 1,2,3 இல் காணலாம்.

FRANÇOIS VILLON: ஃபிரான்சுவா விய்யோ: (1431-1463).

ஃபிரஞ்சு இலக்கியத்தில் முழுமுதல் கவிஞராக இவரைக் கொள்ளலாம். விய்யோ மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்தவர். சிறு வயதில் தந்தையை இழந்தார். புரவலர்களை அண்டி யாசித்து வாழ்க்கை நடத்தி வந்தார். அந்தச் சூழ்நிலையில் எழுதியது தான் முதல் கவிதை. சூழ்நிலை காரணமாக சமுதாயத்தின் இருண்ட பகுதியில் வாழும் திருடர்கள், கயவர்கள் சகவாசம் இவருக்கு ஏற்பட்டது. பல குற்றங்களில் பிடிபட்டு பலமுறை சிறை சென்ற விய்யோ, கடைசியாக ஒரு கொலைக் குற்றத்திற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது எழுதியது தான் இரண்டாவது கவிதை. அதிர்ஷ்டவசமாக இவருடைய கருணைமனு ஏற்கப்பட்டு நாடுகடத்தப்பட்டார். அதன் பிறகு இவர் என்ன ஆனார் எப்படி இறந்தார் என்கிற எந்தத்தகவலும் இல்லை. சோக கீதம் இசைத்த இச்சிறைக்குயில் காலம் எனும் வான் வெளியில் ஒரு சுவடும் இன்றி மறைந்தது.

2. CLÉMENT MAROT க்ளெமா மாரோ (1496 - 1544)

ஓர் அரசவைக் கவிஞரின் மகனாகப் பிறந்த க்ளெமா மரோவுக்கு, பெரிய பிரபுக்களின் தொடர்பு சிறு வயதிலேயே வாய்த்தது. மதவிஷயத்தில் மறுமலர்ச்சி சீர்திருத்தக் கொள்கைகளில் இவருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. இதன் காரணமாக கத்தோலிக்க மதத் தீவிரவாதிகளின் சீற்றத்திற்கு ஆளாகி நாடு கடத்தப்பட்டார். அப்போது டூரின் என்ற நகருக்கு வந்து ஆதரவற்ற நிலையில் மரணம் அடைந்தார். L'enfer (நரகம்) எனும் இவருடைய நூல் (1539) பிரபலமானது. சிறைப்பட்ட போதும், தம் உடமைகள், எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டபோதும், பெரிய பிரபுக்களுக்கும், மன்னருக்கும் இவர் விடுத்த மடல்களின் தொகுப்பு Epîtres எனும் நூல். இவற்றில் சோகப்புலம்பலோ, விரக்தியோ கெஞ்சுதலோ காணப்படமாட்டா. மாறாக ஒரு சுவாதீனமும், கேலியும் கலந்த ஒரு விளையாட்டுப்போன்ற நடையுமே காணப்படும்.



3. RONSARD ரோசார் (1524 - 1585)

செல்வத்தாலும், செல்வாக்காலும் உயர்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர் ரோசார். இயற்கை காட்சிகளின் அழகை ரசிப்பதிலும், வேட்டையாடுவதிலும் இவருக்கு நாட்டம் அதிகம். அரச குடும்பத்து பிரபலங்களின் தொடர்பும் ஆதரவும் எப்போதும் இவருக்கு இருந்தமையால் இவர் "அரசர்களுக்குப் புலவர், புலவர்களுக்கு அரசர்" என்றழைக்கப்பட்டார். இவருடைய "காதல் கவிதைகள்" (மூன்று தொகுதிகள்) மிகவும் பிரபலமானவை. ரோசார் ஓரளவு செறுக்குடையவர் என்று கூடச் சொல்லலாம். ஒருவருக்கு காலத்தினால் அழியாத புகழையும் அமரத்துவத்தையும் கவிஞரால் தான் அளிக்க முடியும் என்பது இவர் துணிபு. இயற்கையை நெசித்த ரோசருக்கு சுற்றுச்சூழலில் அக்கறை அதிகம். மரங்கள் வெட்டப்படுவதைக் காண இவர் சகிக்கமாட்டார். இளமை நில்லாது வாழ்க்கை நிலையாது. இளமை இருக்கிறபோதே இன்பங்களைத் தூய்த்திடல் வேண்டும் என்பது இவருடைய கொள்கை.

4. J. DU BELLAY துபெல்லே (1522 - 1560)

உயர்குடியில் பிறந்த துபெல்லே, தம் இளவயதிலேயே பெற்றோர்களை இழந்தார். அடிக்கடி நோய் வாய்ப்படும் உடல் வாகு. சட்டக்கல்வி கற்றார். உடன் லத்தீன் மொழியும் பயின்றார். கார்டினலாக இருந்த இவர் உறவினர் ஒருவர், ரோமாபுரிக்குத் தூதுவராகச் சென்றார் - துபெல்லே அவருக்குக் காரிய தரிசியாக உடன் சென்றார். தமக்கு அந்தஸ்து மிக்க தூதரகப் பதவி கிடைக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்புகளுடன் சென்ற இவருக்குக் கிட்டியது ஏமாற்றம் மட்டுமே. ரோமாபுரி நகரத்தின் பழைய இடிபாடுகளைச் சென்று பார்த்தார். அந்த இடிபாடுகள் இவருடைய கவிஞர் உள்ளத்தை உருக்கி ஒரு கவிதைக் கொத்து உருவாவதற்குக் காரணமாயிருந்தன (Les Antiquités de Rome) நோயினால் ஒடுக்கப்பட்டு 37 வயது மட்டுமே வாழ்ந்தாலும், இவருடைய கவிதைகளில் உண்மையாக இவர் அனுபவித்த உணர்ச்சகளின் பிரதிபலிப்பைக் காண முடிகிறது.

5. P. CORNEILLE (கொர்னேய்) - (1606 - 1684)

ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்தவர் கொர்னேய். வக்கீலுக்குப் படித்துப்பட்டம் பெற்ற இவர் லத்தீன் மொழியில் அபார ஞானம் உடையவராகத் திகழ்ந்தார். இவர் முதலாவதாக எழுதியது ஒரு

நகைச்சுவைக் கவிதை நாடகம். பாரீஸ் நகரில் அரங்கேறிய இந்நாடகம் மாபெரும் வெற்றியைக் கண்டது. மேலும் தொடர்ந்து 5 நகைச்சுவை நாடகங்கள் எழுதினார் - அனைத்துமே மக்களின் வரவேற்பைப் பெற்றன. 1637 இல் இவர் எழுதிய LE CID என்ற நாடகம், அதுவரை ஃபிரஞ்சு இலக்கிய உலகம் காணாத வெற்றியைப் பெற்று, பாரீஸ் நகரையே கலக்கியது. தம் நீண்ட வாழ்நாளில் இவர் எழுதியவை 33 நாடகங்கள் இவை எல்லாமே கவிதை உருவில் அமைந்தவை. நாடகத்தின் வழியாக கொர்னேய் வலியுறுத்துவது சீல மிகு பண்புகள் (குடும்ப கௌரவம், நாட்டுப்பற்று, பகைவனையும் மன்னிக்கும் பண்பு, தெய்வ நம்பிக்கை, தியாக உணர்வு இன்ன பிற இவருடைய எழுத்து நடை கம்பீரமாகவும், மிடுக்குடனும் இருக்கும். இவருடைய படைப்புகள் மனிதன் எவ்வாறு உன்னத நிலைக்கு உயரவேண்டும் என்பதனைச் சித்திரித்துக்காட்டி பெரிய குறிக்கோளையும் உயர்ந்த சிந்தனைகளையும் படிப்போர் உள்ளத்தில் நிலைபெறச் செய்வன.

## 6. J. RACINE ரசீன் (1639 - 1699)

ரசீன் மூன்று வயதுப் பிள்ளையாக இருக்கும் போதே தம் தாயையும் தந்தையையும் இழந்தார். அனாதைக் குழந்தை கிறித்துவ மடத்தில் சேர்க்கப்பட்டு வளர்ந்தது - தரமான கல்வி கற்றார். மிகச்சிறந்த ஆசிரியரிடம் கிரேக்கமொழி கற்றுத் தேர்ந்தார். 1667 இல் இவர் எழுதிய Andromaque என்னும் நாடகம் மிகப்பெரிய வெற்றியைக் கண்டது. தொடர்ந்து ஏழு வெற்றி நாடகங்களை இவர் எழுதியளித்தார் - 1674 இல் Iphigénie என்ற இவரது நாடகம் அரண்மனையில் நடந்த ஒரு விழாவில் அரங்கேறி மாபெறும் வெற்றிகண்டது ரசீன் எழுதியவை 11 துன்பியல் நாடகங்களுகம் ஒரு நகைச்சுவை நாடகமும். ரசீன் நாடகத்தின் முக்கிய குறிக்கோள் உள்ளத்தை நெகிழச்செய்து சோகத்தில் தவிக்கும் பாத்திரங்களின் மீது கழிவிரக்க உணர்ச்சியை உண்டு பண்ணுவது. உணர்ச்சிகளின் பிடியில் சிக்கிய பாத்திரங்கள் விதியை எதிர்த்துப் போராட முயன்று தோல்வியடையும். ரசீன் நாடகங்கள் எல்லாமே கவிதையுருவில் அமைந்தவை.

## 7. LA FONTAINE லஃபோ தேன் (1621 - 1695)

இவர் 1621 இல் பிறந்தார். இயற்கை வனப்புமிக்க கிராமிய சூழ்நிலையில் வளர்ந்தார் - தம் வாழ்நாள் முழுவதையும் பெரிய சீமான் சீமாட்டிகள் ஆதரவில் கழிக்கக் கூடிய வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. இவருக்க இலக்கியத்தில் இடம் பெற்றுத்தந்தவை இவர் எழுதிய Fables எனும் நீதிக் கதைகளின் தொகுப்பு. இது பன்னிரண்டு பாகங்களில் 242 கதைகளைக் கொண்டது. இந்தியாவில் பிரபலமான பஞ்சதந்திரக் கதைகள், கிரேக்கமொழியில் Esope இன் (கி.மு ஆறாவது நூற்றாண்டு) கதைகள் லத்தீன் மொழியில் Phèdre இன் கதைகள் ஃபிரான்ஸ் நாட்டில் புழக்கத்தில் இருந்த பல செவிவழிக்கதைகள் ஆகியவற்றிலிருந்து கதைக்கருவினை எடுத்து, தம்முடைய எளிய நடையில் வழங்கியது இவருடைய சிறப்பு.



## 8. MOLIÈRE மொலியேர் (1622 - 1673)

ஒரு வசதியான நடுத்தரக்குடும்பத்தில் பிறந்த மொலியேர் சிறந்த கல்விகற்றார். நாடக உலகம் இவரைக் கவர்ந்திழுத்தது. 1643 இல் சில நண்பர்களுடன் சேர்ந்து, ஒரு நாடகக் குழுவைத் தொடங்கினார். 12 ஆண்டுகள் நாடோடி வாழ்க்கையை வாழ்ந்து, பிறகு பாரீஸ் திரும்பி வந்தார். மன்னர் முன்னிலையில் இவர் அரங்கேற்றிய நாடகம் மிகப் பெரிய வெற்றியைக் கண்டது. தொடர்ந்து 15 ஆண்டுகளில் 20 நாடகங்களை மேடையேற்றினார். அவற்றில் பல முழுவதும் கவிதை வடிவில் எழுதப்பட்டவை. கடுமையான உழைப்பால் இவருடைய உடல் நலம் பாதிக்கப்பட்டது. 1673 இல் மேடையில் ஒரு போலி நோயாளி பாத்திரத்தில் நடித்துக்கொண்டிருக்கும் போது மயங்கி விழுந்து அமரத்துவம் அடைந்தார். இவருடைய சொந்த வாழ்க்கையில் இல்லற இன்பமோ நிம்மதியோ இல்லை. சமுதாய சீர்கேடுகளைக் கடுமையாகச் சாடியவர் மொலியேர். போலி ஸ்வாமிஜிக்கள், போலி மருத்துவர்கள், போலி மேதாவிகள், போலி பெரிய மனிதர்கள், போலி நவநாகரிக மோகங்கொண்ட நங்கையர், போலி வேதாந்திகள், என்று கோணல் மனங்கொண்ட மனிதர்கள், குடும்ப வாழ்க்கையினையும், சமூகத்தையும் எந்த அளவுக்கு ஆட்டிப்படைக்கின்றனர் என்பதுதான் இவர் நாடகங்கள் நமக்கு எடுத்துரைக்கும் பாடம்.

## 9. VOLTAIRE. வொல்தேர் (1694 - 1778)

பதினெட்டாம் நூற்றாண்டு ஃபிரஞ்சு இலக்கியத்தில் மிகவும் பிரபலமானவர் வொல்தேர் - இவர், காப்பியம், கவிதைகள், நாடகங்கள், தத்துவ சிந்தனைக்கட்டுரைகள், நெடுங்கதைகள், திறனாய்வு என எல்லாவகை இலக்கியத்திலும் தம் ஆற்றலைக் காட்டியவர். இவருடைய 20000 கடிதங்கள், 158 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன - இவருடைய

கிண்டல் மிக்க சீட்டுக் கவிகள் புகழ்பெற்றவை. தெய்வம் உண்டு என்பது இவரது திடமான நம்பிக்கை - ஆனால் சிறிஸ்துவின் பெயரால், மாற்று நம்பிக்கை கொண்டவர்களைத் துன்புறுத்திய கத்தோலிக்கர்களை இவர் கடுமையாகச் சாடினார். நீதியின் பெயரால் இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து பொதுநலத்துக்காகத் தம் வாழ்வில் 18 ஆண்டு போராடியவர் வொல்தேர். தனிமனித சுதந்திரத்தையும், பொது சமத்துவத்தையும், விழைந்த இவருடைய கொள்கைகள், நூற்றாண்டு இறுதியில் (1789), வெடித்த ஃ பிரஞ்சுப் புரட்சிக்கு அடித்தளமாய் அமைந்தன.

10. ANDRE CHENIER ஆந்த்ரே ஷெனியே ( 1762 - 1794)

1762 இல் பிறந்த ஆந்த்ரே ஷெனியே மிகச் சிறந்த மாணாக்கராகத் திகழ்ந்தார். கணிதம், இயற்பியல், கிரேக்கம், லத்தீன் மொழிகளில் தேர்ச்சி பெற்றார் - ஃபிரஞ்சுப் புரட்சி வெடித்தபோது இவர் அதற்கு ஆதரவு அளித்தாலும் வலதுசாரி மிதவாதியாகவே இருந்தார். மன்னர் கில்லட்டின் கத்திக்குப் பலியானபோது இவர் அரசியலிலிருந்து ஒதுங்கி வாழ்ந்தார். இருப்பினும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டார், தம் 31 வது வயதில் ஃபிரஞ்சுப் புரட்சியின் தீவிரத்திற்கு பலியானார். இவர் இறந்தபின் இரண்டே நாள்களில் இவரைப் பலிவாங்கிய பயங்கர ஆட்சிமுறை வீழ்ந்தது என்பது இவர்மேல் நமது அனுதாபத்தைக் கூட்டுகிறது. இவருடைய கவிதைகள் இவர் மரணத்துக்குப் பின் 25 ஆண்டுகள் கழித்து வெளியிடப்பட்டு மிகப் பெரிய பாராட்டைப் பெற்றன.

11. LAMARTINE. லமார்த்தீன் (1790 - 1869)

கிராமச் சூழ்நிலையில் ஏழு சகோதரிகளுடன் பிறந்து, தெய்வநம்பிக்கை மிக்க குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தவர் லமார்த்தீன். இவர் ஏரிக்கரையில் சந்தித்து காதல் கொண்டபெண், காச நோயில் உயிரிழந்தார். அவளைக் கவிதையின் நாயகி ஆக்கி லமார்த்தீன் எழுதிய "ஏரி" எனும் கவிதை, இலக்கிய வரலாற்றில் மிகப் பெரிய வெற்றி கண்டு ஆசிரியரைப் பிரபலமாக்கியது. இவர் எழுதிய பல்லாயிரக்கணக்கான கவிதை வரிகள் புனைவியல் இலக்கியத்தின் அடிப்படையாய்த் திகழ்கின்றன. லமார்த்தீன் சிறந்த மேடைப் பேச்சாளர்; இவருடைய அரசியல் வாழ்க்கை இவருடைய புகழை உயர்த்தியது. ஆயினும் கவிஞர் வாழ்க்கையில் இறுதி 19 ஆண்டுகள் மிகவும் சோகமானவை. பொருளாதார நெருக்கடி, கடன் தொல்லை காரணமாக வீடு, சொத்து அனைத்தையும்



விற்று ஏழ்மையில் உழன்றார், சொந்த ஊர்க்கல்லறையின் எளிமையில் உறங்குகிறது இவரது பூத உடல்.

12. VIGNY விஞ்ஞி (1797-1863)

உயர் குடியில் பிறந்த விஞ்ஞி, கல்வியிற் சிறந்து விளங்கினார், படையில் சேர்ந்து சிறந்த போர்த் தளபதியாகத் திகழ வேண்டும் என்ற இவரது எண்ணம் ஈடேறவில்லை. இலக்கியம் இவரை ஈர்த்தது. இவரது சொந்த வாழ்க்கை ஏமாற்றமும் சோகமும் மிக்கது. இவருடைய படைப்புகளைக் கவிதை, நாடகம், புதினம் என்ற இம்மூன்று துறைகளிலும் காணலாம். பொதுவாக இவர் ஒரு துன்பியல் கொள்கையர், தத்துவங்களை விளக்க விஞ்ஞி உருவகத்தைப் பயன்படுத்துவார். பாத்திரங்களை ஒரு குறியீடாக பயன்டுத்துவது இவருடைய தனித்தன்மை. கடவுள் மனிதனுடைய துயர்களைத் தீர்த்துவைப்பதில்லை. அவர் மனிதனிடமிருந்து விலகியேநிற்கிறார். மனிதன் கடவுளால் கைவிடப்பட்டவன் என்பது இவருடைய கொள்கை.

13. VICTOR HUGO (விக்தோர் உய்கோ) (1802 - 1885)

ஃபிரஞ்சுப் புனைவியல் இலக்கியத்தின் தலைவராகக் கருதப்படும் விக்தோர் உய்கோ ஒரு கவிச்சக்கரவர்த்தி - இலக்கியத்தில் இவர் தொடாத துறையே இல்லை எனலாம். புனைவியல் நாடகம், குறியீட்டுக்கவிதைஎன பல புதிய இலக்கிய வகைகளுக்கு வித்திட்டவர். ஒரு காப்பியம், 9 நாடகங்கள் (அவற்றில் ஆறு கவிதை நாடகங்கள்) 5 நாவல்கள் பன்னிரெண்டு கவிதைத் திரட்டுகள் என எழுதிக் குவித்தார் உய்கோ. இவருடைய Hernani நாடகத்தின்போது அரங்கத்தில் நடந்த அடிதடி அமளிகளை (1789) அரசியல் புரட்சிக்குப்பின் வந்த நாடகப் புரட்சி என்று கூறுவார்கள். இவருடைய Les Miserables, Notre Dame De Paris எனும் நாவல்கள் உலகமெங்கும் பிரபலமானவை. தம் அரசியல் சுதந்திரக் கருத்துக்களுக்காக நாடுகடத்தப்பட்ட உய்கோ (பாரதிக்கும் இவருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு) 19 ஆண்டுகள் வெளியே வாழ்ந்தார். உறவினர்களை இழந்து, தம் ஒரு பேரன், பேத்தியுடன் மட்டுமே வாழ்ந்த இவருடைய முதுமைக் காலம் சோகமானது. தம் எண்பத்து மூன்றாவது வயதில் உயிர்நீத்தபோது பல லட்சம் மக்கள் இவருடைய இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். கவிதை புனைவதில் வியக்கத்தக்க ஆற்றல் பெற்றவர் உய்கோ -

இவருடைய கவிதைகளில் சொல்லாட்சியும், ஓசைநயமும், உவமைகளும், கற்பனைவளமும் மிகச் சிறப்பாகக் காணப்படும்.

## 14. MUSSET (முய்சே) (1810 - 1857)

ஒருபிறவி மேதை என்று கூறும் அளவுக்கு முய்சே தம் பதினான்காவது வயதிலேயே கவிதைகள் புனைந்தார். காதலில் கண்ட தோல்வி இவரை வாழ்நாள் முழுவதும் பாதித்தது. நான்கு நீள் கவிதைகளில் (Les Nuits இரவுகள்) தம் சோகத்தையெல்லாம் கொட்டித்தீர்த்தார் முய்சே, இவர் ஒரு சிறந்த நாடகாசிரியரும் ஆவார். பதினைந்துக்கும் மேற்பட்ட நாடகங்கள் எழுதியுள்ளார். ஃபிரஞ்சு இலக்கியத்தில் மிகச் சிறந்த நாடகங்களுள் ஒன்றாகக் கருதப்படும் Lorenzaccio எனும் நாடகம் 1834-இல் எழுதப்பட்டது. இந்நாடகம் 62 ஆண்டுகளுக்குப் பின்தான் (ஆசிரியர் மறைந்து 40 ஆண்டுகளுக்குப்பின்) முதல் முறையாக ஃபிரான்ஸில் மேடையேற்றப்பட்டது! முய்சேயின் முக்கிய படைப்புகள் அனைத்தும், அவருடைய இருபது வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட காலத்திலேயே எழுதப்பட்டவை. பதினேழு ஆண்டுகள் தனிமையிலும் உடல் உபாதைகளினாலும் அல்லலுற்று, 1857 இல் அமரத்துவம் அடைந்தார் முய்சே.

## 15. MARCELINE DEBORDES.V மர்சலீன் தெபோர்த் (1786 - 1859)

இக்கவிதாயினி 1786இல் பிறந்தார். 1789இல் நாட்டைக் கலக்கிய புரட்சியால் இவர் ஆரம்பக்கல்வி மட்டுமே பயின்றார். சிறுவயதில், மேடை நாடகங்களில் குழந்தை வேடங்கள் ஏற்று நடித்தார். ஏழ்மையான வாழ்க்கை. நல்ல குரல் வளம் இருந்தமையால் நாடக மேடைகளில் பாடி வாழ்க்கை நடத்திவந்தார். நாடக நடிகர் வால்மோர் என்பவரை மணந்தார். இவருடைய முதல் கவிதைத் திரட்டு 1819 இல் வெளியானது. ஏழ்மையில் உழன்றபோதும், உய்கோ, லமார்த்தீன் போன்ற கவிஞர்களின் ஊக்குவிப்பால் கவிதைத் திரட்டுகள் பல வெளியிட்டார். வாழ்ந்த காலத்தில் எவ்வித அங்கீகாரமும் இல்லாமல் இருந்த மர்சலீனுடைய கவித்துவம், இவர் மறைவுக்குப்பின்தான் உணரப்பட்டது. ரேம்போ, வெர்லேன் போன்ற கவிஞர்களுக்கு இவர்தான் முன்னோடி என்பது இலக்கியவாதிகளின் கருத்து.



## 16. NERVAL நெர்வால் ( 1808 - 1855)

நெர்வாலுடைய வாழ்க்கை பரிதாபத்துக்குரியது. இவர் காதலித்த நடிகை வேறு ஒருவரை திருமணம் செய்து கொண்டு பின் சிறிது காலத்தில் இறந்தும் போய்விட்டார். ஆனால் இந்தச் சோகம் நெர்வலலுக்குச் சித்தபிரமையை உண்டாக்கிவிட்டது. மன ஆறுதலுக்கு கவிதை எழுதுவதில் ஈடுபாட்டார். கீழை நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். 1851 முதல் இவரது மனநிலை அடிக்கடி பாதிக்கப்பட்டது. மனநோய் மருத்துவமனையில் அடிக்கடி சேர்க்கப்பட்டார். இடையிடையே கவித்துவம்மிக்க சில நூல்களையும் எழுதினார். 1855 இல் நல்ல குளிர் காலத்தில் பாரீஸ் நகர் வீதி ஒன்றில் இவரது பிணம் கண்டெடுக்கப்பட்டது. எட்டு குறுநாவல்களும், பத்து கவிதைகளும் இவருடைய முக்கிய படைப்புகள். இருபதாம் நூற்றாண்டில் வரப்போகும் மீநடப்பியல் (Surrealism) கவிஞர்களுக்கு இவர் முன்னோடியாகக் கருதப்படுபவர்.

## 17. THEOPHILE GAUTHIER (தெயோஃபீல் கொத்தியே) (1811 - 1872)

இவர் நேர்வாலுடைய நண்பர் - விக்தோர் உய்கோவின் ரசிகர். ஓவியத்தில் அதிக நாட்டம் உடைய இவர் ஒரு பிரபல கலை விமரிசகர் ஆவார். அமானுஷ்ய நிகழ்வுகளைக்கொண்ட குறுநாவல்கள் எழுதியுள்ளார். சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதோ வாழ்க்கைத்தத்து வத்தைவிளக்குவதோ கவிதையின் குறிக்கோளில்லை. கவிதை அழகின் ஆராதனை. கலை கலைக்காகவே என்பது போல் கவிதை கவிதைக்காகவே மட்டும்தான் என்பது இவர் கூற்று. கவிதையின் உருவ வடிவத்திற்கு மிகப் பெரிய முக்கியத்துவம் அளிப்பார் கொத்தியே. இவர் எழுதிய கவிதைத் திரட்டுக்கு Emaux et Camées என்று பெயர் (நவரத்தினங்களும் இணைப்புத்தங்கமும்)

—

## 18. LECONTE DE LISLE (லெக்கோத் தலீல்) (1818 - 1894)

கலை கலைக்காகவே என்ற கொள்கையை அப்படியே ஏற்று தம் கவிதைகளைப் படைத்தவர் லெக்கோத் தலீல். Reunion எனும் தீவில் 1818இல் இவர் பிறந்தார் இவர் இந்தியாவுக்குப் பயணம் வந்து நம் புதுச்சேரியில் சில காலம் தங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. மொழி

யாக்கத்தின் வழியாக இராமாயணம், மகாபாரதம், பாகவத புராணம், ரிக்வேதம், ஆகியவை பற்றி இவர் அறிந்துகொண்டார். பண்டைக்காலத்தைப்பற்றிய கவிதைகள் (Poemes antiques) காட்டுமிராண்டி என்றழைக்கப்பட்ட நாடுகளைப்பற்றிய கவிதைகள் (Poemes barbares) சோக மிகு கவிதைகள் (Poemes tragiques) ஆகியவை இவருடைய முக்கிய படைப்புகள். யாப்பு, அணி, விதிகள் பிறழாமல் உருவ அமைப்பில் அப்பழுக்கு இன்றி ஒரு கைதேர்ந்த சிற்பி முழுக்கவனத்துடன் செதுக்கிய கற்சிலைபோல எழிலுடன் காணப்படுவது இவருடைய கவிதையின் சிறப்பு.

## 19. BAUDELAIRE பொதலேர் (1821-1867)

சிறுவயதிலேயே தந்தையை இழந்தார் பொதலேர். அவருடைய தாயும் மறுமணம் செய்து கொள்ளவே, ஒரு தனிமை உணர்வு இவர் மனதில் ஆழமான வடுவை ஏற்படுத்தியது. இளமைப் பருவத்தில் தீய சகவாசங்கள், விலை மாதர்கள் தொடர்பு ஏற்பட்டு இவருடைய உடல்நலத்தைக் கெடுத்தன. ஓவியக்கலை மற்றும் இசைக்கலை நுட்பங்களை அறிந்த இவருடைய விமரிசன கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. இவருடைய முக்கிய படைப்பு : Les Fleurs de Mal (தீயவையில் பூத்த மலர்கள்) எனும் கவிதைக்கொத்து. 1857 இல் வெளி வந்த இந்நூல் ஆபாசச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டது. ஆறு கவிதைகளை அகற்றி பிறகு அபராதமும் கட்டியபிறகு நூல் வெளியானது. 126 கவிதைகளைக்கொண்ட இந்நூல் மக்கள் வரவேற்பை அப்போது பெறவில்லை (கவிஞரின் மரணத்துக்குப் பின்வந்த பதிப்பில் மேலும் 25 கவிதைகள் சேர்க்கப்பட்டன. குறியீட்டுக் கவிதையில் புதியதோர் பாதை வகுத்துத் தந்தவர் பொதலேர். வாழ்ந்த காலத்தில் புரிந்து கொள்ளப்படாமல் இருந்தபோதும். மறைவுக்குப் பின் இவருடைய கவிதைகள் பல மொழியிலும் பெயர்க்கப்பட்டு, அகில உலகப் புகழை இவருக்குத் தந்தன.

## 20. VERLAINE வெர்லேன் (1844 - 1896)

தம் 18 வது வயதில் படித்துப்பட்டம் பெற்றார் வெர்லேன். உறவுப் 



பெண் ஒருத்தியின் மரணத்தால் வந்த துக்கத்தை மறக்கக் குடிக்க ஆரம்பித்தார். வாழ்நாள் முழுவதும் குடிப்பழக்கம் இவரிடம் குடிகொண்டது. ரேம்போ என்ற கவிஞரின் தொடர்பு ஏற்பட்டது. ரேம்போ நல்ல ஆணழகன். இவர்கள் உறவு ஓரினச்சேர்க்கையாக மாறியது. சில கால சிறைவாசத்துக்குப் பின் வெளிவந்த வெர்லோன் நல்ல வழியில் வாழமுயன்றார். தம் வாழ்வின் கடைசி பத்து ஆண்டுகளில் உடல் நலம் கெட்டு, அடிக்கடி நோய்வாய்ப்பட்டு வறுமையில் வாடி, மிகுந்த துன்பம் அனுபவித்து 1896 இல் உயிர்துறந்தார் வெர்லேன், இசையின்பமும், ஓசையின்பமும் தான் கவிதைக்கு முக்கியம், மற்றவை அனைத்தும் அப்புறம்தான் என்பது இவர் கருத்து.

## 21. RIMBAUD ரேம்போ (1854 - 1891)

ஓர் எளிய குடியின் பிறந்த ரேம்போ கல்வியிற் சிறந்த மாணாக்கர். லத்தீன் மொழியல் கவிதை எழுதும் ஆற்றல் கொண்டவர். தாம் எழுதிய கவிதைகளை கவிஞர் வெர்லேனுக்கு அனுப்பி வைத்தார் ரேம்போ. இரு கவிஞர்களுக்குமிடையே ஏற்பட்ட உறவு ஓரினச்சேர்க்கையாக மாறியது. ரேம்போ பல நாடுகளில் சுற்றினார். தீவிரமாக வியாபாரத்தில் ஈடுபட்டார் (காப்பிக்கொட்டை, தந்தம், கஸ்தூரி, தங்கம்) முழங்காலில் புற்று நோய் கண்டு தாய்நாடு திரும்பினார் – வலக்கால் துண்டிக்கப்படவேண்டியதாயிற்று. மருத்துவனையில் தம் முப்பத்தேழாவது வயதில் (1891 இல்) இறந்தார் ரேம்போ. தம் பதினேழாவது வயதில் கவிதை எழுதத் தொடங்கிய ரேம்போ 21 வயதுக்குப்பின் எதுவுமே எழுதவில்லை, தமது ஆயுட் காலத்தில் இவர் வெளியிட்டது ஒரே ஒரு நூல்தான் Une Saison en enfer (நரகத்தில் சில காலம்) என்பது அதன்தலைப்பு, கவிதைக்கு ஒலி ஒன்றே பிரதானம் – புரியும் படி இருக்கவேண்டும், நம்பகத்தன்மை, யாப்பு விதிகள் ஆகிய சிந்தனைகளை விட்டொழிக்கவேண்டும் என்பது இவர் கருத்து.

## 22. JULES LA FORGUE (ழுயில் லஃபோர்க்) (1860 - 1887)

உருகே நாட்டில் பிறந்த இவர் தம் ஆறாவது வயதில் பாரீஸ் வந்தார். கல்லூரிப்படிப்பில் இவர் சிறந்து விளங்கினார் என்று சொல்வதற்கில்லை. ஜெர்மனி நாட்டின் அரசிக்கு ஃபிரஞ்சு மொழி போதிப்பவராக பணியாற்றிய

லஃபோர்க் பெர்லின் நகரில் சந்தித்த Leah Lee என்கிற ஆங்கிலப் பெண்ணை மணந்து கொண்டார். இருவரும் பாரீஸ் வந்தனர். சுவாச நோயால் பாதிக்கப்பட்டு தம் 27வது வயதிலேயே மரணம் அடைந்தார் லஃபோர்க். Les Complaintes (புலம்பல்கள்) இவருடைய முக்கிய படைப்பாகக் கருதப்படுகிறது. கபடமில்லா வெள்ளை உள்ளமும், பாமரர்க்கு எழுதப்பட்டது போன்ற நாட்டுப் பாடலின் எளிமையும் இவரது கவிதைகளில் காணப்படும் சிறப்பு.

23 FRANCIS JAMMES பிரான்ஸிஸ் ழாம் (1868 - 1938)

1868 இல் பிறந்த இவர், கிராம வாழ்க்கையில் மிகவும் நாட்டங்கொண்டவர். நாட்டுப்புற வாழ்க்கையின் எளிமையும் பண்பும், இயற்கையை ஒட்டியதன்மையும், வீட்டு மிருகங்களிடம் பாசமும், கபடமற்ற வெள்ளை மனமும் இவருடைய கவிதைகளில் காணக்கிடக்கின்றன. கவிதையின் பெயரால் குறியீடுகளும், சிக்கலான கோட்பாடுகளும், தத்துவங்களும் இவருக்கு ஏற்புடையவை அல்ல. ஆழ்ந்த மதநம்பிக்கை கொண்ட இவருடைய கவிதைகளின் எளிமையும் உண்மையும் படிப்பவர்கள் உள்ளத்தைத் தொடும் தன்மையுடையவை.

24 ANNA DE NOAILLES அன்னா த நொஆய். (1876 - 1933)

உயர்குடியில் (மூதாதையர் அரச பரம்பரை) பிறந்த அன்னா த நொஆய், தம் பதின்மூன்றாவது வயதிலேயே கவிதை எழுதுவதில் ஆர்வம் காட்டினார். புனைவியல் கவிஞர்கள், (குறிப்பாக விக்தோர் உய்கோ), இவரை மிகவும் கவர்ந்தவர். 1901 இல் வெளிவந்த இக்கவிதாயினியின் கவிதைத்திரட்டு (Cœur innombrable) நல்ல வரவேற்பைப் பெற்றது. இவருடைய இயற்கை காட்சி வருணனைகளில் சூரியனுக்கு அதிக இடம் உண்டு. சூரிய வெப்பம், மரம் செடி கொடிகளை மட்டுமன்றி மனிதனையும் வாழவைக்கிறது எனும் (நம் நாட்டுத்)தத்துவ சிந்தனைகள் இவருடைய கவிதைகளில் தொனிக்கும். வாழ்ந்த காலத்திலேயே மிகப்பெரிய புகழும் அங்கீகாரமும், அரசாங்க விருதுகளும் இக்கவிதாயினிக்குக் கிடைத்தன.



25 GUILLAUME APOLLINAIRE கிய்யோம் அப்பொலினேர் (1880 - 1918)

ரோம் நகரில் பிறந்து, நாடோடி வாழ்க்கையில் தம் இளமைப் பருவத்தைக் கழித்தவர் அப்பொலினேர். காதல் தோல்வி இவர் மனதில் ஒரு தீராத கசப்புணர்வை ஏற்படுத்தியது இவர் கவிதைகளில் Cubism ஓவிய முறையின் தாக்கத்தைக் காணலாம். நகர்ப்புற காட்சி வருணனைகளைத்தம் கவிதையில் இடம் பெறச் செய்தவர் அப்பொலினேர், (ஆகாய விமானம், ஈஃபல் கோபுரம், மின்சாரக்கம்பங்கள் இன்ன பிற....) கவிதைகளில் கால்புள்ளி, அரைப்புள்ளி, முதலியவை இல்லாமல் எழுதுவது இவரது பாணி. மீநடப்பியல் எனும் சொல்லை முதன் முதலில் உருவாக்கியவர் இவர்தான், இவருடைய கவிதைவரிகள் யாப்பு விதிகளுக்கு அப்பாற்பட்டு இருக்கும். எழுத்துக்களைக் கொண்டு சித்திரம் வரைந்து அதில் கவிதையை வைத்தவர் அப்பொலினேர். 1914 இல், முதல் உலகப்போரில் பங்கு பெற்று படுகாயம் அடைந்த அப்பொலினேர் அப்போர் முடிந்து ஃபிரான்ஸ் நாட்டுக்கு வெற்றி என்ற தகவலைக் கேட்ட பிறகுதான் உயிர் நீத்தார் (1918)

***.